உ

ஓம் சரவணபவாய மங்களம்

குரங்கணியூர்

# முத்தாரம்மன்பேரில்

## வில்லடிப்பாட்டு

192
413



OFFICE OF THE REGISTRAR OF B
REGISTERED
9 - OCT 1913
MADRAS.

இஃது

சிறுத்தொண்டநல்லூர் கிராமம்

மணலூர் மகா-ள-ள-ஸ்ரீ

ஆ. பிச்சைக்கண்ணுப் புலவரவர்களால்

இயற்றப்பெற்று

ஷையூர்

மு. சுப்பையா நாடாரவர்களால்

மதுரை

திண்டுக்கல் ரோட், மகமதியன் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1913.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
8 OCT 1913
MADRAS

உ

முருகன் துணை.

# முத்தாரம்மன் பேரில்

## வில்லடிப்பாட்டு.

### காப்பு.

அயனுடன் மாலுந்தேடி அன்புடன் காணாநின்ற
நயனமூன் றுடையவேத விநாயகன் றன்னைப்போற்றி
உயர்தனக் குன்றுளீன்ற உரைமூவர் கதையைப்பாட
கயகரி முகத்தின்வேத விநாயகன் காப்பதாமே.

மாட்டிலே யேறுமீசன் வரத்தினா லிங்கம்வாங்கி
கோட்டெனுங் குயத்தாளீன்ற குமூர்த னாதித்தன்நீலன்
கேட்டதோர் படியினாலே கிருபையதவங் கள்பெற்றுமுக்
காட்டிலே கோட்டை யிட்டக் காரிகை கதைசொல்வேனே

### கதையின் வரலாறு.

உலகுதனி லொன்றாக நின்றமாதாவே
உட்பொருளும் நல்லதொரு முத்துமாலையம்மா
விரவிநெறி யுன்னுடைய பிறவிநெறி பாட
வேளையம்மா அடியேனின் நாவிலுறை தாயே
நாவிலுறை சரசுவதி நல்லவளு நீயே
நஞ்சுண்ட வரனோடே வாதாடி வருவாய்
வாதாடி வாதாடி வந்தவளு நீயே
மன்னு தமிழான பஞ்சுடூரு நீயே

வாயிலே வந்தங் குதித்தவளும் நீயே
வீரமகள் கலைமகள் புவிமகளுநீயே
வித்தைதந் தெப்பொழுதும் ஆளுவது நீயே
ஆளுவது நீயல்லோ அம்மன் முத்தாளே
அடியேனு முன்னுடைய கதைபாட லுற்றேன்
சீரான புகழ்முத்து மாலை மாதாவே
செந்தமிழ் கல்விஞானந் தந்தருள் வாய்தாயே
வந்தருள்வா யென்றாயே வயிரவனு நீயே
வழுகாம லேசிந்து வட்டமுந் தருவாய்
நழுவாத வில்லினிசை நல்லவிசை பாட
நல்லமுத்தா ரம்மன் கதைபாட லுற்றேன்

---

## வேறு

முத்துமாலை யம்மன்கதைபடிக்க முக்கணனார் துணையாமே
சித்துமாலை குழலாட்கதை சேர்ந்தடியேன் பாடுதற்கு
புத்திமிகத் தந்தருள்வாய் போரானை முகத்தோனே
ஒங்குசம்பு தீவுக்கப்பா லொன்றாங் கடலுவற் கடலாம்
காங்குசமா கரைத்தீவிற் கரும்புக்கட லிரண்டாங்கடல்
முதியகுஞ்ச தீவதிலே மூன்றாங்கடல் நெய்க்கடலாம்
நதியகுஞ்சத் தீவதிலே நாலாங்கடல்த் தயிர்க்கடலாம்
ஆடியமால் பள்ளிகொள்ளு மைந்தாங்கடற் றிருப்பாற்கடலாம்
ாடியதோர் மேதகத்தில் நல்லதண்ணீ ராறாங்கடலாம்
இத்தனையுஞ் சூழ்ந்திருக்கு மேழாங்கடற் பெருங்கடலாம்
வாய்த்தசுனை ப்பூமியிலே வளர்ந்திருக்கு மிருட்டுநாடு
இருட்டுக் கொருபுறமா யேத்த சுனைப் பூமியுண்டு
பருத்தசுனை பூமியிலே பளிங்குமலைதான் வளர
பளிங்குமலை தன்னருகே படர்ந்தமரகதப் பாதையுண்டு
களங்கமில்லாப் பாதையிலே கமலையென்ற திருச்சுனையாம்
வருத்தமில்லாச் சுனையருகே மாணிக்கப் புற்றெழும்ப
மாணிக்க புற்றதிலே வாசகமா நாகமுண்டாம்
ஆணிப்பொன் பாம்பெனவே யமுதகல சம்பிறக்க
அமுத கலசந்தனை ஆதிமுனி வந்துகண்டான்

தமது திருவ ருளாலே தாமெடுத்தங் கேதுசொல்வாள்
கஞ்சிருக்கும் பாம்புக்கிறை நல்லமுத கலசமிது
செஞ்சொல்வளர் முனிவருக்குந் தேவருக்கு மாகாது
அஞ்சேலென்ற மந்திரத்தை யாதிமுனி யுருவேத்த
பிஞ்சுமதி தனைப்போலே பிறந்தார்க ளரக்கியர்கள்
அரக்கியர்கள் தான்பிறக்க ஆதிமுனி போய்மறைந்தார்
நீலிநீலியென் றொருத்தி நீலகண்டி யென்றொருத்தி
காளிகாளியென் றொருத்தி காளாஸ்திரி யென்றொருத்தி
யேழுல குருக் குசத்தியென்றவர்கள் தான்பிறக்க
மடியாமலே சிறந்த வன வாசகருங் காட்டில்
கடுகவந்த அரக்கியர்கள் காட்டிலே போய்மறைந்தார்
நாடுகின்ற ஆடவர்கள் நமக்கினி மேலாகாது
பேடிகள்போ லிருந்தாலும் பிள்ளைகள் மேலாசையுண்டு
ஆசையுள்ள பிள்ளை நமக் கார்தருவாரரக்கியரே
ஈஸ்பரியே யல்லாது யினியொருவர் தரமாட்டார்
தவசிருந்தாற் பிள்ளையது தருவார் நமக்கெனவே
அவகுணத்தை விட்டவர்க ளடவியிற்போய் தவசிருந்தார்
காத்தடித்து மண்மூடி கரையான்புத்தெழும்பிடுமாம்
ஏத்தமுள்ள செவியிடத்தி லெறும்புகள்போய்குடியிருக்கும்
மூக்கோடே முளைத்தபுல்லு முதுசெவியில் கொடிவீச
வாக்குடைய முதுகுதனில் வடவால்போய் விழுதூண
துண்டமரக் கட்டையென்றே சேர்ந்துரசும் புலிகடுவாய்
கொண்டையிலே சிறுகுருவி கூடுகட்டி முட்டையிடும்
அரக்கியர்கள் தவமிருக்க அருந்துமை யாளேதுசொல்வாள்
இரக்கமில்லை யோசிவனே யென்னைப்போல் பெண்ணல்லவோ
பூமிதனிற் பெண்பிறந்தோர் பொல்லாப்பு செய்வதுண்டோ
தாமதமா யிப்படிநீர் சாதிப்பா யிருப்பானேன்
கள்ளமில்லை யரக்கியர்கள் கற்புடைய பெண்களையா
பிள்ளைக்கே தவமிருந்தார் பெருமானே யென்றுரைத்தார்
ஆடவர்க ளில்லாம லரியபிள்ளை கிடைத்திடுமோ
நாடதனில் நீயறிய நடந்ததுண்டோ யிப்படிக்கு
பார்வதியே நம்மாலே பாலகனை கொடுக்கறிது
சார்புடைய வுயர்ந்தமலை சத்திமுனி யொருவனுண்டு

# முத்தாரம்மன் பேரில் வில்லடிப் பாட்டு.

சத்திமுனிகிட்டச்சென்றால் சந்ததியைக்கொடுத்திடுவான்
புத்திசொன்னே னவரிடத்திற் போமெனவே விடைகொடுத்தார்
சத்திமுனி வருவதற்குத் தவமிருந்தா ரரக்கியர்கள்
தவம் புரிந்திட தெய்வ சத்திமுனியவர் தாமறிந்து
சிவனேவல் தட்டாமலினி செல்லவேணும் தவம்பார்ப்பதற்கு
எனவேமலையை விட்டுகாட்டிலே காந்தமாக யெழுந்தருளி
கனமாத் தவசு பண்ணி நிற்க கண்டு மகிழ்ந்து வரங்கொடுக்க
சென்றார்தவ முனியைவலஞ் சேவித் தரக்கியர்பாவிக்கவே
குன்றாதரக்கியர்கள் அருகிருத்தி கும்பிட்டுநீறுகுழம்பூசி
தாங்காதவ முனியேநீர் தாமுமெனக்குதகப்பனல்லோவோ
நாங்களுமக்குப்பிள்ளையென்றால்யெங்களுக்கும்பிள்ளைவேண்டாமோ
வாரீர்மடந்தையரேமுன் வயிற்றுபசிமெத்தயெங்களுக்கு
தாரீரமுதெனக்குபின் சந்ததியாக்கிநீர்தந்திடுவீர்
கலியாணமுடியாதியிளங் கன்னியராகவமைத்திடுங்கோ
நலியாத்தவசிமுன்னேநல்லதென்றேபெண்கள்சொல்லிக்கொண்டு
சமைத்தாரமுதுகறிபெண்கள் சத்திமுனிக்கொருபுத்திசொன்னார்
தமக்குமனம்பெறவேயுண்ண கிலேசகலமுமில்லை
நிலத்தைமெழுகியவர்நின்றுகறி சோறுதான்படைத்தார்
உகந்தகறிசோறுதிரைக்குள் ளேயிருந்துவமுதுசெய்தார்
பாவத்திரகைவிளக்கிபெண்கள் பாரமுந்பூரபசியுந்தீர
எழுந்தேவடமுகமாய் சென்றிருந்தோருவேள்விமட்டும்
செழுந்தெய்வவேள்வியிலே சிறந்தபரல்மூன்றுபிறந்தார்
மூன்றுபரலையெடுத் தவன்சத்திமுனிவன்
மொய்குழலந்த அரக்கியர்முன்பிலேசென்றார்
என்றுபத்துமாதந்தான் சுமந்துபெற்றெடாமல்
இன்றைக்குப்பெற்றீரே யிச்சைபட்டிடாமல்நீங்கள்
மாப்பிள்ளையில்லா மக்களேயிந்தம்பரலை
வாங்குவீரென்றேமங்கையர் கையிலேவைத்தார்
கூப்பிட்டுமூபேருந் தாப்பிரியமாகவேகூடி
கொண்டைக்குநீலங் குமுர்தப்பூச்சரியகந்தம்
இப்படிபூக்களை சூடிபரலைவிழுங்க
இங்குரிஷிகெற்பந் தங்காமல்தாவிவிழவே
குப்பமாநீலன்குமுர்த ஞாதித்தனெனவே
கோலக்குழந்தைகளாகப் பிறந்தனர்சேர

தாழ்வில்லாஆதிமுனியர் தங்களைநோக்கி
தப்பிலாமூபேர்க்குமுப்புராதியென்றுபேரிட்டார்
வாள்வீரபத்திரவ யிரவநாதனெனவே
வையகமீதிங்கள் தெய்வமென்றேசொல்லிப்போனார்
ஆண்பிள்ளையில்லாமல் ஆண்பிள்ளைபெற்றானெனவே
அந்தரக்கன்னிமார் வந்துகுலவையுமிட்டாள்
தாண்டியகீர்த்தியரக்கி யாமுப்புராதிக்கு
சாற்றுதிருநீற்றுக்காப்பு மணிந்தேதுசொல்வார்
பாலைக்கொடுத்துப் பசியைஅமத்திடவென்று
பச்சைக்கிழந்தைதன் யெச்சிதனத்தில்படுமே
வாலைப்பிராயம் வராதகுழந்தையென்றாலும்
வட்டத்தனங்களை கட்டிப்பிடித்துத்தொடுமே
மட்டுத்தப்பிப்போனால் கற்புத்தப்பிப்போமெனவே
மண்ணிற்கிடத்தியரக்கியர் காட்டில்மறைந்தார்
பட்டாயகத்தில் தட்டதனியேகுழந்தை
பாலுக்குவேண்டிப் பசியாலழத்தொடுத்தார்
நீலனழுத நெடுங்குரலோசையினாலே
நின்றசனங்களுஞ் சிங்கந்தான்பயந்தோட
ஆதித்தன்துள்ளியழுத சிறுகுரலோசையினாலே
ஆண்டர்கைலையரனார் திருச்செவிகேட்டார்
ஓதுவயதுள்ள நந்திதேவர்கடற்கப்பால்
ஓயாதுபிள்ளை கெட்டோலமிடுங்குரலோசை
பேயன்போற்கொஞ்சபுத்தியைக் கொண்டந்தப்பெண்கள்
பெற்றபிள்ளைதொட்டாற் கற்பழியுமென்றுபோனார்
தாயில்லாப்பிள்ளை சனுத்தழுதகுரல்க்கேட்டு
தக்கபசியையமத்துவதே தர்மமென்று
ஏவலைக்காட்டியே நந்தியுங்காட்டிலேசென்றார்
இந்தாகிடக்குது சந்ததியென்றுபோய்கண்டார்
பாவனையாகிய முப்புராதிதங்களுக்கு
பாலுகொடுக்கப் பசுவொன்றுதானழைத்தாராம்
சுரபிசிந்தாமணியெனவே சொல்லுகின்றதெய்வம்
ஒருதனம்விட்டொருதனத்தில் ஒருகோட்டைப்பால்கொடுத்தும்
நீலன்முப்புராதியர்க்கு நிறைந்ததில்லையேவயிறு

ஸ்ரீ

# முத்தாரம்மன் பேரில் வில்லடிப் பாட்டு.

உழத்துவதும்அழுவது மொருநாளுந்திரவில்லை
சனத்தினிசைபோட்டிருந்தால் தம்பிரானுக்கேறுது
செழித்தநந்திதேவருந்தான் றெய்வப்பெண்ணிடத்திற்சென்று
அந்தரத்துக்கன்னியர்க ளாடுகின்றசுனையருகே
வந்துநின்றுநந்திதேவர்மங்கையருக்கேதுசொல்வார்
பிடிபோலுமரக்கியர்கள் பிள்ளையைப்போட்டோடிவிட்டார்
இடைவழியிற்றள்ளிவிட்டா லிழுக்கல்லோயென்றனுக்கு
பாவையரேநீங்களிந்தப் பாலகரைத்தான்வளர்த்தால்
பூவையரேயுங்களுக்கு புண்ணியாங்காணென்றுரைத்தார்
காதமலைக்காவலிலே நந்திதேவரெங்களுக்கு
காதவழிகாண்முகங்கள் கண்டாலுமாகாது
செவியிற்சொற்கேட்டாலுந் தீர்த்தம்போயாடிடுவோம்
புவியிலாடவரைக்கண்டால் போவோமலையேக
காட்டிலாண்பிள்ளைகளை கண்டாலும்பாவமுண்டு
மாட்டோமென்றுசொன்னாலு மனக்குறைகளுண்டுமக்கு
ஒருவர்முகம்ஒருவருக்கு உண்மையுடன்றெரியாமல்
இருட்காலமானதுண்டா லிருப்போம்பிள்ளைகிட்ட
பகற்காலம்வரும்போது பறந்திடுவோமந்தரத்தில்
தகுதியுடனிப்படிக்குச் சம்மதியோ தாருமென்றார்
வாழுமொருராத்திரியில் வளராதுபிள்ளையென்றார்
ஏழுவருடத்தை யொருராத்திரியாய்ச்சாபமிட்டார்
சாபமிட்டுநந்திதேவர் சந்ததியைக்கைகொடுத்தார்
முப்புராதியைக்கொடுக்க மொய்குழல்மார்வாங்குவாராம்
செப்புப்போற்குயங்களது திரளுதடம்பாலூரி
மடமடென்றுகொங்கையிற்பால்மகா தாரைபோற்சுரக்க
கடைவயிறுதான்நிமிற கண்திறந்துபாயுதடா
உலர்ந்தஉடல்தானிமிர்ந்து உடம்பெல்லாந்தளதளென
தலந்தனிலேகிடந்திருந்து தவழ்ந்துமெள்ளவிளையாடி
நடந்தோடும்பக்குவத்தில் நடுங்குதல்லோதேவருக்கு
இடம்பெரவேநந்திதேவ ரிட்டநாளெல்லையிலே
வேறொருவர்க்கில்லாத முடிவுகாலமுண்டாச்சு
மாறில்லாக்கன்னியர்கள் மறைந்தார்களந்தரத்தில்
அந்ரசுத்திலவர்போக வறிந்துநந்திகிட்டவந்து

பிள்ளைமுப்புராங்கட்கு பிழைப்பதற்குபுத்திசொல்லி
தள்ளரியசிவனிடத்திற் சந்திக்கப்பண்ணவென்று
குன்றுவெள்ளிக்கைலையிலே கூட்டியேகொடுபோனார்
மணித்துமயில்த்திருக்கதவின் வாசலிலேசெல்கையிலே
திருக்கூட்டந்தனிலிருந்து தேவரெலாமேதுசொல்வார்
கருக்கூடவொட்டான்காண் கருவறுப்பான்முப்புராதி
உருக்கூடவொட்டான்காண் வுலகமெல்லாந்தானெரிப்பான்
கூற்றுவனையெங்கள் முன்னேகொண்டுவந்தீர்நந்திதேவா
சாற்றக்கேளட்டமத்துச் சனியல்லோதேவருக்கு
சண்டாளபிள்ளைகளை தலைதிருகிகொல்லாமல்
பண்டவினையேகெடுவீர் பாம்புக்குப்பால்வார்த்தீரே
நந்தியுடபொருட்டாலே நாங்கள்குடிபோரோமென்றார்
வந்தியுடன்கைலையிற்போய் வாசலிலேபோய்ச்சேர்ந்தார்
வாசலடைபட்டது வந்தமுப்புராதிகளை
கூசாமல்மீண்டுகொண்டா ரக்காட்டில்
சொல்லரியமுப்புராதி சோதிநந்திதேவருடன்
வில்வமரத்தருகாக வீற்றிருந்தங்கேதுசொல்வார்
தாயில்லாதேயிருந்தோம் தகப்பனைப்போலேவளத்தீர்
நீயொருவனில்லாவிட்டால் நீலனென்றுபேருமில்லை
தேவர்சொன்னவார்த்தையது செத்தாலுந்தீராது
ஆவியுடனிருந்ததுண்டாலது விபரந்தீர்த்திடுவேன்
அரனெனவுஞ்சிவனெவும் ஆயிரம்பேரிருந்தாலும்
ஒருவருக்குமச்சமில்லை உந்தனுக்கேப்பயப்படுவேன்
காடெல்லாம்நாடாகக் காண்பேனுன்புண்ணியத்தால்
வாடாமலெங்களையும்வலுவோடேவைத்திடுவாய்
வலிவோடேவைக்காவிட்டால் வளர்த்தவிடங்காணாது
அழகுடையமுப்புராதி ஆண்பருவமாக்கியுன்னை
இடைவழியிற்றள்ளிவிட்டா லிழுக்கல்லோயென்றனக்கு
காட்டமுள்ளகைலையிலே நான்சென்றுவருமளவும்
காட்டிலினிமேலுமொரு காரணந்தான்நடக்குமென்றார்
காரணந்தான்நடக்குமென்று காட்டிலேதானிருத்தி
பூரணமாய்நந்திதேவர் பொற்கைலைமேற்போனார்

வேறு

நந்திதேவர் கைலையிற்போகவே
நல்வயிரவ நாதன்குமுர்தனும்
விந்தையாகிய வில்வமரத்தின்கீழ்
வீற்றிருக்கின்ற வேளைதனிலே
சத்திமாமுனிமுத்திபெரும்படி    தாழ்வில்லாதொருவேள்விமூட்டி
பன்னிரண்டு கடந்நந்தவேள்விக்கு    னார்
பதின்மூன்று வருடம்பிறந்திட
உன்னிவேள்விபுகைக் கொடியோடியே
உம்பர்லோகத்தை யூடுரமுட்டியே
எட்டுமாமலையுங் கடலேழையும்
ஈரேழு பதினாலுலோகமும்
சட்டமான புகைபடலத்தினால்
சந்திரசூரியர்தன் னொளிபோச்சுதாம்
தெள்ளியீஸ்பரன் வெள்ளிமலையிலே
சேரத்தேவ ரரிக்கையிட்டார்கள்
மெள்ளயீஸ்பரன் பார்வதியைச்சென்று
விலக்குவாவென்று வேல்விடைவாங்கினார்
மட்டில்லாத புகையைத்தணியென்றே
வார்த்தைக்கேவொருதேர் தட்டின்மேற்கொண்டாள்
கொட்டினார்கெட்டி கட்டியங்கூறினார்
கும்பிபாடி குறவையிட்டாடினார்
தட்டிவாளை தடவியிடக்கயம் சந்திரகுடையுடன்தாக்கினார்
ஏழுகோடி யிடாகினிசூழவே
எடுபிடியென்று கிடுபிடிகொட்டினார்
தாளிவாய்ப் பறைபேரிதடாரியும்
தம்பட்டஞ்சின்னம் தாம்ளமுழக்கினார்
கோடிகோடி பசாசுகுதிததிட
கெள்ளிவாய்த் திரிசூலஞ்சுமந்திட
மூடிகொண்ட யிருமலங்காரத்தை
முக்கண்ணாலே விழித்துக்கண்ணே[illegible]னார்
விளக்குகண்டயிருளதுபோலவே
வேள்வியின்புகை தான்வெளியாகவே
முழக்கமிக்கி முருக்கியகோபமற்றால்

முத்துபோல்வந்து வேர்வைததும்புதாம்
மேனிவேர்வையை கைகொண்டுவாரியே
வேள்விமீதினில் விட்டெரிந்தாளம்மன்
மோனவேர்வையி னுதாரமாகவே
முத்துநாயகி வந்துபிறத்தனள்

---

## வேறு

முத்துமாலையுலகளந்தாள் மூன்றுமுகங்கொண்டவள்தான்
மூப்புடையபேச்சியம்மன் பூப்படைக்கிருந்தவளும்
புத்தூரைத்தாத்தரித்தாள் சித்தூரைக்காத்தவளும்
பூதத்தின்மேலேறிக்கொண்டு சாதிக்கின்றநாச்சியரும்
கலகந்தழுகிவரு முலகளந்தாளுடனே
கங்காளபேச்சியுடன் வங்காளக்காச்சக்காரி
புலவர்புகழுகின்ற பெரியமாதாவுடனே
பொருதிட்டவரை வேட்டிலிருந்திட்டமாரியம்மன்
கிளிமுத்தமிடுகின்ற மணிமுத்துமாலையம்மன்
கிள்ளைபோலவேவரும் வள்ளிப்பிள்ளைமாதாவே
கொழுத்திடும்நலக்காரி கோளிக்காரிகாணிக்காரி
அலட்டிப்பழக்கமிட்டமலட்டாட்டுப்பூசைக்காரி
அன்னம்பிள்ளைபோல்நடந்த சின்னப்பிள்ளைமாதாவும்
கலத்தில்பிள்ளையருந்த யிரத்தபிலக்காரி
காசிவடகாசியூரை காத்திருந்தகருப்பாயி
எண்ணெயுண்டு சிப்புமிட்டு யிச்சையுள்ளநாச்சியாரும்
இனக்காரியாயிருக்கும் அனற்காரியம்மையுடன்
வெண்ணனூர்வீதியுடன் கண்ணனூர்மாரியம்மன்
வினையையருக்ககவந்தபனையூருபுண்ணியவாட்டி
ஈளத்துப்பெண்ணென மலையாளத்துகண்ணுவியம்மன்
எறுமைக்கிடாவிலேறும் சொரிமுத்துமாலையம்மன்
முப்புரங்கள்காத்திருக்கும் கைப்பிரம்புக்காரியுடன்
மூலைக்குள் பொன்னேலைக்காரி முப்புராதி மாதாவும்
செப்படிவித்தை படித்த சப்பாதி தேர்க்காரியுடன்
சீதளம் பூபரிய செல்வி மாதழம்பூ நிரத்தாளும்

வேப்பங்குளைகாரியுடன் வேலுபிள்ளை பினமாலை
மேட்டிக்காரர் கோட்டி தீர்த்த சாட்டிக்காரிதான்பிறந்தாள்
தோப்பு வெள்ளைக்காப்புக்காரி துரைமுகத்து நாச்சியாரும்
துஷ்டருக்கு வல்லிரும்பு கிட்டியிட்ட சுந்தரியாள்
கரும்புடன் சர்க்கரை பெரும்பூசைக்காரியோடே
காலபூசையிட்டதிரி சூலக்காரி தான்பிறந்தாள்
மலைக்கன்னியாருடனே யுளகளந்தாள் பிறக்க
ஹிசையுடனே பெண்கள் குறவைபாடினார்கள்.

---

## வேறு.

உலகளந்தவள் மகாவரந் தருகவி விளங்கு சரணாரவிந்த
பொன்னுடை முதந்த சிறுநடைச் சிலம்பினொலி
உலகத்தில் நடந்திடு மாங்கலக வெங்கணுடையாள்
நெடுஞ்சுடரிலங்கு செஞ்சடையினாள்
துடர்ந்தெரி காலச்சக்கர விசால உக்கிரமகபாலி
சிவகாமி சொரிமுத்துமலர் மடைந்தை மகமாயி
தொண்டர்கள் கிளைவளம் பெருக வாழ்வுதந்தவள்
மகுடர் கிம்புருடர் பொருதர் பொங்கிலிகர் மலர்பதம்
பணியும் வரமகல்யாணி நிலமடங்கலும்
மகசுகம்பெற வெகுவரந்தருவாள் சவுந்தரநித்திய
காரணி விஸ்தாரகாரணி யென்வசத்துவா சொரிமுத்துமாலையே.

---

## வேறு.

வேதமுத்துமாலையம்மன் வேள்வியிற் பிறக்க
விண்ணு மண்ணுமுள்ள பெண்கள் வெண்குறவைபாட
ஆதிமுனி கைலாச பேரருளி
ஆனாரிடத்திருந்த மகமாயிதானும்
உலகளந்தாள் பேச்சிமுத்து மாலை சொரிமுத்தாள்
உத்தமி யென் பார்வதியாள் முத்தம்மை தனக்கு
இலகுதங்க சீப்பினாலே தலைமயிரை முடித்து
எல்லைக்குளாரனெனவே முல்லைப்பூவைச்சூட்டி

ஓங்குமுச்சி கொண்டையிலே தூங்குகுச்சிதூக்கி
ஒப்பினைத் திருமுகங்கள் பொற்பிரகாசம்போலே
தாங்குபச்சை பொட்டருகே சந்தனப்பொட்டிடவே
தம்பிராட்டி பெரியமாதா யெம்பிராட்டி தன்னை
அஞ்சனஞ்சமான்விழி அஞ்சனத்தைத்தீட்டி
அபிராமி காதிலிரண்டு ஆடுகொப்புத்தூக்கி
குஞ்சரத்தின் மீதிலிட்ட பஞ்சுசேனம் போலே
கொச்சிமஞ்சளிட்ட தனக்கச்சிருகக்கட்டி
சங்குவளைப் பச்சைவளைத் தங்கவளை பூட்டி
தணியாது கைவிரலுக் கணையாழி பூட்டி
தொங்கலொடு சுட்டிதூக்கி செங்கமலஞ்சாத்தி
சூடகஞ்சிலம்பு தண்டை பாடகமுஞ் சூட்டி
கொத்துமாலை பூண்டபணி முத்துமாலை தன்னை
கோலஞ்செய்து பார்வதியாள் வாலரூபமாக்கி
வித்தகமா யிப்புதுமை வேறேயில்லை யென்று
வீரபரமேஸ்பரியாள் விண்ணப்பஞ் செய்வாளாம்.

---

## வேறு.

அஞ்சாதே யென்றவளை யருகழைத்து தலைதடவி
கொஞ்சமில்லாக் கையிலையிலே கூட்டியேகொடுபோனார்
இலங்குமணி மண்டபத்தி லீஸ்பரனை தெண்டனிட்டு
கலங்காது பார்வதியாள் கரைகண்டற் கேதுரைப்பாள்
புகையமத்தி வருவதற்கு போகவிட்டீர் வேள்வியிலே
தகையுடனே செல்கையிலே சரீரமெல்லாம் வேர்த்திடுமாம்
வேர்வைதன்னைத் தான் வழித்து விட்டெறிந்தேன் வேள்வியிலே
மாரியம்மனுலகளந்தாள் மணிமுத்து வந்ததிலே பிறந்தாள்
மங்கையர்கள் பிறந்தபின்பு வனவாசவேள்வியிலே
தங்கமுத்துமாலைதன்னை சந்திக்கக் கூட்டிவந்தேன்
அருநீலன் குமூர்தனென்றும் ஆதித்தன் முப்புராதி
தனியுதவி யில்லாமல் தனியேபோயிருக்குகிறார்
அக்காட்டில் வீற்றிருக்கு மவர்களுக்கு தெய்வமென்று
முக்காட்டிலுலகளந்தாள் முத்தாரை அனுப்பிடுவீர்
செப்பமுள்ள பார்வதிக்கு சிவனாருமேதுசொல்வார்

எப்படி நீர் சொன்னாலு மெனக்கதுவே வுத்தாரம்
வனமில்லா வுலகளந்தாள் மணிமுத்துமாலைதன்னை
நம்முடைய சத்தியென்று நாலுலகமறியாதோ
எங்கேபோயிருந்தாலு மெள்ளளவுங் குற்றமில்லை
அங்கேயான் விடும்போது அரைச்சணமுந் தறுகாதே
புத்திசொல்லி மாதாவை போகவிட்டாரக்காட்டில்
கொற்றவனெங்கள் வயிரவநாதன் கூடவழி கொண்டனராம்.

---

## வேறு.

ஏறினார்பெண்க ளிந்திரவிமானத்தில்
இருபதுவண்டிதே ரொன்றி லேறினார்
மாறில்லாததோராக வேதாளமும்
விலங்குகேட்க தாங்கியாயுதமும்
சாதிலிங்கத்தினாலே சமைப்பித்த
சப்பரமிருநூறு நடக்குதாம்
தாதிமார்களிடமாகினி யோகினி
தையலார் டாக்கர்தானொருகோடியாம்
பிரமனார்தலையோட்டிலே தோல்கட்டி
பின்னொருபிடி போடுதாம் பேய்ப்படை
மரகதப்பச்சை வர்ணத்தேராயிரம்
முத்துக்கும்பம் பதித்த தேராயிரம்
முக்கியவெள்ளி தங்கத்தேராயிரம்
கொத்துத் தடிகை பல்லக்கோ ராயிரமாம்
கோலாகலவண்டி யீராயிரமாம்
வெள்ளைப்பால் கட்டல் தண்ணீரைவாரியே
மேகராசி கொடுவந்து தூவுதாம்
கொள்ளிவாய்ப்படை பந்தம்பிடிக்கவே
குட்டிபூதம்தீ வெட்டி கொழுத்தவே
நடுவழியிலிருக்குமலைகளை
நகட்டிப்பூதங்கள் தூக்கியப்பால்வைக்க
கடகடென்று கிடுபிடிகம்புக்காய்
கரும்பனையைப் பிழக்குதாம் பூதங்கள்
ஒட்டகத்தைச் சுமந்தொரு நெட்டப்பேய்

ஓடி யானைமுதுகினிலேறவே
திட்டுப்பாம்பை கடிவாளமாக்கியே
சிங்கமேற்கொண்டார் தங்கமுத்தாரம்மன்
மூக்கரைப் பேய்க்கு மூளிப்பேயாடவே
முட்டிக்கால் தட்டி பூதங்கெட்டி யென்றேசொல்ல
தாக்கு தாக்கெனதேரைக்கடாவினள்
தலம்விளங்கு மூலகளந்தாளம்மை
முன்விளங்கிய வெற்றி முரசுதான்
முப்புராதி செவியிலே கேட்டுதாம்
என்னகாலவிசேடமிருக்குதோ
எனவயிரவநாதன் வருகிறான்
தேரிக்கண்ணனூர் மாரியிங்கேவந்தாள்
சிரித்த தேவரமுவது திட்டந்தான்
வாரமாய் வீரபத்திரனைக் கண்டேன்
வந்துதோநல்ல வாழ்வுநமக்கென
தேவிமுத்தாள் துணையாக வந்திட்டாள்
சிவனுக்கு யினிமேல் செய்தி சொல்லலாம்
மூவுலகு நமக்கினி யாளலாம்
முட்டிலே சொட்டுப் போட்ட முப்புராதி
முப்புராதியும் நீலன் குமுர்தனும்
முந்திச் சென்றெதிரே சந்தித்தராகமாம்
இப்படித்தானிருந்த மரத்தின் கீழ்
ரத்த வுலகளந்தாளை யிருத்தினர்.

---

## வேறு

மரத்தருகேநிற்கையிலே வளங்குமுப்புராதிசொல்வான்
திருத்தமுள்ளபேச்சியம்மாசீர் பெரியமாதாவே
தந்தையில்லைபெற்றெடுத்த தாயுமில்லையெங்களுக்கு
நந்தியுடபொருட்டாலே நானெனவேதலையெடுத்தோம்
யெண்ணமுள்ளதேவருக்கு மெங்களுக்குமாகாது
புண்யவதிநீயொருத்தி போதாதோயெங்களுக்கு
வேத்திரஞ்சூழ்முக்காட்டில் வெளிதனிலேயிருப்பதல்ல

கோத்திரமாகுடியிருக்க கோட்டைபோடவேணுமென்றான்
கோட்டையிடவேணுமென்று கூட்டிவந்தான்சோதிரியை
வாட்டமில்லாவுலகளந்தாள் மணிமுத்தாள்வீற்றிருக்க
முக்காட்டிற்கோட்டையிட முகூர்த்தமிடுசோதிரியே
மிக்காகபஞ்சாங்க வேதியனார்பரல்நிறைத்து
சொன்னாரேபஞ்சாங்கஞ் சோதிரிதன்சாஸ்திரத்தை
பொன்னாலேகோட்டையிட்டு புதுமையுடன்வாழ்ந்திருக்க
மன்னவனேயைம்பத்தெட்டு வருடமட்டுமழியாது
கூன்கிழவனாண்டி தன்னால்கோட்டையெல்லாமழிந்துவிடும்
தான்றெளிந்தசோதிரி தன்சாஸ்திரத்தைக்கேட்டபின்பு
அன்பத்தெட்டுவருடமட்டும் ஆண்டிருந்தாற்போதாதோ
வென்றியொருநாளையிலே வேண்டியகாரியங்கொள்ளலாம்
இந்திரனைவேலைகொள்ள யெத்தனைநாள்மெத்தமெத்த
சட்டமுள்ளமுப்புராதி யேத்தவயிரவநாதன்
கொட்டையிடதலங்குறித்து குறவையிட்டார்பெண்கொடிமார்

---

வேறு

வேதவயிரவநாதன் முப்புராதி
வேட்டைக்காட்டிலே கோட்டைபோடவே
மோதுதானையும் பூதசேனையும்
மூன்றுகாட்டையும் வெட்டயேவினான்
வெள்ளச்சங்கிலி கள்ளகிங்கிலியர்
வெட்டிதம்பட்டந் தட்டிக்கொட்டினார்
கள்ளிவெள்வியை தளளித்தூரவே
காரைமேற் படைசூரப்பாலையும்
தாக்கிக்காட்டிலே தீக்கொழுத்தினார்
தரணியீந்திடு முலகளந்தவள்
காக்கையும் புக்ககாடுவேரா
கடுகவெட்டென்றே படையையேவினாள்
மொட்டப்பூதங்கள் கட்டைதோண்டப்போய்
முடவிகொள்ளி வாய்கவடிபாடவே
பிட்டிநோகவே தட்டிகாட்டினார்
பிரக்காலரைந்து கூட்டினார்

பணத்தைக்காத்த சப்பாணிபேய்களும்
பட்டமிகொப்பிலே கட்டிதூக்கினார்
கணக்கில்லாததோர் திரவியங்களை
கற்பமாமுத்தாள் காலில்வைக்கவே
பத்தையுமலை பொத்தையுதட்டி
பரவியங்கங்கே பலகைவைத்தனள்
புத்துக்கூட்டங்கள் கட்டிகட்டியாய்
பொடிபடும்படி புழுதியாக்கினார்
நாலுமூலைக்கும் யெல்லைகநாட்டியே
நாற்பத்தஞ்சு நூறானயோசனை
நீலனாதித்தன் முப்புராதியும்
நொடியதோரணக் கொடியுங்கட்டினார்
ஆகமாகவே யுலகளந்தவள்
அல்லதோதலம் நல்லதோவென
பார்க்கவேண்டிய பெரியமாதாவும்
பல்லக்கேறியே பவனிவந்தனள்.

OFFICE OF THE REGISTRAR OF
REGISTERED
MADRAS

---

## வேறு.

பவனிவருகிறாள்காண் கோட்டைமெய்க்கபவனிவருகிறாள்காண் பவனிவருகிறாள்காண் உலகளந்தாளம்மன்பவனிவருகிறாள்காண். உலகளந்தாளம்மை பாரதபட்டங்களாரவாரத்துடே. அவனியுள்ளோர்தொழ பூதகணங்கள்சூழ. ஆனதேரிலேறியரனே தஞ்சமெனபவனிவருகிறாள்காண். தொந்திமிதோமெனசிலர் முந்தபரதவித்தைமுன்னேசேவிக்கவே. தித்திடமானங்கள்அண்டமிடிபடமடாமென்ன திடலரும்கூந்தல்தோகை தேரிலேபவனிவருகிறாள்காண். காலிற்சிலம்புதண்டைகலீர்கலீரென சேலைசகலாத்துசலார்சலாரென. கோலரமாலைகள் குலாவியுலாவிவர. வாலபராசத்திமடவார்சேவிக்கபவனிவருகிறாள்காண். குப்பப்படைநெருங்க கோதைமாதர்சூழ. முப்புராதியர்கள்முன்னே சேவிக்கவே. செப்புதிருதனத்தான் சின்னப்பிள்ளைமாதா. மெய்யப்பாதொழுதுவரும் மிக்கவுலகளந்தாள். யென்றுமென்றுநன்றாயிரைஞ்சி தொழுதபேரை. துந்துங்கிரும்படக்கும் துஷ்டமனுடரைவென்றுகீர்த்திபெற்றுவரும் குடிவளர்ந்துநீநன்றி குமராலேநாடும்வாழ்கவேபவனிவருகிறாள்.

உலகளந்தாள் பவனிவருகிறாள். வணங்குமடியாரிடம்வந்து கலியைத்தீர்த்து. இணங்கிகுடிவளர்த்து இரட்சித்தருள்வேனென்று மணங்கமழ் பூங்குழலாள் மங்கையுலகளந்தாள். அணங்குந் தோழியருடனானதேரிலேறி. பவனி வருகிறாள்காண். வந்துவுலகளந்தாள் பாரக்கோட்டைதலங்குறித்து. எங்தெந்தசையுலிலே யிட்டிடுவோங்கோட்டையென்றார். மண்ணாலேகோட்டைவைத்தால் மலந்துவிடுங்கோட்டை. முள்ளாலேகோட்டைவைத்தால் முசிறுபத்திகடிக்குமென்றார். செங்கல்லாற்கோட்டைவைத்தால் திருவுளங்கள் நடவாது. கல்லாலேகோட்டைவைத்தால் கட்டிமுகியாதெனவே மரத்தாலேகோட்டைவைத்தால் வாணவெடியுருண்டசையும். முத்துநாயகிதிருவருளால் முத்துக்கோட்டைவந் துதித்திடுமாம். முத்துக்கோட்டைதனைவளைத்து மூன்றுகோட்டைவைக்கிறாள்.

---

## வேறு.

வடக்கருகேகட்டுவது மாடஞ்சிலகூடங்களாம்
தெற்கருகேகட்டுவது திருமஞ்சணகுளப்பரையாம்
ஊமைகுருடுசெவிடுகளை வுள்காவலாகவேவைத்தார்
அந்திபட்டாற்கோட்டைவா சலடைக்கதுறக்கஆளுமிட்டார்
இரக்கியல்லோதிருத்தேரை யேந்திழையாள்உலகமாதா
பிரக்கோட்டைவென்று பேய்ப்படையையேவிவிட்டார்
திட்டமாய்கொள்ளிவாய்கள் செடிபிடிங்கிதீக்கொழுத்த
முட்டிக்கால்பூதமது மூப்பாகிவீற்றிருக்கும்
பெண்ணரசியுலகளந்தாள் பேச்சியம்மைதங்கள்முன்னே
கண்ணில்லாப்பூதமது கவிபாடிக்கொண்டுநிற்க
வயதுசென்றநரைப்பூதம் மடங்கியப்பாற்போய்கிடக்க
தயவுசெவிட்டுப்பூதம் தகைக்கஞ்சிசுமந்துவர
அய்யங்காட்சிபேப்படைகள டிப்புடைக்குமண்சுமக்க
கைமுரிந்தபூதமது காடுசுத்திப்பார்த்துவர
கலகமுடன்சிலபேய்கள் கல்லிடித்துமலையுருட்ட
வலுவில்லாசிலபேய்கள் வாய்சத்தஞ்சொல்லிநிற்க
அடவிமலையெடுத்தவர்க்கு ஆடறுத்துகொடுப்பாரும்
படவுவேலை செய்யாமல் ரெட்டை பங்கெடுக்கவருவானும்
களவுசெய்த பேய்களுக்கு கைசாத்துக்கொடுப்பானும்

சனிபிடித்து குளிராட்டி தான்பிடித்துக்கிடப்பாரும்
ஏணிவைத்துக் கல்லேத்தி யிடத்திலே கல்பரப்பி
கோணலில்லா திருமதில்கள் கொத்தளங்கள் தான்வைத்தார்
கொத்தளமும் மேழரையும் குளல்பரத்தி துளையடித்தார்
உத்தபிரக்கோட்டை வைத்து உள்கோட்டை வைத்துப்போட்டார்
அகலமது நூறுமுளம் அடிக்கோட்டை யிரும்பாலே
நகைபாய்ந்த திருமதிலும் நடுக்கோட்டை வெள்ளியாலே
சடுதியிலே கோலமிடும் தலைக்கோட்டை பொன்னாலே
கொடியுதிர மாமலை கோபுரமா நிருத்துவரும்
மகள் மலைதனையெடுத்து படிப்பலகையாய் போட்டார்
நெரியதோர் வெள்ளிமலை நிலைக்காலாய் நாட்டுவாரும்
தோரணமாமலை பிழந்து சுளிக்குத்திதான் சேர்த்தார்
சவடிமலைதனக்கு சாவடிள்தான் முகித்தார்
குவடுமலைதன்னாலே கூடார பந்தலிட்டார்
தேவர்கள் பிடித்தடைக்க சிறைக்கூட முண்டாக்கி
மூவருக்கு மனம் நடுங்க மூர்சொலிக்கு மண்டபமும்
தாழ்வில்லாயிந்திரனார் சந்திப்புமண்டபமும்
காவலுள்ளதேவருக்கு கணக்கெழுதுமண்டபமும்
கள்ளர்களையடைப்பதற்கு கழுநிறைத்தமண்டபமும்
பள்ளிகொள்ளுமண்டபமும் பகலிருக்குமண்டபமும்
கருமலையைப்பிடிங்கிவந்து கால்விபங்குதுளையடித்தார்
மருவுசிலகொத்தளத்தில் வண்டியிலேகுழலெடுத்து
வழிமறித்தேயாள்பிடித்து மருந்திடிக்குமண்டபமும்
அழிவழக்குத்தான்பேசி யரசிருக்குமண்டபமும்
கடுவாயைச்சங்கிலியில் கட்டிவைக்குமண்டபமும்
அடுகுதிரைகுலையானை அலங்கரிக்குமண்டபமும்
கள்ளமில்லாக்கோட்டையிலே களஞ்சியமுமுண்டாக்கி
கொள்ளையிட்டபணம்போட குலுக்கைகளுமுண்டாக்கி
அத்திராணிமண்டபத்தி னருகிருந்தமுப்புராதி
கொத்துமுத்தாரம்மனுக்கு கோயிலொன்றுகட்டுவனாம்.

---

## வேறு

முன்றுமுகங்கொண்ட சொரிமுத்துமாலையம்மனுக்கு
முத்துமணிமண்டபங்கள் கட்டே
ஊன்றசொரிபொன்மலையையான்ற தச்சினால் சமைத்த
உத்திரத்தூணுக நட்டுவராம்
தூணருகேபாண்டிக்குளிதோண்டி கண்டியிட்டுசிறு
சுட்டிக்கல்லையிட்டு லக்கைதோட்டார்
மாணிக்கமோமே தங்களிடவயிடூரியங்கள்
வரலொளிக்கிலே யிருத்துவாரும்
பண்டுவிளையும் பகளத்துண்டதுண்டமாயருத்து
பள்ளிக்குடத்தாடி மேற்படுத்தார்
மண்டுமரகதச்சோதி தண்டரளமீதுபச்சை
வன்னந்தென்னம் பூபிணைத்துவைத்தார்
வருக்குமிடையிருக்கி முருக்குவளக்கையிட்டு
பளிங்கியால் பட்டியல்பதித்தார்
உருக்குத்தகட்டை வெள்ளியொப்பித்துமணியழித்தி
ஓட்டுக்கென்றே யடுக்குவாராம்
சங்கைமுத்தைதானிடித்து சாட்டம்மியிற்போட்டரைத்து
சாதிலிங்ககாரை பூசுவாராம்
பொங்கியயிரும்புவெள்ளி பொன்னுமெனவேகிரைத்து
பூஞ்சுவரடிப்படையும் போட்டார்
வெள்ளிநிலக் காலிலங்க மேற்படிபொன் ஞற்சமைத்து
வெங்கலக் கதவதி லேபோட்டார்
தள்ளித் தென்றல் காத்துவர சாளர வாசல்வகுத்து
சந்திப்புமண்டபந் தன்னைகண்டார்
முச்சந்தியேமுடி நாலுமூலைபீடமிட்டு
முன்னமே முகப்பத்தியுங்கண்டார்
அச்சந்திரச் சுத்துமதிலானதிலேவெள்ளைசாத்தி
அத்தியாளி சித்திரமெழுத
கட்டதாகயிந்தினை முட்டிகண்ணிகிட்டியோடு
கால்விலங்குடளெழுதுவாரும்
தோட்டயோகன் முப்புராதிவயிரவனுதனேயும்
சூரியனைப்போலெழுதிவைத்தார்

அன்னம்பிள்ளைதென்னம்பிள்ளை யதின்மேல்கிளிப்பிள்ளையும்
அணிப்பிள்ளையுமெழுதிவைத்தார்
மின்னுந்தம்பிவர்ணத்தினால் மேற்கட்டிவிதானஞ்செய்து
மெத்தமுத்து ரத்தினகள்தூக்கி
வாழும்பூவில் மணங்கொண்டதாளம்பூக் கிடைகிடையாய்
மல்லிகை சரங்கள்தூக்குவாரும்
கீழுமேலுஞ் சாம்பிராணிதூபங்காட்டிமண்டபத்தே
கெட்டிமுகித்தே குரவையிட்டார்.

---

## வேறு

வந்துசந்திரனுடமண்டலந்தொடவே மகரதோரணம்நாட்டினார்
வாசல்நாலில் சையாமணிகளெனவும்
மண்டுகோபுரம் நிருத்தினார்
நந்திதேவருடசந்திரமண்டபத்தில்
நாழிகைமணியுந் தூக்கினார்
நாட்டுநந்தவன தோட்டமும்நதிகளும்
நடனசாலைகளும் வைத்தனர்
அம்மைமார்களிருந்தாடுதெற்கெனவும்
அன்னவூஞ்சலதுநாட்டினார்
ஆனபாண்டிவிளையாட நூறுபடி
ஆள்வார கனையளந்தனர்
செம்மையானவிளக்காயிரந்திரிகள்
சில்லுபூத்ததெனயேத்தினார்
தேருவாசல்தோரு நூறுகோடியென
சிறுமல்லர்கள் நிருத்தினார்
வெத்திவீரபத்திரன் கொத்தளந்தனிலே
வெள்ளிபீரங்கி யென்றேற்றினார்
மேடைமீது மகாமேர்வுநாட்டியதில்
மீறுசிங்கக்கொடிகட்டினார்
நித்தமேழுபடி முத்தளந்துபடை
நீடுசம்பளம் நிருத்தினார்
நீட்டமாக யிருகோட்டைபாரெனவே
நின்றுமுத்தாரம்மனைக் கும்பிட்டார்.

---

## வேறு

குலம்விளங்கிட வுலகளந்தவள் கூட்டத்தோடுபோய்
கோட்டைபோட்டுத் தேட்டமாய் முக்காட்டைநோக்கினர்
பலமடந்தைய ரிலகுதங்கப்பல்லாக்கேந்தியே
பாங்குசொல்லியே காண்கும்படிக்கு பாவையாட்டினாள்
கொண்டைகுலுங்க சண்டைபிடித்து கும்மியடிக்குதாம்பாவை
கவட்டைகிளப் பிச்சைப்படிக்குள்ளே கரணம்போடுதாம்பாவை
சுண்டைபிதுக்கி போட்டுசுமந்து காட்டுதாம்பாவை
வெள்ளித்தடியைத் துள்ளிதூக்கி வீதியோடுதாம்பாவை
பல்லாக்கருகே முள்பிரக்கியே பந்தம்பிடிக்குதாம்பாவை
ஆள்நெருங்கிட கீழ்பிரம்புகொண் டடித்து பிரட்டு,ாம்பாவை
அம்மைமுத்தாளே கும்பிபாரென ஆகுக்காட்டுதாம்பாவை
கழுத்தைக்குலுக்கி சுளித்துகாம்புகையைக் காட்டுதாம்பாவை
கரணம்போட்டு தருணம்பார்த்து கையைக்கூட்டுந்தாம்பாவை
சொரிமுத்தாளை துதித்திட்டாரை சொட்டுப்போடுதாம்பாவை
தொந்திமிந்தோமென தொழுதுநிற்குதாம்பாவை
மேட்டிலேறியே வூட்டிதெரிக்க விழுந்துகாட்டுதாம்பாவை
வீரபத்திர காளியம்மனை விழுந்துகும்பிடு தாம்பாவை
பாட்டை மயிரிசிரட்டை கவுந்த்தியபாடி யாடுதாம்பாவை
பந்தம்பிடித்து தொந்தோமென பாதைகாட்டுதாம்பாவை
அம்மன்மாரும் கோடியோடி யடப்பங்காட்டுதாம்பாவை
அடப்பமாடிக் கந்தப்பேயை யழைத்துக்காட்டுதாம்பாவை
அருமைத் தொழில்கள் சிலமகளிக ளடித்துக்காட்டு தாம்பாவை
வருத்தம்போக திருத்தியேதிரு நீறுபோடுதாம்பாவை
மாச்சிமையுள்ள பேச்சியம்மைக்கு மாலைமுடிக்குதாம்பாவை
கோலப்பெண்டுகள் நீலக்கொண்டையை கோதிமுடிக்குதாம்பாவை
கும்பிட்டெழுந்து தம்பட்டத்தோடு குரவைமுளக்குதாம்பாவை
கிழட்டுபாவை குமரிப்பாவையை கெஞ்சிப்பார்க்குதாம்பாவை
கிரகமெழுதும் பிரமனோலையை கிழித்துப்போடு தாம்பாவை
ஊத்தைபோக தீர்த்தமாடி கூத்துக்காட்டு தாம்பாவை
உளப்பிக்கொட்டிய கிழட்டுகட்டுவ னுதட்டிவிழக்குதாம்பாவை
கோட்டிபோலவே காட்டும்வாயில் குதிகள்போடுதாம்பாவை
பெரும்பிடாரிக்கு கருங்கடாயிலே பலிகொடுக்குதாம்பாவை
பீடத்தருகே தலையைக்குலுக்கி பேயுமாடுதாம்பாவை

செயங்கள்மூன்று முகங்கொண்டவளுக்கு தீபங்காட்டு தாம்பாவை
செருக்கிச்செருக்கி குலுக்கிக்குலுக்கி சிரித்துக்காட்டு தாம்பாவை
பாம்பைச்சுருட்டித் தலையில்வைத்து பல்லக்கேறு தாம்பாவை
பரணியடித்து குஞ்சம்வீசி பாதம்பிடிக்குதாம்பாவை
கூனைக்காலு மூரிச்செவியும் கோணவாயும்பாவை
குமரிப்பெண்களைச் சுரண்டிச்சுரண்டி கும்மியடிக்குதாம்பாவை
காச்சக்காரி பேச்சியம்மனை கம்மஞ்சுடுகுதாம்பாவை
கண்டியண்டி மண்டிபோட்டு கத்திவீசுதாம்பாவை
மூளிப்பேயன் காதைப்பிடித்து மித்தமுடுகுதாம்பாவை
முடுகுவழியில் சவடிகிடத்தி முரித்துக்கிடக்குதாம்பாவை
மந்திபோலே கொம்பிலேறி வாயையிழுக்குதாம்பாவை
மட்டிப்பேயை யெட்டியெட்டி குட்டிபோடுதாம்பாவை
கோழித்தலையை தாலியாக கோர்த்துக்காட்டு தாம்பாவை
குருட்டுப்பேயை செவிட்டுப்பேயை கொண்டாடிபோகுதாம்பாவை
ஈட்டிகளையை நாட்டிமுனையிலேறி காட்டுதாம்பாவை
மின்னும்பெரிய சின்னந்தாரை விருதுபிடிக்குதாம்பாவை
வீரபத்திரன்பாதக் குறட்டைவேண்டி சுமக்குதாம்பாவை
நாயின்முதுகில் பேயையேத்தி நடைவருத்துதாம்பாவை
நாச்சிமார்க்கு முன்னேசென்று நடந்துகாட்டுதாம்பாவை
மூன்றுகோட்டைக் கெல்லைநாட்டி முளையடிக்குதாம்பாவை
மூலப்பிரமனோடுபள்ளி முரண்டுபேசுதாம்பாவை
சொல்லக்காலை சூத்தக்காலை தூக்கிப்போடு தாம்பாவை
தூங்கப்பேயனோர் வுதிரச்சூடு போடுதாம்பாவை
சின்னப்பெண்டுகள் மன்னிக்குலைந்த சீலையடுக்குதாம்பாவை
திமிக்கதிமிக்க தொம்மெனசிங்கி யடிக்குதாம்பாவை
உழுதகாலை கிளப்பியாவியோடிக்காட்டுதாம்பாவை
ஓரிப்பேய்க்கு சிரட்டைபோட்டு உடம்புபிடிக்குதாம்பாவை
விழுந்தபோதி லெழுந்திருக்குமுன் வீசைதிருந்துதாம்பாவை
வெறுத்தகுற்றங்கள் பொருத்திடும்படி விழுந்துரும்பிடுதாம்பாவை
குரங்குகடித்த பாதிகனத்தை கொண்டுதிரியுதாம்பாவை
குமரிபேயை தோளிலேற்றி கொண்டுபோகுதாம்பாவை
பெருமையாக விலாவைதுளைத்து பிரம்பிட்டாடுதாம்பாவை
பெரியமாதா தன்னைக்காண பெலிகொடுக்குதாம்பாவை
வயிரவநாதன் வீரபத்திரன் மாரியம்மனும்

வாழ்த்தினார்மனந் தேத்தினர் சாத்தினர் தமிழ்வாழ்கவே
வாட்டமில்லாக் கூட்டப்பேய்க ளாட்டமாகவே
மணிமுத்தாளும் பாவையாட்டு மகிழ்ந்துபாத்திருந்தார்.

---

வேறு

கோட்டையது பார்க்கவென்று குரவையிட்டா ளுலகளந்தாள்
தாட்டிக பெரியமாதா சப்ரத்தேர் தனிலேறி
வெங்கலத்து சங்கிலியை விட்டிழுக்க பூதகணம்
மங்களவாச்சியமுழங்க வாராளே பேச்சியம்மை
அரனுடையகோட்டைதன்னை அம்மன்முத்தாளேதுரைப்பாள்
இரணியனு மிராவணனு மிக்கோட்டை வைத்தறியான்
தரணிதனில்முப்புராதி சமர்த்தனிவ னென்றுரைத்தார்
சமர்த்தனென்றசொற்கேட்டு தலையெடுபானென்றுசொல்லி
இவ்வளவோ மாதாவே யென்னுடைய வீரியந்தான்
பாவரந்ததேவர்களும் படும்பாடு பார்த்திருப்பாய்
முனிவருடசடையருக்க முனைகத்தியுண்டெனக்கு
நலிபெரியதேவருக்கு நானொருவன் சனியனல்லோ
வாச்சியினல் வெட்டாமல் மணக்கோணல் தீர்ந்திடுமோ
பூச்சியங்குன் றுதிருந்தால் புளுக்காரந்தீராது
மாதாவைக்கூட்டி வந்துமணிமண்டபத்தி லிருக்கவைத்து
தாதுசெரிகோட்டையிலே தண்ணீர்தான் வேணுமென்றால்
தண்ணீரில்லாத்தலத்தில் தகைதீரமாட்டாது
யெண்ணியதோர்காளையாறு மிடம்பெறவேவெட்டுவாரும்
மண்பறித்துசுமப்பதற்கு வாங்கும்படவெண்ணை வெட்டி
எழுபதிடைகூந்தால மெடுத்தடிக்குமொருபூதம்
அழுதழுதுவேலைசெய்து அடிபடுமாஞ்சிலபூதம்
தோணியிலேகற்பிரக்கி சுமந்திடுமாஞ்சிலபூதம்
ஒட்டகந்தட்டாது ஊத்துக்கண் திரந்திடுமாம்
தட்டரவேபாதாள தண்ணீர்தான் பெருகிடவே
மணிதருக்குநிலையாத மகத்தான பெருங்கசத்தில்
முனியர்களைவிழுங்கவென்றே முதலைதனைபிடித்துவிட்டார்
தேவர்களைவிழுங்கவென்றே திமிங்கலமீன் கூடேவிட்டார்
ஏவல்செய்யாதேவருக்கு யிடுக்கண்ரையிற் கழுகாட்டி

அகில்கிடங்கு பெருகிடவே அருத்துமடையுண்டாக்கி
மிக்ககாளையாருவெட்டி வீற்றிருந்தாள் முப்புராதி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
9 - OCT 1913
MADRAS

---

வேறு

வீற்றிருந்தந்த முப்புராதியுஞ்சொல்வாள்
வில்வமரத்திலே விட்டோடிப்போனர்
கார்த்தரண்டநதி தான்காண வாரானே
காட்டுவாய்தன்னிலே கோட்டையிண்டாச்சு
நம்தனக்குகுரு நந்தியென்றேதான்
நல்லதுணையாளரொடு சொல்லியேயிருந்தான்
சிந்தையிலறிந்தங்கே திருநந்திதேவர்
சிவனருகேபோய் நின்றுதெண்டனிட்டாரே
கரிகண்டபகிரண்ட காவலர்கள்கோவே
கங்கையுந்திங்களணி கன்னியுடையோனே
வேறுவந்த நீலனொடு குமுர்தனுதித்தன்
மெலியர்தட்டியவரை நலமுடன்வளர்த்தேன்
சாருந்துணைக்குதவி யில்லாதகாட்டில்
தனித்தார்கள்வேறொருவர் தன்பயமில்லையா
ஆருமில்லாத பரதேசியாகாமல்
அரகராசிவலிங்க வுபதேசம்புரிவாய்
சிவலிங்கங்கேட்கும் நந்திமுகம்நோக்கி
தீண்டாதபடிகவலை ஆண்டவனுரைப்பார்
கல்லானசிவலிங்க மானதின்பெருமை
காட்டிலேவாழ்வோர்கள் கண்டறியமாட்டார்
பூமிதனிலேவைத்து பூசையதுசெய்தால்
புவனபாதாளம் புகுந்துவேதூன்றும்
நேமமோடுதண்ணீரி லேபூசைசெய்தால்
எழுகடலுமொரு நொடியிலே குடித்திடுமாம்
தீயிலேசிவலிங்க பூசையதுசெய்தால்
திட்டமாயக்கினி கெட்டுவிடுமேதான்
[illegible]யாதபேருக்கு வாயாதுபூசை
எவ்விடத்திற்கொண்டுபோய் பூசையதுசெய்வாய்
ஆசாரமில்லாதபேர்க ளர்வர்தொட்டால்

அந்தரந்தன்னிற் பரந்துவிடுமேதான்
மாசில்லசிவலிங்க வரலாறுசொன்னேன்
வைத்ததையெடுத்துனக் கொத்துடன் தருவாய்
முத்திரையாயறு நூற்றுமூன்றுசிவலிங்கம்
முடுக்காகநந்தி யெடுத்தாரேகையில்
சித்திரமுடன்சடை சுற்றிலும் வைத்து
சீலமுடன்நந்தி யொருகோலமெடுத்தாரும்.

---

## வேறு.

உபதேசமெடுக்கவே நந்தியொரு கோலங்கொண்டாராம்
கோலங்களாண்டி தன்கோலங்கள் கொள்ளகுதித்தங்கே நந்திதேவ
காபிங்களாண்டிட கண்டோர்மகிழ்கலந்ததிருச்சடையும் [ர்
ஏழைச்சடைச்குளிருந்த சிவலிங்கமெங்குமொளிவீச
சாலத்திருக்குழல் தன்னிலழகாக சாத்திய வெண்ணீரும்
வெண்ணீரணிந்ததிரு முகமெங்கும் விளைந்ததிருக்குளையாம்
பன்னீரொளிர் காரவீடுமேலேபசும் பொன்னின்முட
ஆசையர்க்கற்பூரம் தன்னிலழகப் பாலழகுதிருப்பிரம்பு
விசையாய்கமகிழ்ந் திருகாந்தன்னி லெடுத்தார்கோலமதை
வேட்டிகாவிவேட்டி தானுடுத்தார்தினம் மேருகபாலமதை
ஒட்டியாணங்கெட்டி சிங்காரமாய் வேஷ்டியுடுத்தார்
கட்டியலங்காரமாகவே நந்திதேவர்காய்ந்த மலர்பாதத்தை
கெட்டியலகூறவே பாதக்குரட்டின் மேல்நடந்தார்
அச்சுபெருமூக்சு செஞ்சடைமேலுத் திருச்சடைமேல்
ஆணிப்பொன்மாணிக்க குண்டலங்காதிலகுஞ் செம்பசைந்தாட
மெச்சும்பஞ்சாட்சர பிதுமையான நெற்றிபளபளென
வேர்வைக்குருந்தொளில் ராரிதரும்பியமேனி தனதளென
புந்திக்கிணங்கதாவட மெத்தவேபோதப்புரண்டாட
பூரித்துதாரித்து தாடிச்சடையொடு பூக்கொன்றைதாலாட்ட
பன்றிதகைக்குடை வட்டத்தின்மேலொரு பாம்புபடமெடுக்க
வெங்கனையாளிவிரலிட்ட செங்கையில் வெள்ளி ரதம்யிலங்க
மேலிட்டமுப்புரிநூலிட்ட கோவளவெங்களகிளுடையாம்
அங்கைக்குதத்தம் மரகதகோட்டுக்கு ஆனந்தகூத்துடையான்
அட்டாங்கமுட்டுக்கட்டி யொட்டியாண மசைந்தகைவீச்கம்

தொந்திமிக்கசுருதி பரத்தொழிலே தெய்தெயென்பார்
சோதிமரகதபாதக் குறட்டிலே தூக்கியகாலழகாம்
குந்திச்சுதித்தந்த நந்திக்காலமண்டபங் கோட்டைமுடுகிடவே
கோலக்குருபீடம் நந்திக்கெதிரேபோய் கும்பிடக்கூட்டமிட்டார்
நந்திக்கெதிராகமுப்புராதி நடனமாடசங்கீதம்
நாட்டமுடன்சென்று கூட்டியகோட்டை நடுக்கையில்கொண்டுசெ
பாதம்விளக்கிய தண்ணீரருந்திய பாக்கியமுங்கொடுத்து [ன்று
பங்கயப்பொற்பாசனத்தி லேழுமெத்தைபள்ளிகளிலிருத்தி
மாதாபிதாக்குரு தெய்வமென்றேமுன் மலர்ப்பாதந்தெண்டனிட்
வாலசன்னுசி முப்புராதிக்குநல்லவார்த்தைசொல்லுவாரும் [டேன்

---

## வேறு

என்குருவேநந்திதேவா யெனைவளர்ததபுண்ணியனே
முன்காணயெங்களைநீ முக்காட்டிலிருத்திவைத்து
பின்காட்டிபபோகையிலே பெரியமுத்தாளிங்குவந்தாள்
முன்காத்தயுலகளந்தாள் மூன்றுமுதங்கொண்டவளும்
காச்சக்காரிவேப்பந்தழை காரிமுப்புராதியம்மன்
பேச்சியம்மன்நாடாண்ட பெரியவரகாரியுடன்
கூடியவர்தங்களுடன் கோட்டையிட்டேன்முக்காட்டில்
நாடியுன்னைக்கூட்டிவர் நாங்கள்வழிவறியோமே
வழியறியாதிருக்கையிலே வந்தாயேபாக்கியம்போல்
ஒளியாதேயினிமேலு முபதேசம்பண்ணுமென்றார்
வேகாதமந்திரமும் வெட்டாராதமூலிகையும்
சாகாதசிவலிங்கமும் தருவதற்டிச்சொல்லுகிறேன்
சந்தனத்தாற்றரைமெழுகி தக்கமணிவிளக்கேத்தி
சுந்தரஞ்சேர்பீடமதில் தூபமெனும்புகைகாட்டி
கோலமுடன்பரித்துவைத்த கூடையிலேபுகைதூவி
பாலுபழஞ்செவ்விழநீர் பலகாரம்பூசைபண்ணி
மணியடித்துசிவஞான மந்திரங்களும்படைத்தார்
திணிக்கூடனேமத்தியான திரும்பியந்தியானவுடன்
ஒருசந்தியாகவைத்து வுண்டிருக்கவேவேணும்
மருவியதோர்முச்சந்தி மாலையிலேவொருபூசை

அப்பனேன்செம்பாதி பதிலேயொருபூசையுண்டு
இப்படியேவெகுசோலி யிருக்குதடாமுப்புராதி
சொன்னபடிசெய்வதற்கு துணிவீரேயாமாகில்
பண்ணரியவுபதேசம் பண்ணுமென்றுதானுரைத்தார்
நித்தியமுமிப்படியே நிலையோடேசெய்வதற்கு
சத்தியஞ்செய்தேகொடுத்தார் தாட்டீகன்முப்புராதி
உரைபீடத்தொருபுரமா யோமகுண்டந்தான்வளர்த்து
நிரைநாழி கும்பக்குடம் நிரைவிளக்குத்தானேற்றி
குடைபெரியநீலனுக்குங் குமுர்தனுதித்தனுக்கும்
திடமுடையகைகளிலே திருக்காப்புகட்டிவைத்து
தெற்பைதன்னைவிரலிலிட்டு திருநீறுதான்பூசி
கற்பூரஆலாத்தியை காட்டியேபூசைபண்ணி
நிச்சயமாய்நூறுகுடம் நெய்யைவிட்டார்வேள்வியிலே
இச்சையுடனெற்பொரியு மெட்பொரியுமிட்டாராம்
வைப்புடையமூவரையும் வடக்குமுகமாயிருத்தி
ஒப்பரியிலவர்செவியிலு பதேசம்பண்ணுவாராம்
வீரமந்திரத்தை வீருடனேயுருவேத்தி
வாரமுள்ளபீடமதில் வயிரவரைமுன்னிருத்தி
வயிரவரைமுன்னிருத்தி மந்திரத்தையுருவேத்தி
உயிரேறிதுடிக்குதடா வொருமூன்றுசிவலிங்கந்தாண்
துடித்தசிவலிங்கமதை சோதித்ததிற்சக்தியுண்டு
எடுத்ததனைமூபேரும் யெண்ணாமல்விழுங்குமென்றார்
உருவேத்தியேபரலை உட்கொண்டார்மூபேரும்
திருவருளால்நந்திதன்னை தெண்டனிட்டங்கேதுசொல்வாரும்
சீரொடுநீருப தேசம்புரிந்திடும்நன்றி
தேவரேயெங்களுக் கூரதானென்றுவேணும்
ஆருமிரங்கிக்குளித்து வராதவாற்றில்
அழுக்குள்ளதண்ணீரதா னாகாதுபூசைக்கென்றானும்
மண்டபம்நிருவிகண்டு தரவேணுமென்ன்
மாரில்லாப்பூமியை கீரினார்கைப்பிடியாக
பூண்டதோர்கல்தட பூஞ்சுனையாய்வந்துநிற்க
பொற்படிவெள்ளிப்படி வெங்கலப்படிகட்டி
கல்லகடுகொடு நெல்லிதான்றிமரம்நாட்டி
நாங்களினிமேலுந் தூங்கித்திரிவதுநன்றோ

வல்லதொருமரமொன்று வேணுங்குருவே
வந்துதுகையாறீ சந்தோஷமாகயிருக்க
சாலத்திருவட வாலப்பீடத்தருகே
தளிறுமிளிறுமிலையு மிணையுமுண்டாக
ஆலமரத்தொடுபொய்கையு முண்டாக்கிதந்தேன்
ஆவதனியாயம்வாராமல் நடந்துக்கோவப்பா
கள்க்குடியாதே கற்பழிக்கநினையாதே
காவாலிப்புத்தியை கட்டோடேவிட்டுகளைவாய்
கொள்ளைக்குப்போகாதே கோட்சொல்லுவார்த்தையைக்கேளாதே
கொண்டபெண்டாட்டியைவைத்து நீகூத்திவையாதே
வேதப்பிராமணன் ஆண்டியைக்கும்பிடவேணும்
வித்தைப்புலவர்தன் வீதத்தைவிட்டுவிடாதே
ஏதுமறியாதயேழைமேல் கோபம்வையாதே
இடும்பர்குடியைக்கெடுத்தாலும் பாவங்களில்லை
நல்லபசுவைநடுங்க அடியாதேபாவம்
நாச்சியாள்முத்தாலை நம்பிக்கொள்வாய்தெய்வமென்றே
மெல்லியசிவனை கொல்லநினையாதேபாவம்
வேலைக்குத்தக்கது கூலிகொடுத்துவிடுவாய்
ஆக்கியசோத்தைஅடைத்து வைத்துண்ணாதேபாவம்
ஆதாயமில்லாமல் நஷ்டமுண்டாக்கிக்கொள்ளாதே
வாசமுள்ளமந்திரி வார்த்தையைத்தட்டிவிடாதே
மட்டுத்தப்பாமல் மரியாதையாகநடப்பாய்
நல்லவனென்றுநடந்து கொண்டால்வினையில்லை
நம்மையுஞ்சற்றே நினைத்துக்கொள்நந்தியென்றே
இல்லாதபேரோடு பொல்லாப்புசொல்லவும்வேண்டாம்
என்றுகைலாசகுன்றிலே நந்தியும்போனார்
பொன்னதிலேமாதா வுலகளந்தாளும்
பூவைப்பேச்சிகாச்சக்காரி சொரிமுத்துமாலை
ஆணிபெரியமாதா முப்புராதிமாதா
அம்மன்மனமாறுமந்த புதுச்சுனையாடுவோரும்
கட்டுவாய்தன்னருகே யிட்டகோட்டக்கரையில்
காளையாத்தங்கரை பொய்கைபுதுப்புனர்காலம்
இஷ்டத்துடனேதைமாசத் தம்மாவாசையென்றே
எல்லோரும்நோம்புபிடித்து திருக்கொடியேத்தி

சித்திரப்பல்லாங்கு பாதைவழிவெட்டிதீய்ப்பார்
தேரோடிபோயிடந் தோருங்கட்டினார்செச்சை
சந்திரவாசலுந்; தோப்புகடோருந்தடாகம்
சாமுண்டிபத்திரகாளிக் கிருக்குஞ்சவுக்கை
தோப்புக்குந் தீர்த்தக்கரைக்குமே கூப்பிடுந்தூரம்
தூவட்டைசேலைக்குமேலாக! பூவைச்சொரிந்தார்
காப்பிட்டமாதர்கள்; வேப்பிலைதோரணங்கட்டி
காளாஞ்சிபந்தத்தை; யாகாசதேரிலேகட்டி
சிங்காரக்கொண்டைக்கு, வங்காளத்தில்வந்தசிப்பு
சினசபாதிகழ் சின்னச்சிமிழ்; கூட்டிசேர்ந்தார்
தங்கள் தங்கட்; கிணையானதங்கக்குடமும்
கூடிவிளையாட ஆயிரங்கன்னிமார் கூட்டம்
பெரியமாதாவுக்கு நூற்றெட்டு பூக்கடைப்பெண்கள்
பின்னிமுன்னம்தூவி பல்லாக்குதன்னைபிடித்திட
திருகிமுடிக்கின்றவாழைப்பூ கொண்டையை சீப்பால்
செப்புக்குடத்தின்மேல் சீப்புக்கண்ணாடி தெரிய
கஸ்தூரியிட்டுக்கலந்த கற்பூரமுங்கட்டி
காணிக்கைவைத்துசுனைக் கரையீதெனக்காட்டி
மொய்த்தமடவார்கள் வெங்கலப்பம்பைமுழக்கி
மூழுகிக்குளித்துவிளையாட நல்லமுகூர்த்தம்
சம்பிரத்தேருக்கு நூறுமுளத்திலேசங்கிலி
தன்னைப்பிடித்துவலிக்குதே பூதவேதாளம்
செப்புக்குடமும்கடாரசி பெட்டகஞ்சீப்பும்
தேருக்குமுன்னாலே முன்னூறுநானூறுசெல்ல
அப்பங்கொளுவடைதோசையும் நெய்பணியாரம
அடுக்கிப்பெட்டிசுமக்கின்ற பெண்களநேகம்
மஞ்சட்பொடியதுதோள்ப்பய நிரைந்திடவைத்து
மாறுப்புப்போட்டுவருவார் மலைக்கன்னிமார்கள்
தஞ்சமுனக்கினிமூன்று முகங்கொண்டதாயே
சற்றேசிரித்தாக்கால் நூறுபொன்னுந்தருவோம்
மாதாவேயெங்கள்முகம் பார்த்துசந்தோஷமானால்
வார்த்தைக்குநாங்கள் தருகிறோம்நூறுவிராகன்
சீதளமாளம்பூவாலே பல்லாக்குச்செய்து

தீர்த்தத்துக்கம்மனெழுந் தருளென்றுதிரண்டார்
கற்பூரக்கட்டியில் தங்கப்பொடியைகலந்து
கச்சிபொரிக்கின்ற குயங்கையில் பூச்சென்றுகாட்ட
தெற்குத்திசையாளவந்தவளே முத்துதேவி
சின்னச்சிரிப்பட்டாணி யெங்களுக்கு சீதனஞ்செல்வம்
கைப்பிரம்புக்காரர் சாட்டைசவுக்கடைகாரர்
கன்னிமார்கூடவே தீர்த்தக்கரையில்கலந்தார்
தப்புகிடுபிடி செயகண்டி மத்தளந்தட்டி
தந்திதரிகிட தொந்தோமென்றாடசமைந்தார்
மொட்டைத்தலைப்பேய் சடைத்தலைப்பேயம்மைமுன்னால்
முன்னூறுநானூறு கூட்டக்குறவைமுழக்க
கொட்டைதேங்காய்கலையம்மாள் போட்டுபிடித்து
கோட்டாளைக்காரிகளாளத் தொடுத்தாளென்றே
காச்சக்காரிபேச்சியம்மைக்கு தங்ககடயம்
கையில்கொடுத்துவிளை யாடென்றாள்சிவகாமி
வீச்சுவலைக்காரி சிங்கத்திலேறிவிரைவாய்
வீரபத்திரதேவன் நீலக்குதிரையைவிட்டான்
பாக்கியந்தந்தவுலகளந்தாள் பார்த்தபார்வை
பட்டமரங்களும் பச்சமரமாகப்பண்ண
வாக்குசகாயந்தருகின்ற கண்ணனூர்மாரி
மங்கைமார்தன்னோடு தீர்த்தக்கரையிலேவந்தார்

---

## வேறு.

எண்ணெய்தேய்க்கவே வண்ணமதாகவே
இனியகைவளைய லரியார்ப்பவே
பண்ணைசேர்புயம் தண்ணிலேகுழ
பாரமாமலர் சேரமீழவே
வெண்ணை திருடியே கண்ணில்லாதவன்
வேழமுகவனார் தாளமெத்தவே
தாழம்பூபரத மானதாகவே
தையலார்குழல் மீதுசேர்த்தனள்
சூழமங்கையர்சேரவப்படி
துலங்குமாமுடிக் கெண்ணைதேய்த்தனள்

நீளமாமுடி,கோதிசிப்பினால்
நீள்கொழித்த தெள்ளமுர்தம்போலவே
வாழவேகிளித் தண்ணித்தாளியும்
வாய்த்ததோர்குளி தாமரைகளும்
குளிதாமரை யானதானது
கூண்டநெல்வகை சேரவேயதில்
அளிசேர்குழல் தன்னில்சிக்கையும்
அரைப்புவான யிலுமிச்சங்காயினால்
நளனமங்கையர் சேரக்கூடியே
நாயகிமுத்தாள் முடிமேல்விட்டனர்
விட்டபோதுமரு சிப்புமிட்டல்லோ
வெறுதுயிலாடை தன்னைகட்டியே
வாரிக்குமிரியே மனதுபொங்குதாம்
முட்டவேமுத்து மாலைதோளிதான்
முக்கணுபரர் அரகராவென
திட்டமானகுரு பராபராவென
சேரவேசுனை தன்[illegible]லிறங்கினார்

விருத்தம்

---

சேரவேசுனை நீராட சேயிழையன்பர்தாமும்
ஆரவேசொருகுங்கூந்தலா ஆயிழைமாதரெல்லாம்
கூரும்வேல் விழியாரெல்லாங் குரவையிட்டவர்கள்மம்
தீரவேசுனைக்குள்பாய்ந்து தெளிந்தவராடினாரே.

---

வேறு.

ஆடச்சுனையா யிழைமாதரெல்லாம்
அரனேதுணையாதி பரனெனவே
கூடச்சிலமங்கையர் சேடியர்கள்
கூகூவெனவே சுனையாடுவாரும்
நாடிச்சுனையானதிலே கொடிகள்
ககளகருவளை கொடியாடிடவே
பாடச்சிலவண்டுகள்ராகமும்

பாவைப்புகளர சுனையாடிடவே
சுனையாடியேமுத்துமாலையம்மன்
துள்ளித்திடும்வல் லிடையேதுவள
அணியுந்திருக்கைவளை யோசைபுகழ்
அலறிபலசங்குகள் வோலமிட
பஞ்சாட்சரப்பதியாள் முத்துமாலையம்மன்
பந்தாடிடுமாமயில் லோலாட
கஞ்சமுகம் குழலுமசைய
கரிதிதசுனைமீதில் களிப்புரவே
தெளிந்தார்மொழிந்தார் முத்துமாலையம்மன்
சீலைவேள்விழியா ளாடிக்களிப்புரவே

---

## வேறு.

ஆடிக்களிப்புரவே சிங்காரமா யாடிக்களிப்புரவே
அடிக்களிப்புரவே சிங்காரமா யாடிக்களிப்புரவே
ஆடிக்களிப்புரவே யாயிழையாள்முத்து மாலைசிங்காரமாய்
வேடிக்கையாய்குழல் சரியச்சரிய
மெள்ளமெள்ள அன்னம்போலே நடந்தவள்
ஆனையரியவழம்மன் புதியவளாந்தமாலை
பிணமாலைசூடியே தானவளாகியமாலை
தெருத்தூத்தாள் தையநல்லாள்க ளனைபேருங்கூடியே
ஆடிக்களிப்புரவே சிங்காரமாய் விளையாடிக்களிப்புரவே

---

## வேறு.

தொந்தோமென சிலம்புதண்டை பாடகதோகை
சொரிமுத்துமாலைகருங்குழல் சிந்தித்தனங்கள் குலையவே
செங்கைவளையல் திமிதிமிதோமென ஆடிக்களிப்புரவே
சிங்காரமாய்விளையாடிக்களிப்புரவே முன்சுனைக்காரி
புதுமாலையம்மனுமுட்டாங்குகாரியும் நற்சுனைக்குள்வர
கொஞ்சிக்களித்துவிட மயில்போலவே கூகூவெனவே [களிப்புரவே
குருபாதம் தஞ்சமென்றாடிக் களிப்புரவே சிங்காரமாய்விளையாடிக்

ஆடவர்தங்கள்தன்னுருயிர் கொள்வேனென திரமுடிக்கச்சைக்குய
பாடகஞ்சேர்பதத்தால் முததுமாலையும் [ங்கள்
பாவையும்பூண்டமாலையும் பெண்களும்ஆடிக்களிப்புரவே/
சிஙகாரமாயாடிக்களிப்புரவே மாச்சிமையுள் பரனேபராபரா [களும்
மாதஙகிமாதஙகி மாமயிலெனவே பேச்சியம்மை வடமாலையும்பெண்
பேய்வளை மாதர்குழலசையவே ஆடிக்களிப்புறவே சிஙகாரமாய்
விளையாடிக்களிப்புரவே

---

## வேறு

சுனையாடவேணுமென்று தோகைமுத்து மாரியம்மை
வன்சோறும்பூஙகுழலாள் மங்கையரொன்றுக்கூடி
பூஞ்சுனைக்குள்ளே புகுந்துபுதுப்புனலாடவென்ன
வர்ணச்சுனைநீரசைய வண்டசையபூவசைய
தேன்சுனைவண்டினங்கள் சிறந்தெங்குகோலமிட
கண்ணெய்வார்த்துபூங்குழலுக் கிதத்தமர்கோதி
வண்ணமுள்ளசீப்புமிட்டு வாய்த்தபுண்ணுக்குமிட்டு
தாளியிளந்தருளிருஞ் சங்கையுள்ளகுளிதாமரை
நீளியமுத்துமாலையம்மை நெல்லிக்கயிரையுமிட்டாள்
காளிகணங்கள்சூழக் கன்னிமார்குரவையிட
ஆளியுற்றபூஞ்சுனையி லன்றுமுத்துமாலையம்மன்
கரையிலேநின்றபெண்கள் கயிற்றிலேதான்குதித்து
சங்கினங்களுமுளங்க தாமரைகொடியசைய
பூமரங்களுள்ளதெல்லாம் புன்னைமலராச்சொரிய
வண்டுகள்கலந்தெழும்ப வரிசைமுத்துமாலையம்மன்
கொண்டையசையமெழுகக் கொடிபோலிடைதுவள
ஏலஙகுழளா ளின்பநிறத்தாள்
ஏந்திழையாள் சுனையாடியேவாருள்
மாலைக்குழலாள் வஞ்சியிடையாள்
வடமுத்தழகுசுனை யாடியேவாருள்
கருகெனவிழியாள் மயிலன்னநடையாள்
கன்னிமுத்தாரம்மன் சுனையாடியேவாருள்
தண்டைக்காலாள் தவளைமுகத்தாள்

தாயாருஞ்சுனை யாடியேவாராள்
கொண்டைகளசைய தண்டைகள்புரள
கொடியிடையாள்சுனை யாடியேவாருள்
குவளைமுக்கண்ணால் மகள்வல்லால்
கொடியிடையாள்சுனையாடியேவாருள்
பகளத்திருவாய் மொழியாளிளையாள்
பசுங்கொடியாள் சுனையாடியேவாருள்
சுனையதனிலாடியே கரைதனிலேவந்து
துவர்ந்ததுயில்போட் டேந்திழைமாதரெல்லாம்
கரையேறி சுனையதனை வலமாகவந்து
கற்புடையதாமனை பூப்பரித்துதொழுதாள்
வரையேறிவீழ்வாளைபோற் சுனைக்குள்வீழ்ந்து
வளர்த்தமுளைவைத்துப் பாடிவர்ணக்குலவையிட்டார்
தொப்பமிட்டுவிளையாடி சீர்பெரியமாதா
தென்னையின்மேல்கொச்சி மஞ்சல்குதித்தாட
தக்கமுடனிடையாட தனகிரிகளாட
தண்டைபாடகங்கொலுசு கொண்டைகுலைந்தாட
சங்குவளைநீல்வளை பட்சவிளையாட
தாமரையிலன்னமது தானுங்குதித்தாட
மங்கையர்கள்தலைக்கோல மாலைபுரண்டாட
வடமுத்தாள்சுனையாட வண்டினங்கள்பாட
துருத்தியிலேநீரடைத்து வுலகளந்தமாதா
தோழியர்கள்முகந்தோறுந் துகில்தோறுஞ்சொரிய
ஒருத்தியவள்காணாமல் ஒளித்துக்குதித்தோடி
உலகளந்தாளிருபாதத் தொருவிரலைபிடித்தார்
வருத்தமுடன்கடித்து தெணபத்ரி
மருண்டுவிழுந்தோடிடவே திரண்டபெண்கள்சிரிப்பார்
இருத்தியும்நானுடுத்திவந்த மணிப்புடவைகளைந்தேன்
எல்லாருஞ்சிரிப்பதற்கு செல்வேனோர்கரையில்
இரைதேடும்பரவைகளே யெனக்கெடுத்துத்தருவீர்
என்றுநின்றுகெஞ்சுவதற் கிரங்கியன்னங்கொடுக்க
மூன்முகத்திற்பூசுகின்ற மஞ்சணையைக்கண்டு

முழுவாளைமீன்கள்வந்து பெருவாயைப்பிளக்
ஆரைகுலையதலைகுலைய கரையில்விழுந்துருண்டு
ஆச்சியெங்கள்பேச்சி ஆபத்துக்குப்பிழைத்தாள்
செப்பமுடனெல்லோருங் குப்பமிட்டுக்கரையில்வர
சிறந்தமலர்மாலைகளை யெறிந்துவிளையாடி
இப்படிக்குவிளையாடி கரைதனிலேயேறி
ஏந்திழைமார்மயிர்தூத்தி வாய்ந்ததுகிலுடுத்தார்

## விருத்தம்.

ஏந்திழைரம்பைமாதர் களித்ததோர்முத்தாரம்மன்
கூந்தல்நீர்சோர்க்சோர குரும்புனலாடவென்று
மாந்தளிர்வல்லிவர்ண மாமலர்பட்டாடை
பூந்துகில்மாலைசாத்தி பொற்கொடிமாதர்நின்றார்

## வேறு.

தங்கப்பொடியைக்கலந்து சாதிலிங்கப்பொட்டு
சாத்தினாரேவெள்ளைத் திருநீற்றை
தொங்கலிட்டகொண்டைக்குத் தூக்கியிருவாச்சிசரம்
தும்பைச்சரம்பிச்சை சரந்தூக்கி
அடப்பம்பிடிக்கும்பெண்கள் படிக்கம்பிடிக்கும்பெண்கள்
ஆலத்தில்வெண் சாமரைநின்றாட
குடத்துப்பணத்தையள்ளி தலைசுத்தியேசிதறி
கூப்பிட்டுவரச் சொல்லிக்கொடுத்தார்
முத்தம்மைதன்பாதத்திலே முப்புராதிகப்பங்கட்ட
முப்பதுநாளிப்பணமீய்ந்தார்
கொத்துப்பவளங்கொருத்து முத்துவடம்பத்துநூறு
குத்துமுலைக் கச்சைகளுங்கட்டி
காவட்டுச்சுமந்துவந்த துப்பட்டாபரிவட்டங்கள்
கன்னிமாருக் கொவ்வொன்றாய்க்கொடுத்தார்
ஊாவுதத்தந்தரி கிடதெய்தத்தரிகிடவென்ன

நட்டுவர்கள் மத்தளத்தைக்கொட்ட
கூடிப்புலவோர்படி வீணை ராகத்துக்கொப்பாக
கொண்டைமேலே பக்சைகிளிதாவ
ஆடிப்பாடிதிரிவாரை யடித்துபரித்தபேரை
அளிக்குகின்ற சூரந்தலையாட
கண்டசரத்தின்கீழாக யிரட்டைசவடியொன்று
காசியோரேழும் விலைகாட்டி
தொளிங்கத்தரிகிட தோதிதரிகிடசெகண தரிகிடதொம்மெண
சூளதசூளத தாளத்தைதொளித்தார்
மூக்குத்திமேலாக வைத்தகருத்த சவாதுகட்டி
மூன்றுலோகங் கமகமென்றுமணக்க
பாக்கதுதான்தின்று பக்கும்பழுத்தகொவ்வை
பழம்போலே சிவந்தசிரிப்பாணி
தேவியடைக்கலமென்று தெண்டம்பண்ணுவாருக்கெல்லாம்
திசைதோறுமூன்றுமுகங்காட்டி
நாவுலகில்முப்புராதி கோட்டைக்காரிநானெனவே
நாட்டுக்கெல்லாந் தோரணமுங்கட்டி
கைலாசத்திலிருந்து கூட்டிவந்தபேப்படைக்கு
கன்னிமார்க்கும் போசனத்தைக்காட்டி
மயில்போலமடவார்கள் பட்டுவகைசொல்லி
மணிமண்டபத்தி லெழுந்தருளினர்.

---

## வேறு.

85711

நனைந்ததுகிலைப்போட்டு துகில்பருந்துமித்தி
ஈரங்களைந்தவர வரெடுத்துதுகிலுடுத்து
எடுத்துடுக்கும்புடவை யெண்ணவொண்ணுசேலைகளாம்
மையணிந்தபூங்குழலால் மானெனவுலகளந்தாள்
செய்யிழையாள்பூந்துகிலை சிரித்துவுரைக்கலுற்றாள்
மேகவல்லியிந்திராணி மெச்சிப்பட்டுகொச்சிப்பட்டு
வகீர்கானதொட்டிற்கட்டு வர்ணபழுகாச்சிகட்டி
கொல்லப்பட்டுசெஞ்சமுத்திர கோகனகவீரவாள்சாத்தி

வல்லவட்டஞ்சந்திரகாவில் வருநீலப்பட்டுடனே
முத்துவாளிதேவாங்கு முழுநீலப்பட்டுடனே
கொத்துவர்ணக்செவ்வறியன் கோகனகவீரியனும்
அரிநீலமஞ்சட்பட்டு வானசந்திரலோகப்பட்டு
சொரிநீலசங்குவர்ணம சுந்தரபாண்டிய நாட்டுக்காரி
குருவிஞ்சிமாதுநீலங் கோடாதுயூர்விழும்பன்
உருவிப்புதுப்பணீகளொன்று போலுடைக்கிசைய
பூத்தொடுப்பன் செந்தலையன் புண்டரீகவெள்ளைப்பட்டு
ஏத்தமுள்ளபட்டுவாழி யினியபவளச்சேலை
பாவவந்திபட்டுச்சேலையும் பாவங்குடையபூவாடையும்
செவ்வந்திநிரத்தபட்டு சிவத்தகிணக்கண்டாங்கி
பலபணிதன்னுடனே பஞ்சவர்ணநீலப்பட்டு
தலைப்பணிதன்னுடனே தக்கதோர்ப்பணியும்
பஞ்சவர்ணநீலப்பட்டு கஞ்சியிட்டவெள்ளைச்சேலை
நாகநாகப்பட்டணத்து நல்லபட்டுதுப்பட்டியும்
எல்லையொத்ததேவாங்கு கருப்புநிறச்சிகப்பு
என்றுநித்தளங்களபாயும் வல்லுவத்துளியனோடே
வல்லுவத்திலிட்டபணி கொச்சிபட்டுதச்சிக்கட்டு
மகிழுஞ்சகலாத்து லோகங்கடந்தசேலை
இக்குவிழும்புன் பெருத்த பண்பொலியன்கண்டாங்கி
பண்பொலியன்புழுகுவர்ன்னம பவளவமநீலவர்ணம்
கடுகுவரியனோடே கனகம்புவர்ணப்பட்டு
ஆடவாய்பலவணியு மானவர்ணம்பட்டுச்சேலை
தடுப்புமணிப்புடவை தக்கதோர்பணியஞ்சேலை
புன்னைப்பூநிரப்பணியும் புதுமுத்துசாரிகம்பி
வர்ணவர்ணப்பொற்பணியும் வயிரமணிப்பலதும்
கொல்லப்பட்டுசீனப்பட்டு வங்காளசமுத்திரப்பட்டு
கொச்சிகோழிகோட்டிலுள்ள பச்சைவிரலாளிப்பட்டு
நல்லபட்டுசெம்பட்டு சமுத்திராளிப்பட்டுடனே
சங்குமுருகுதூவிவட்டம வாகுவட்டுமேகவல்லி
வாகுவட்டமேகவல்லிமறைக்கும்விசத்தார்பட்டாள்
பழுத்தவகைதெரியும் பட்டரைஞ்ஞான்பணியுஞ்சேலை

அகத்திஅகத்திபுவன் அரைஞ்ஞான்பணியஞ்சேலை
ஆறுமுழக்கண்டாங்கி யருகுமணியஞ்சேலை
அருகுமணியஞ்சேலை பெருகவிழும்புகட்டி
முள்ளணிவரிப்பணியும் பூந்துகிலொலியரோடே
பொன்னெழுத்துமுத்துமோகன பூவிட்டகவணிபசேலை
வன்னவன்னப் பொற்பணியும் வயிரமணிபலதும்

---

## வேறு.

கொல்லப்பட்டுகளெல்லையில்லா குமுர்தவால்மரங்கவணித்துட்டி
கொஞ்சுமாமுடிக்கஞ்சுவன்னமு குழலிலேயெடுத்தணைவாளாம்
தோதைருமனும்நாரதையருமனும் பூவிட்டகச்சைதுவட்ட
தென்னுலகில்காங்கிட்ட வல்லிசெருமிட்டவெடிசலமமாம்
வல்லிக்குவல்லி சீதனத்துபட்டுகள் வங்காளத்துநல்சேலை
சொல்லிலடங்காவிலையாஞ் சோதனப்பட்டுச்சேலையாம்
துங்கவாளிபுங்கசாபம் சோழமண்டலத்துள்ளபட்டுகள்
வன்னமுத்துமாலையம்மனும் வரிசைபேச்சியம்மனும்
மகிழ்ந்தல்லோபெண்க ளனைவோரு மணிப்புடவை விளம்பினாரும்

---

## வேறு.

ஈரக்குழலிலடைத்த நூறுமுழக்கண்டாங்கி
ஈத்தம்புசையலிலே கீத்துவர்ணச்சேலைகளும்
ஆறுமுழநூறுமண்ட பஞ்சமுத்திரவல்லி
அள்ளிப்பணங்கொடுக்கின்ற புள்ளிப்பட்டுசேலைகளும்
துப்பட்டிபோலேவெளுத்தது வட்டவேட்டியுடனே
செப்புக்குள்ளேதானடைத்து கப்பலுக்குள்வந்தபட்டு
பட்டகவணிச்சேலை பொற்சரிகைதுப்பட்டியும்
நல்லெண்ணைபோலிருக்கு புள்ளிமுத்துகண்டாங்கி
வாழைக்குருந்துபோலே மல்லிகைப்பூச்சித்தாடை
எக்காலம்பணமளந்து வாங்குகின்றகாங்குசேலை
கோழிப்பூவைப்போல் சிவந்தசாலுவைப்பரிவட்டமும்
கொக்குறகுபோல்வெளுத்த மக்கத்துசவுளிகளும்

மாத்துடுத்துதீர்த்தமாட வைத்திருந்தபூங்தொளியன்
வத்திராப்பிலேயிருந்து வத்தல்லம்புரிக்கச்சையும்
ஏத்தமுள்ளநாகவர்ண ரத்தினவர்னமேகவர்னம்
இரட்டைவிழும்பாயெழுதும் பட்டைக்கம்பிச்சேலைகளும்
கொய்தகம்பிடித்துடுத்த குஞ்சருகுபட்டுச்சேலை
கொல்லத்திலிருந்துவந்த பல்லக்குப்பணிகளுடன்
செகத்தையொக்கவிலை மதிக்கப்படாதபட்டும்
நேரம்போல்சிவந்தமஞ்சல் பட்டுவீரவாளி
மதிப்பெனபெத்தசீனி முருச்சுகவணிச்சேலை
வாங்கிடுவதற்கு முருக்கம்பூகண்டாங்கி
அகமூடவெள்ளிகுப்பி யிட்டசகலாத்து
பெட்டியிலடைத்திருந்த மகிழம்பூவர்ணப்பட்டு
வேடுவேரைபோட்டிடுத்த கருக்காரமன்னருக்கன்
கட்டுப்பட்டடிக்குள்ளிருந்த கெண்டைபோட்டவெள்ளைப்பட்டு
ஆட்டமுள்ளகொச்சிப்பட்டும் அரசிலைதுங்களும்
ஆறெடுத்துசிலைவிலை அரிதாமுரிச்சுக்குத்தி
கண்ணைப்பகட்டுகின்ற யெண்ணைக்கருப்பனுடன்
கட்டியேயிருக்குகின்ற கெண்டைபோட்டபட்டுச்சேலை
உண்ணுமல்பூரிக்கின்ற கண்ணுடிக்கண்டாங்கி
உளக்குப்பணங்குடுத்து பளிக்காய்பிடித்தபட்டு
சேரன்சோழன்பாண்டியர்கள் திரையிட்டசூரியகாந்தம்
செந்தலையநீளப்பட்டு சந்திரகாவிவாழத்தாரு
நாரணன்வர்னத்துப்பட்டியும் நற்பவளக்கண்டாங்கி
நாட்டுக்குவாய்த்தானுதைய ருமனும்பீதாம்பரமும்
சூழக்கடுக்காயபிடித்தோய்ந்த மண்கண்டச்சேலை
சொருகுதலைத்துகிளு மருகுதலைப்பணியும்
சுந்தரியுங்லந்தாள் சுருதிதிரைவளைந்து
தொட்டிற்கட்டுச்சப்பாத்து தூங்குமஞ்சல்மீதிருக்கும்
இந்திரநீலமுதலான யெண்ணிரந்தப்பட்டுகளை
ஏந்திழையார்தங்களுக்கு யிசைந்தபடியேகொடுத்தார்

---

## வேறு.

எடுத்தாளிடைகட்டும் பட்டுங்கொல்லப்பட்டெனுஞ்சித்தாடைபிட்
டாம் உடுத்தாள் கொள்ளப்பட்டு சீனப்பட்டாளிபட்டு தண்டை

பொற்பணியாம் சித்தாடைப்பட்டு சிவந்தலைருமனும் சீனம்வங்கா
ளப்பட்டாம் நன்றுடல்காணு மடவாரையொப்பிக்கும்நாட்டுவர்ணச்
சேலைவர்ண்மணிப்பட்டுமாம்பட்டுகூம்பட்டு வேள்வைப்பட்டுச்சேலை
அன்னகருக்கள் பகளக்கருக்கள் வழகானமேகவல்லி
மேகவர்னப்பட்டு விரவாளிப்பட்டு வேள்ளைவைப்பட்டுச்சேலை
ஆகவர்ணங்களமைத்திடுஞ் சாலுவையாதித்தகாந்தப்பட்டாம்
ஆதித்தகாந்திப்பட்டாத்துப் பட்டரைகொட்மடங்குபூவாளிப்பட்
டாம் சாதித்தகாரியந்தள்ளாமற் கார்க்குஞ்சதுர பீதாம்பரமாம்
பீதாம்பரப்பட்டுகோபாலகண்டாங்கிபேரொளிபோற்சேலை
ஆதா வுமாலையணிமாலைத்துத்திப்பூ யானைக்கண்டாங்கிச்சேலை
சேலையெடுப்பாளுடுப்பாள் மஞ்சல்பூசி சிங்காரப்பொட்டிடுவாள்
ஏலங்குழலுக்குசீப்பிட்டுமெய்யிட்டு யெண்ணவொண்ணுப் பணிபூண்
டாள்

---

## வேறு.

உடுத்தபணிக்கிசைய வெடுத்துமணியணிந்தாள்
கடுக்கனுக்குமணிகாதுக் கிசைந்தபணிகள்
பயளத்திருர்காரை பாரவயிரக்கடுக்கன்
சவடிக்கடுக்கனோடே சங்கைபொற்பணிகள்
இசைந்தநகைகாது தனில்ரத்தினமணியணிந்து
அசைந்தகாதுக்கிணங்க யழகுமணியணிந்து
பழுத்தகோவங்கனிவாய் பாவைமுத்துமாலையம்மை
களித்துக்கிணங்கும்பணிகள் கன்னியரெடுத்தணிந்து
ஒட்டவடம்பாம்புவடமுத்ததாலி சங்குடனே
சித்திரக்குழல்முடித்து திருக்கண்டமாலைசாத்தி
பாடகமுங்காலிலிட்டு பைரதவண்டையிட்டு
நாடகமுத்துமாலையம்மன் நல்லபொன்னில்பீலியிட்டு
ஏட்கவண்ணப்பூங்குழலா ளிசைத்தசிலம்பணிந்து
சூடகவளையலுடன் துடியிடையாள்தானணிந்து
காலமோதிரமணிந்து கனகெனவேபீலியிட்டு
மேல்மோதிரமணிந்து மேல்மயிலடியுமிட்டு

பாதாதிகேசமுடல் பைங்கொடியாள்சந்தோஷமாய்
நெத்திப்பிறையுச்சிப்பிறை நேரிழையாள் தாமணிந்து
தாமரையுமாவிலேயுந் தக்கயிருவாச்சிபிச்சி
பூமலருங்கொன்றைகளும் புன்னைப்பூவுமல்லிகையும்
குங்குமமலரியோடே சூழ்ந்தசெண்பகப்பூவாம்
செண்பகப்பூத்தாளம்பூ சிறந்தகருவேலம்பூவாம்
கொம்பிழக்கமுகம்பூவும் கோலவர்ணத்தாளம்பூவும்
நந்தியாவட்டமொடு நல்லவெள்ளெருக்கலையும்
சந்தாரமானமலர் சாரமலர்செவ்வந்தியாம்
செவ்வந்திபூவுடனே செண்பகப்பூமாலைசாத்தி
அவ்வந்திநேரத்தி லழகுமுத்துமாலையம்மன்

---

## வேறு.

முல்லைப்பூ கொல்லைப்பூ சில்லைப்பூக் கொன்றை முடிக்கின்றகொன்
மூன்றுமுகத்துக்குமச்சிப்பூபிச்சிப் பூமுண்டகப்பூசாத்தி[றைப்பூவாம்
கச்சிப்பூசெச்சைப்பூ அச்சமரத்தின்பூகாந்தளிப்பூத்துட்டும்
கருத்தகுவளைசெவத்தகுவளை கருவிழம்பூச்சரமாம்
சூரியகாந்தமிருவாட்சி மல்லிகைதுத்திவிடத்தாலம்பூ
தோன்றிப்பூதான்றிப்பூ தென்னம்புதுய்யயகமுகம்புவாம்
குரிந்திப்பூமாலைசெரிந்திப்பூமாலை குலமாறிபுத்துடராம்
அம்பலப்புச்சிறுவேன்பின்பூகூதிளையாதளைமாதளம்பு
அள்ளிச்சொரிகின்றவெள்ளிப்புபொற்புவும்மெ மாற்று
வரைபுத்துடராம் வில்லைப்புசெங்கருங்காலிவாகைப்புவெள்ளித்தா
வெள்ளைகருப்புசிகப்பு நீலம்பச்சைமேற்படிகுங்குமப்பு [மரைப்பு
சூடிப்புனைந்தவர்மிச்சின்புக்களை கூடுபோலேகுவித்து
தூவிச்சொரிந்தவர் விளையாடமேற்படி துய்யபொற்பாதந்தொட்
[டார்

---

## வேறு.

ஒப்பமிட்டகன்னியர்களோ வியத்தாரொன்றாய்க்கூடி
பட்டுடுத்துமலைசாத்தி பகவானைகைதொழுது

ந்திரனைக்கைதொழுது தாமரையோனைவணங்கி
சண்ணாடி தனையடுத்து கமலமுகத்தைப்பார்த்து
கஉண்ணாடி தனிலுதித்த வுருவாவுருத்தரித்து
கட்டுவர்ணப்பந்தெடுத்து கன்னிமாராடிவர
முத்துப்பந்தல்நீலப்பந்தல் முண்டகஞ்சிறந்தபந்தல்
அஸ்திரவிழிமுத்தாரம்மனி னலங்காரப்பந்தெடுத்து
அரும்பகுழல்விழிக் குரும்பதனமசைய
சுந்தரவேல்பொட்டழகுந் தூயதொருமூக்கழகும்
சந்திரவட்டம்போலிருந்த சமைந்ததிருமுகமும்
செங்கனிவாயுஞ் சிவப்புந்தேன் மொழியாள் தன்னழகும்
அந்தவெள்ளிலைப் பளிக்காயடைக்காயும் வாயிலிட்டு
பந்தெடுத்துலகளந்தாள் பந்தலதுமீதில்வைத்தாள்

விருத்தம்.

எடுத்தனள் பந்துதன்னை யேந்திழைமார்கள்கூட
முடித்தபூங் குழல்கள்சோர முலைத்தடம் விம்மவிம்ம
கடித்தபொன் கலாபமார்ப்ப கன்னிமார்குரவைபாட
அடித்தனள் பந்துதன்னை அம்பலத்தேவர்காண.

---

## வேறு.

திந்தாந்தொந்தோம்மெனவேதான் தேவர்களாகயா[illegible]யதோந்தோம்
அந்தரனோமந்திரமோ அமரர்கள்செயசெயவெனவே [ட
வடிவுருதரிகிடதோமெனவேதான் வரன்கவிமந்திரமத்தளங்கொட்
கொடியிடையசையகுயிலது கூவகொவ்வைமுகத்திலேலட்சுமிநிற்க
தெளிந்தபுனலதுசிரசுருகடவுள் சிவசங்கரனென்றாடிடும்பந்தே
மொழிந்ததிருமறைபாவியகம்பம் ஏங்கிலமரத்தைப்பார்த்தாடிடும்
திருக்குற்றாலம் பாத்திடாய்பந்தே [பந்தே
பகுத்தகுருமொழிபொருளை வடகரைபாவ நாயகம் பார்த்திடாய்
பந்தே, இலங்கையழிவுசெய்ரெகுபதிதொழுதயிராமலிங்கம்பார்த்
தாடுபந்தே, உவர்ந்தவரிகடலுத்தியமகரம் உத்தரகோசம்பார்த்தா
டுபந்தே, தரிகிகிறுதகிடகிறுதகிடதிமியென சங்கரநாராயணர்காடு

பந்தே, பாதவித்தையறிந்தவரைபுரைதெரிந்தபால்வண்ண நாதனுக்காடிடுபந்தே, திங்கள்பொதிந்திடும் செஞ்சடையுடைய திருச்சுழியீசனுக்காடிடுபந்தே, பொங்கியபுலியரவம் பிறையணியும் புவனநாதனுக்காடிடுபந்தே, திருகவுணர்குலமுடிவுசெய்முருகன் திருச்செந்தூரைப்பார்த்தாடிடுபந்தே, ஆடாடுபந்தேபந்தாடுபந்தே யடிக்கடி தானிப்பந்தே, அரையளவுமாரளந் தாடிடுபந்தே.
அம்பலவானனுக்காடாய்பந்தே கொட்டுக்கிசையவிளையாடுபந்தே
குரவையிடுவாருக்காடிடுபந்தேமுட்டுக்குயரநின்றாடுபந்தே
முப்புராதிமாதாவுக்காடிடுபந்தே தோளிற்குதித்தாடிடுபந்தே
துருதிகிடதிமியென்றாடிடுபந்தேஆளுக்கழகுபார்த்தாடிடுபந்தே
ஆதிவயிரவனுக்காடிடுபந்தே நீடியமீனாட்சிக்காடிடுபந்தே
நெல்வேலிக்காந்திமதிக்காடிடுபந்தே எனக்குனக்கென்றாடிடுபந்தே
என்றோழியர்க்கென்றாடிடுபந்தே வீரபத்திரனுக்கென்றாடிடுபந்தே
மேற்படிதப்பிக்கீழ்விழாதேபந்தேபடித்தபாட்டைக்கேட்டாடுபந்தே
பாடாதபெண்கள்கிட்டப்போகாதேபந்தே அடிக்குப்பயந்துதாழ்ந்
அம்மையைப்பார்க்கல்லாமலாடாதேபந்தே [தாடாதேபந்தே
ஒத்தைநகத்திலேபந்தையெடுத்துவுலகளந்தாள்பந்தாடியேவாருள்
இரண்டுநகத்திலேபந்தையெடுத்து இமையாள்பந்தாடியேவாருள்
மூன்றுநகத்திலேபந்தையெடுத்து முத்துபத்திரகாளிபந்தாடியேவாருள், நாலுநகத்திலேபந்தையெடுத்து நாகையலங்காரம்பாடியேவாருள், அஞ்சுநகத்திலேபந்தையெடுத்து அண்ணாமலையைப்பார்த்தாடியேவாருள், ஆறுநகத்திலேபந்தையெடுத்து அருணகிரியைப்பார்த்தாடுபந்தே, ஏழுநகத்திலேபந்தையெடுத்து யேகாம்பரக்காமாட்சியென்றாடியேவாருள், எட்டுநகத்திலேபந்தையெடுத்து யிதம்பரஞ்சிதம்பரம்பாடியேவாருள், ஒன்பதுநகத்திலேபந்தையெடுத்து வுலகளந்தாள்பந்தையாடியேவாருள், பத்துநகத்திலேபந்தையெடுத்து பதியப்பதியப்பந்தாடியேவாருள், கிஞ்சுகங்கொடியாள்கிளிமொழியழகுக் கொருவிலமாகியபெருவிரலழகும், வளந்தனமாமணிமார்பழகுமார்பிலேபூசின மஞ்சணையழகும், காதொருகுழையுமோதிரவிரலுங் கலகலெனவொளிவிடுவளையும், சிவந்தநகையாஞ்சிறுநடைவழகும் திரிபுரைநடனமிடுசுருதினழகும், பொன்னணிந்தகாதும் பூவணிந்தகொண்டையும் புனுகொடுகஸ்தூரிபூவொடுமணமாம் முன்சுனைக்காரிமூவரையீன்றவள் முத்துப்பந்தாடிடுமுறைநடைகள்

டாராய், இருந்துவளர்ந்ததனங்கள் குலுங்கியிருந்துபந்தாடு முறைமைகள்பாராய், அத்தனருளாலேபந்துகளாடி யாயிழைமா தர்கள்முப்புரத்தில்வாழ்ந்திருந்தார்.

---

## வேறு.

சந்தமாயுலகளந்தவள் பெருமைதங்கியகோட்டையிலிருக்க
தாருகன்படையைவெட்டிமீண்டகதைதரணியுள்ளோர்சிறிதுகேண்
சிந்தைதனிலும்விசாலமாகி வருதிங்கள்மேகத்தீவிலே [மோ
சீறுசிங்கமுகசூரன்வங்கிசத்தில் தீர்க்கமாகிவருகிறாள்
கொடியசூரரொடுபட்டுமிஞ்சினபேர் கோத்திரங்களோடுகூடியே
கோட்டையிட்டுயிந்தநாட்டுத் தேவர்களைகொண்டுவந்துசிறையிட்
டான், முடிவில்லாதஅரிபிரமன்தங்களை முடிக்கியோடவெருட்டி
யே, மூன்றுலோகமுழுதும்நமக்கெனவே முட்டித்தோரணங்கட்டி
னான், தெள்ளுமீனுடனேகள்ளுப்பானைகளும் திக்குப்பாலகர்சுமக்க
வே, தேவர்சென்றுகைலாசமாமலைச் சிவனிடத்தில்முறையிட்டனர்
பள்ளிகொண்டதிருமாலுடன் கைலைப்பரமனாருடனேபேசியே
பண்டைதாருதன்னைகொன்றுபோடச்சொல்லி பத்திரகாளிக்காள்
விட்டனர்

---

## வேறு.

தூதுவந்தன்சொற்கேட்டு துடியிடையாள் பத்திரகாளி
பூதப்படைதனையேவி புரப்பட்டாள்கலையேறி
சிலைநுதலாள்சேனையுடன் சென்றனசமுத்திரத்தில்
அலைவாய்க்கரையோரம் அம்மன்படைகூட்டமிட
கடல்கடந்துபோரதற்கு காலேறமாட்டாமல்
ஆடலுடையகாளிபடை அலையுதடாகரைதோறும்
கண்டுநின்றுமாகாளி கையமர்த்திபெரும்படையை
வெண்டிரையினருகாக வேதாளந்தனையழைத்தாள்
விரைக்களபமணிமார்பா வேதாளபூதமெல்லாம்
திரைக்கடலைக்கடப்பதற்கு சிரத்தையில்லைபடைகளுக்கு

நல்லதண்ணீர்கடல்வரைக்கும் நாக்காலேபாலமிட்டு
வெல்லலாமல்லவென்றால் மீண்டிடுவேன்கரைதனிலே
வீரபத்திரகாளியுடன் வேதாளமேதுசொல்வான்
பார்முழுதும்பினறவளே பத்திரமாகாளியம்மா
தாக்கமுடன்மூக்கையொட்டி தடவுதற்குமெட்டாது
வாக்குடையகடல்வரைக்கும் வளருமோநாக்கதுதான்
துரும்பைத்தூணுக்குகின்ற தொழிலெனக்குத்தந்ததுண்டால்
வரும்பெரியகடல்வரைக்கு மலைவரைக்குநீட்டிடுவேன்
ஆதித்தமகள்மாகாளி அவனுக்கைநீட்டச்சொல்லி
கொடுத்திருந்த அச்சரத்தை சூதங்கொண்டெழுதினளே
தடயாவுன்னுக்கையினி சமுத்திரத்தில் நீட்டுமென்றாள்
நெடிதானவேதாள னீட்டினான்னாக்கதனை
ஆருஞ்சென்றேருதற் குயகலமிருகாதவழி
தாருகன்கோட்டைவரைக்குந் தன்னுக்கைநீட்டினளே
வலக்குரங்குபடையேற கடலைதீர்த்தாப்போல்
கவிலறியப்பேய்படைக்கு நாக்காலேபாலமிட்டார்
பாலமதிற்குதிரனபோட்டு படைகடலிலேறுதடா
நீலவர்ணக்கடலதிலே நின்றசொல்லேறியபின்
ஆதாரமாகவந்த அம்மைபத்திரகாளியுடன்
வேதாளம்நாக்கதிலே மிதித்தாலுமெச்சியென்றே
மந்திரத்தின்முடுக்காலே வாகனமங்கலையேறி
அந்தரத்தேகெவுனமிட்டு வப்படியேமுன்போனாள்

---

## வேறு

வீரக்குறவையைதாருகன் கேட்டுவெகுண்டு
விட்டானேதூதனைக் கிட்டப்போய்பார்த்துவாவென்று
பாரிட்டதூதன்படைக் கெதிராகவேசென்று
பத்திரமாய்க்கோட்டை கொத்தளத்தேரியேபார்த்தார்
கூறியபார்த்தோடித்தாருகன் முன்னேகும்பிட்டு
கொள்ளிவாய்ப்பேய்கள் கூட்டிவாராள்காளியென்றார்
மாறிட்டபெண்ணோடே யான்பிள்ளைபோர்புரமாட்டேன்
வாதுக்குப்போர்செய்ய வாருந்தளகர்த்தமாரே

கூட்டிவருஞ்சுடுகாட்டுப் பசாசைவெருட்டி
கொண்டுவாசென்றந்த வண்டமாகாளியைக்கொல்ல
கேட்டுத்தளகர்த்தர் கூட்டமிட்டேகெட்டியென்று
கெட்டுப்போரபுத்தி கொண்டவர்கிட்டமுடுகி
தாருகன்கோட்டையிற் சம்பிரமஞ்செல்லாதுபெண்ணே
தப்பிப்போமென்று சருக்காமலேசுத்திவந்தார்
வாருங்கோயென்று வலதுதுடைதட்டியெதிராய்
வாய்த்காரமிட்டவன் மண்டையிற்கல்கொண்டுபோட்டார்

---

## வேறு.

தத்திதத்தியாகப்படை கோட்டையைவளைந்தார்
தாருகன்படைக்குத் தளக்கர்த்தன்வந்தெதிர்த்தான்
பத்துலெட்சங்கோடிபடை சுத்திவந்துநிற்க
பத்திரகாளிதூதுவிட்ட சித்திரக்கன்னிவந்தாள்
விந்தையுடனந்தரத்தில் வந்துநின்றுசொன்னாள்
வெட்டிக்கொண்டுநீங்களெல்லாம் பட்டுக்கொள்ளப்போறீர்
இந்தஅண்டத்தைவிழுங்கி யேப்பமிடவல்லாள்
இட்டகோட்டையோடு களையேந்திநிற்கவே
பிடித்துவந்ததேவர்களை முடுக்கிடுவீர்சும்மா
பெண்டுகள்தானிட்டசோத்தை வுண்டுகொண்டிருப்பீர்
வடிப்பமாகமட்டைமக்கள் படைக்குவந்தெதிர்த்து
வல்லயத்தைப் போட்டு வாயிற்புல்லைக்கௌவப்போறீர்
தெண்டாயுதஞ்சுமப்பதற் கிரண்டாயிரம்பூதம்
தேவிபத்திரகாளி பத்துகாதவழிநீளம்
பண்டைபத்திரக்காளியுட கொண்டைசடையொன்று
பத்துநூறுனைகட்டும் பந்திக்கயறுகும்
செத்துப்போரபுத்திவந்து சுத்திக்கொண்டுதானல்
சேமத்திலேசெல்லொட்டாது கோபத்தைதணிக்க
குத்துப்பட்டு மூணாம் பொத்துபட்டபோது
கொட்டுமுழக்கோடேவந்து கட்டியழுவாரோ
பத்திமான்களாயிருக்கும் புத்திமான்கள்சோ

பச்சைதின்னும்பேச்சிமுத்தை பழிகொடுக்கவந்தீர்
மூத்துநரைத்திடுமுன்னே சொத்துக்காக செத்தால்
முத்திகிடையாதகட்டை புத்திக்காரனுனீர்
பாத்திநீர்கிணத்திற்குள்ளே. பாய்ந்திடமாட்டாதே
பாடுகாண்பதன்றியுங்கள் வீடுகாணமாட்டீர்
இத்தனையுங்கேட்டதள கர்த்தனென் சொல்வான்
இந்திரசாலவித்தைகொண்டு வந்தரத்தில் நின்றாள்
சித்திரமாய்ச்சொன்னையுங்கள் பத்திரகாளிதன்னை
செட்டுக்காரி தாடகக் கெட்டிக்காரியென்றார்
பச்சைப்பொட்டுபோட்டு காலில்கெச்சத்தையுங்கட்டி
பாடிக்கொடுபோயிவளை யாடச்சொல்லுவாயே
மிச்சமுள்ளசேவகத்து வீட்டுக்காரனெங்கே
வெட்டிக்கொன்றுபோட்டோ யிவள்பட்டத்திற்கிருந்தாள்
பட்டத்திற்கிருந்துபடை வெட்டிப்பார்க்கவந்தாள்
பார்த்திடும்படிக்குச்சற்றே கூப்பிடுங்களென்றான்
கட்டச்சியாயிருப்பாளோ நெட்டச்சியோசொல்லு
கைக்குறலிவித்தையுண்டால் காட்டச்சொல்லுவாயே
மேட்டிவார்த்தையாக நாக்கைநீட்டிடாதேவீணே
வெண்டயக்குறட்டெரியால் மண்டைகீரிப்போவாய்
கொட்டைப்பாக்குபோயேநின்ற பெட்டிமக்களேநீர்
சூலியாயிருப்பாளவள் நீலியென்றுகேட்போம்
துள்ளிப்படை வெட்டும்போது பிள்ளைபெற்றிடாளோ
காலத்திலேதூதுவந்த கோலக்காரிதன்னை
கடித்துக்கொல்லவேணு மிங்கேபிடித்துவாடாவென்றான்
வாயுடையப்பேய்ப்படையைக் கூப்பிடுங்கள்பார்க்க
கோட்டிக்காரிவீட்டிதன்னை தீட்டுகிறாளெனவே
மாட்டோமென்றால் பந்தம்பிடித்தாட்டுகாணவேணும்
வேப்பிலையும்பூக்குடமும் நாய்ப்பறையுமுண்டால்
வீரமாகாளிபடை வெட்டதக்கதில்லை
அம்மையுடகோபத்தையோராட்டுகுட்டிதீர்க்கும்
அங்கதற்குமில்லையென்றால் பொங்கப்பானைதீர்க்கும்
வனமாகச்சிவனுமெங்கள் மாலும்வரவில்லை
வாச்சுதென்றுபேய்ப்படைமேல் ராட்சதரைவிட்டாள்

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
9 - OCT 1913
MADRAS

ஆனைத்திரளிலேயொன்றுலச்சமேவினார்
அடுத்தகுதிரையில் மூன்றுலச்சமேவினார்
சேனைத்திரளிலே பத்துலச்சமேவினார்
செம்பொனிடக்கய தேரைத்துரத்தினார்
கொம்பைக்குலுக்கியே மதகரிசத்தத்தினாலே
குன்றுமலைகடலெர்க்க நின்றுகுலுங்குதாம்
பம்பைக்கொட்டுக்காரர் தொனிக்கின்றகுறவைதான்
பாதாளவுலகுக் கப்புரங்கேள்க்குதாம்
வெட்டுகுத்துகொல்லு பிடியடியென்றசத்தம்
வெள்ளிக்கைலாசமலை மேலுங்கேட்குதாம்
சிட்டுக்குருவிக்கி தட்டுக்கண்ணிவைத்ததுபோல்
தேரைச்சுத்திவிட்டு வளைந்தானே தளகர்த்தன்
தீட்டுக்கத்திபோலேயிருக்கின்றபூதங்கள்
சேதப்படுத்தாதே வீட்டுவேலைக்காமென்றார்
வீட்டுவிளக்கையுந் தீவெட்டியாய்ப்பிடிக்குமே
வெருட்டிப்பிடித்துவந்தா கிழட்டுப்பசாசுகளை
தூதுசொல்லிவந்த பெண்பிள்ளையைப்பாருங்கள்
தூண்டிக்கொடுக்கின்ற தேவர்வீட்டைபிடுங்கோ
பூதப்படைவந்து செயம்பண்ணப்போகுதோ
போர்க்குத்திரமான வீரபத்திரனில்லையோ
தெண்டாயுதங்கொண்டு துரைப்பெண்வருகிறாள்
திருப்பகடலிற்போய் பெருமாளையெழுப்பட்டோ
சண்டைபண்ணச்சொல்லி பெண்டுகளைவிட்டதற்கு
தவழக்கைலாசமலை தன்னைபிடுங்கிறேன்
நாடிவீசையில்லா பேடியோடேபோர்செய்ய
நமக்குபெண்களுண்டால் களத்திலேநடத்துங்கள்
மோடிபண்ணிக்கொண்டு தாடிவீசைக்காரரெல்லாம்
மூப்புக்கிருந்தவளை சுத்திவளைந்தனள்
கண்டசரம்பூண்டு காதில்பொன்னோலையிட்டு
கலசத்தனகிரிகுலுங்காமல் கச்சைகட்டி
கொண்டைமேற்பச்சைக்கொழுந்தாலே கிளிப்பிள்ளை
கொப்புக்குளைவள்ளிக் கொடிமீதுபுரளவே
தங்கக்கடகமுங் கணையாழிமோதிரமும்
சகலபகல்வத்தி தனைப்போற்பிரகாசிக்க

கொங்கைப்பெருக்கிலே யசைக்கின்றமுத்துவட்டம்
குறுணிபணைச்சேலை கொய்தகத்திச்புராளுதாம்
முருக்கம்பூவொத்த யிதத்தநடுககயில்
முல்லையரும்புப்போலே பல்லிளெளிதெரியுதாம்
கோர்த்தகேடயமுங் கத்தியுங்கொண்டொருகையில்
கொழுத்தவாகனத்தின் குதின்காலைத்தட்டினரே
மதத்தயானையின் மத்தகத்திற்பாயுதாம்
மலைக்குமேலேழுதளத்திலேமிதிக்குதாம்
எதிர்த்தவரக்கரை சக்கரம்போலறுக்குதாம்
எறியுலக்கைபோ லிடிக்குதேகோட்டைதன்னை
குத்துஞ்சமுதாடு யீரலுள்ளேகுடையுதாம்
கொண்டைமயிர்தன்னை காட்டுச்செடியிடிக்குதாம்
இரத்தவடிவோடே சுத்தவீரரோடவே
இரைக்குவேணுமென்று நரிக்குட்டிமரிக்குதாம்
கோட்டைகிடங்கிலே பதிவைத்தகிங்கிலியர்
குரட்டுவளத்தடி யெடுயோடேகிடக்கிறார்
தாட்டீகமுள்ள தளகர்த்தனுடம்பிலே
சலங்களோடியெலித்தாரைப் போல்துரக்குதாம்
கோலபத்திரகாளி யெரிக்கின்றதிரிசூலம்
குதிரைத்தலைகளை கொத்தளத்திலெறியுதாம்
சாலக்கணநாத ரெரிகின்றசக்கரம்
தப்பியோடும்பேரை முன்னெட்டிமறிக்குதாம்
பார்த்தயிடமெல்லா மக்கினியாயெறியுதாம்
பாவிராட்சர்மேல் சூராவளிவளைந்துதாம்
போர்த்தமண்மழைகள் கல்மழைகள்பொழியுதாம்
பொந்துதடிக்கம்புயானை யோடேபொருதுதாம்
கண்டகோடாளி மண்டைகளையுடைக்குதாம்
கட்டிக்கவணெறிப் பிட்டிகளைக்கார்க்குதாம்
தண்டாயுதம்போய் தடம்பற்றியடிக்குதாம்
தாமரைவிருதுகள் தாருகனைக்கூப்பிடுதாம்
அந்தரத்தில்நின்று குலவைகள்முழக்குதாம்
அஞ்சுதலையுள்ள வலம்புரிமுழங்குதாம்
சிந்தியோடிப்போன ராட்சதரைதுடருதாம்
தேவிபத்திரகாளி திருத்தேரைநடத்தித்தாள்

## வேறு.

கோபமாய்க்காளியுந் தாருகன்சேனையை
கொல்லென்றுதெண்டாயுதத்தைக்கொடுத்தாள்
தூவுஞ்சரமாரி தன்னைச்சொரிந்து
சுத்தினார்கலக் கொண்டெரியத்தொடுத்தார்
தாவியேவெள்ளாடு போலேதரித்தார்
கரும்பனங்காய்போ லுருள் தலைகள்
ஏவல் தளகர்த்த ரெல்லாரும்பட்டார்
என்றுபோய் சொன்னார்கள் தாருகன்கிட்ட
பெண்பிள்ளைக்கிந்த பிலன்வந்துதோதான்
பேயோடேசென்று போகவிதித்தானே
பண்டுள்ளமூலப் படைகளைக்கூட்டி
பத்திரகாளி படையோடெதிர்த்தாள்
பூதங்கள்தெண்டா யுதங்கொண்டுபோட
புரண்டுவிழுந்து புரங்காட்டிப்போவார்
மாதங்கிபத்திர மாகாளிசேனை
வம்பிலேகைகொள்ளி கம்புகொண்டாட
சவத்தையெடுத்துத்தலை மேலேபோட்டு
தாங்களுங்கூட சவமாய்க்கிடப்பார்
அவத்தத்தில்வந்து அகப்பட்டோமென்று
ஆயுதங்கீழ்ப் போட்டரகராவென்பார்
தத்துங்குதீட்டிய பாரைக்கோலாக்கி
சாயவோகிள்ள வந்தோமென்றுபோவார்
குத்தும்பரிசையை கூடையாய்வைத்து
குட்டங்குளம்வெட்டும் ஒட்டர்கானென்பார்
தாருகன்கூடவே வந்தசனங்கள்
தட்டழிந்தொக்க சமரிலே வந்தார்
தேரைநிறுத்தியே தாருகன்றானும்
சியத்தைப்போலொரு மாயத்தைசெய்தார்
அட்டையுந்தேளு அரளப்பாம்பாக

அடுத்தேகடிக்க தொடுத்தேகினானே
ஒட்டுநாயட்டை புழுதுண்ணிவந்தேதான்
ஒவியுந்தேவியு மாயத்தைக்கண்டாள்
திட்டமாய்பொய்க்காலு கட்டிமாகாளி
தித்தியென்றொருத்தி திருநடனஞ்செய்தாள்
புட்டாப்புரத்தவள் பொய்காலினாலே
புகுந்தயையெல்லாம் பொடிபட்டுப்போக
தாருகனேறிய தேரலங்காரம்
தன்னைக்குறைத்தாளே சக்கரத்தாலே
கூரியவேலாலே தேரிலேபூட்டு
குதிரைத்தலையைக் குரைத்தாளிகாளி
சிங்கக்கொடியுள்ள தேரினையருத்து
சீரியதாருகன் மேற்சென்றுபாய்ந்தான்
எங்கடாபோவாயினி யென்றுசொல்லி
எருமைக்கடாவா யெதிர்த்தானரக்கன்
கொம்பினால்பேய்களை குத்தித்துரத்தி
குன்றுமலண்டங் குலுங்கப்போகுதாம்
அன்பாயிரேழு பதினாலுலோகமும்
அடங்கலுங்காளி குலுங்கிடக்கண்டு
எருமைக்கிடாவோ டருமைபாராட்டி
இரண்டுகையோடே யெதிர்க்கப்படாது
அருமையாமூன்று திருமுகங்கொண்டு
ஆறுகையோடே யவனையறுத்தாள்
எதிர்த்துக்கரத்தொடு மதத்தேகுதிக்க
எருமைக்கடாவிலே யேதினாளம்மை
குதித்தேமுதுகினிற் கொண்டபொழுதே
கொம்பைபுரட்டி குலுக்கியேவெட்டி
எப்படியிருகு தென்னிடதுகாலாலே
இரண்டுகொம்புக்கு நடுமண்டையில்மிதித்தாள்
அப்படியென்னம்மை யெருமைக்கிடாவேறி
அரிவையர்கள்சேரவே குரவைகளையிட்டார்

சோறுங்குருதிப் பிணங்களைத்தின்று
துள்ளிவிளையாடுதே கொள்ளிவாய்சேர
புரண்டெழுந்து புரங்காட்டியேபோவார்
மாதங்கிபத்திர மாகாளிசேனை
செருத்தேமழுக்கொண் டறுத்தாள்தலையை
கீழேவுடம்பு துடிக்கவேரத்தம்
கெண்டிதாரையிட்டு மண்டியேபாவம்
சூழப்பரக்கின்ற ரத்தத்தைவர்ரி
சூல்வண்டிதன்னிலே யேத்தினாளம்மன்
வண்டியிலிரத்தந் திரண்டுவடிவாக
வந்துபிறந்தானே வண்டிமலையன்
மலைக்கன்னிமார்கள் குரவையிட்டார்கள்
பிறந்ததோர்வண்டி மலையன்றனக்கு
பிலமுங்கொடுத்துவுடன் கூட்டிக்கொண்டார்
அந்தரதேவர் சிறையையுமீட்டி
அழியாதசேனையுடன் மீண்டாளாம்.

---

## வேறு.

சூலிகபாலிகிருபாகிரி திரிபுரசுந்தரிபடையுடனே
துட்டர்சனத்தையறுத்தவள் மீண்டவள்தொடுகடலிடமாக
சாலவேதாளம்நாக்கிடு பாலந்தன்னிற்படையேற
தந்திரமானவளந்தரமீது சமைந்துகளைகொண்டாள்
அந்தரதுந்துமிவந்து முழங்கிடவமரர்கள்விருதாத
அலகைப்படையொடுபலகைப்படையென திரபடைசதிராய்
சந்திரவட்டமிடகயமேல் வருசந்திரனைத்தொடவே
தாருகன்சங்கரிதெய் தெய்யெனதிரைமுழங்கிடவே
பார்மகள்பூமகள்நாமகள் கும்மிகள்பாடியுலாவிவர
நற்பலகைக்குறளிபடை செப்பிட்பந்துகளாடிவர
யாமரைலெட்சுமிசரணெனவே வெஞ்சாமரைவீசிடவே

## முத்தாரம்ம்மன் பேரில் வில்லடிப் பாட்டு.

தரிகிடகிடதிகதிமிடுனச்சிலர் சதுர்முறைபணிமோர
குமுகுமுகுமுவெனசமுகத்திலவர் குரவைதொனியிடவே
கொடுதுடிகிடுபிடிமடமடென கொட்டினர்மட்டறவே
கமலப்பொரியினிகுதிரைச்சிலமணி கலகலெனவே
கையபகலொத்தியிருட்டைவெருட்ட கபாலவிளக்கெறிய
வானவர்தானவர்தன்னொடு வண்டிமலையனருகில்வர
மங்களமாகியவெங்கலமுரசுகள் மட்டொடுகொட்டிவர
மோனுபரணியென்னீஸ்பரி முளங்கியதம்பட்டம்
முப்புராதிசெவியிலே கேட்டுமுந்தலையெழுந்திருந்தார்

---

### வேறு.

முப்புராதியும் நீலன்குமுர்தனும்
முந்தியேவந்தொருதர் சொற்கேட்டனர்
செப்பமாய்தேவர்தன் சிறைமீண்டிங்கே
தென்கடலை கடந்துவருகிறார்
தாண்டியம்மனெதிர் வாராளாமென
சந்திக்கப்போமெனப் புரப்பட்டார்
நடைதிடீரென்று டம்மானங்கொட்டினார்
நல்லகீர்த்தி வயிரவநாதனும்
கடல்வரைக்கும் கோட்டைவரைக்குமே
கைவிளக்கு பிடித்தாரேமன்னிமார்
பாடகக்காச்சலக்காரி பேச்சியம்மை
பத்தியாய்ப்பச்சை பல்லக்கைதாக்கினார்
நாடகப்பெண்கள் முன்னணியாய்ச்செல்ல
மாட்டுப்பேய்ப்படை பின்னணியாய்ச்செல்ல
நாகமாணிக்க கற்பகநாச்சியார்
நாடியேமுன்பு வைத்தவர்கும்பிட்டார்
ஏகமாக யிருக்கின்றயீஸ்பரி
எங்கள்கோட்டைக் கெழுந்தருள்வாயம்மா
வண்டிமலையனும் வண்டிமலைச்சியும்

வந்துமுப்புராதி பங்கிலேகூடினர்
கொண்டகோலங் குறையாமலீஸ்பரி
கோலெருமைக் கடாவின்முதுகிலே
அன்றுமூன்றுமுகங் கையாறுமாய்
அகிலாண்ட செவுந்தரிதான்வர
தோன்றுங்கோட்டைக்கு மிங்புகடலுக்கும்
தூவினர்புஷ்ப மாரியைப்பாதமே
ஏழுகாத வழிக்கிலக்காக
இட்டகாவண பந்தலிலேவந்தார்
நாழிகைமணி தூக்கியகோபுரம்
நாலுவாசலில் நாச்சியார் வந்திட்டாள்
ஆள்நெருங்கிய பிரம்படிக்காரர்கள்
அங்குமிங்குமடித்துநொருக்கினர்
கூணிபூதங்கள் வாசலில்லாமலே
கோட்டைமாமதிலேறிக் குதிக்குதாம்
பெரியமாதா வுலகளந்தாளம்மன்
பெண்கொடியார்கள் முன்பெதிரேவந்தார்
திரிபுரக்கோட்டை முச்சந்திவீதியில்
தென்றல்வீசிய மண்டபக்கோவிலில்
சங்குநாதமுழங்கி மணிதட்டி
சந்தனத்தா லெழுகுந்தலத்திலே
மங்கைமூன்று திருமுகக்கோலமாய்
வடக்குவாசல்செல்வியாய் வந்தரசிருந்தாள்.

---

## வேறு

வீரபத்திரன்முப்புராதி வீரவயிரவநாதனுமாய்
தாருகனேடேபடைபொருத்து தகைதீர்த்திடவேணுமென்று
பேச்சிமுத்துமாலைதூத்துவாரிப் பெரியவரக்காரியுலகளந்தாள்

காச்சக்காரியென்னும்பெரியமுததாள் கண்ணனூர்மாரியிவர்களுக்
கு, சுத்ததிருமேனிநீராட்டி சுனையித்தண்ணீர்கொண்டுவாருமென்
றார், சித்திரமாதர்பொற்குடமுஞ் செப்புக்குடம்வெள்ளிக்குடமெ
டுத்தார், எடுத்துதிருவடவாலருகே யேற்றபுதுச்சுனைநீரங்கி
உடுத்ததுகில்போட்டுமொத்துடுத்தி யுள்ளங்குளிரவேநீராடி
பதியிலரக்கியர்குரவைபாட பண்பாய்முழுக்கியேயெழுந்திருந்து
முதியதாமரையிலைதனிலே முத்துப்போல்தண்ணீருளக்கண்டார்
கண்டுதண்ணீர்மேலாசைகொண்டு கையினால்வாரித்தான்குடித்தார்
வண்டுகுழலார்கள்திருவயிற்றில் மாயமாய்கெற்பந்தரித்திடுமாய்
குடத்திநீர்கோதிபூப்போட்டு கும்மிவிளையாடிகரையேறி
இடுக்கிக்குடங்கொண்டு தொங்கலிலேயிருகைவீசிவழிநடந்தார்
மூன்றுமுகங்கொண்டமாதாவு முடிமேற்சொரிந்தவர்நீராடி
அன்றுசிவபூசைநிறைவேற்றி அரக்கிமார்கூடிவிளையாடி
அம்மைசொரிமுததாளுலகளந்தா ளருளினால்கெற்பமுண்டாகி
செம்மையாகவேமடந்தையர்க்கு திங்களொன்பது திகைத்திடுமாம்
தோன்றுபத்துமாதம்பிறந்திடவே தொட்டயோகங்கள்தவறிடுமாம்
மூன்றுகோட்டைக்குமாதனமாய் மூன்றுபாலன்தான்பிறந்தார்

---

## வேறு.

முத்துதம்பிமுத்துகுமாரன் முதல்வன்சந்தணன்வாள்குமாரன்
வித்தகமாய்த்தான்பிறக்கமேற் குரவையிட்டனராம்
பிறந்தபிள்ளைபலன்கேட்க பெரியமுப்புராதியவன்
சிறந்தபுகழ்சோதிரியை சென்றுகூட்டிவந்தனரே
வயிரவநாதன்வீரபத்திரன் வண்டிமலையனிருக்கிறான்
பயில்வல்லசோதிரியன் பரல்பரத்தியேதுசொல்வான்
அட்டமத்துசனியனல்லோ வாண்பிள்ளைவந்தேபிறந்தான்
மகத்திலேசனியிருந்து வாழுகிறகாலமதில்
சுகத்திலேயிருக்கவொட்டான் துற்புத்திவிளைத் திடுவான்
அதிகாரம்பண்ணியிவ னக்னியிலேயிறப்பான்

என்றுரைத்தசோதிடர்க்கு யேதுசொல்வான்மும்புராதி
நன்றுகேடாய்வந்ததுண்டால் நம்மாலேஎன்செயலாம்
ஊழிவிதியல்லாது வொன்றுவரமாட்டா
பாழானநாட்பிறந்தால் பாலகனைக்கொள்வதுண்டோ
இடையிலேசடைத்திருந்தா லிமராசன்விடுவானோ
வடிவுடையபிள்ளைகளை வளர்த்திடுங்களென்றுரைத்தார்
பாலூட்டிநீராட்டி பஞ்சணையிலேகிடத்தி
ஏலவேமுத்துதம்பி யிருந்துநின்றுநடந்தோடி
முத்துக்குமாரனுக்கு மூன்றுவயதாகியபின்
விஷத்தகமாய்த்தெருவீதியில் விளையாடும்வேளையிலே
ஆள்வல்லபிள்ளைகளை யரசிருத்தவேணுமென்று
ஏழுவயதாம்போது யெழுத்தோதவைத்தனராம்
வாத்தியார்தனைப்பிடித்து மரத்தோடேகட்டிவைத்து
சீத்துவமாய்த்தோழரொடுத் தெருவீதியிற்பந்தடித்தான்
அரிபிரமராணையிட்டா லடங்காமலேகுதித்தார்
பெரியமுத்தாராணையிட்டால் பேசாமலேயிருப்பான்
குடிபோட்டுவிளையாகுக் குலைக்கழகுசெய்கையிலே
பதினெட்டாயுதம்படிக்கம் பணிகருடனேதுசொல்வான்
இதத்திலேவார்த்தைசொல்லி யெடுத்துப்போட்டேமிதிப்பான்
உதட்டிலேபிடித்திடித்து வூழியமாய்வேலைகொள்வான்
விந்தையுள்ளமுப்புராதி வீரவண்டிமலையனுமாய்
சந்தணக்குமாரனவன் றலையெடுத்தநாள்முதலாய்
குடிநடுங்கபடைநடுங்க கொள்ளையிடவேதுணிந்தார்
கெடுதிவந்துதான்பறந்து கேள்வியற்றுப்போனதுவே
வந்துநந்திசொன்னதெல்லாம் மறந்துவிட்டான்கெடுமதியால்
அந்தரமாய்க்கெடுதிபண்ணி யரசிருந்தான்முப்புராதி

---

வேறு.

இஷ்டத்துடனிட்ட கோட்டைக்குள்ளேமுப்புராதி

ஈஸ்வரனாணையில்லா திவனாணை நடத்தி
கோட்டாலைக்காறிகளாடத் தொடுத்தாரேகூத்து
வீரொடுவாய்வுபகவான் வெண்சாமரைவீச
மிக்கான அக்கினிதேவன் தீவெட்டிபிடிக்க
பெருஞ்சேயிந்திரப்பெண்க ளடப்பம்பிடிக்க
பேனியேநாரதர் வீணை புலவோர்படிக்க
வம்பிலேமன்மதன் கம்பளிசெம்புசுமக்க
மங்களவாச்சியம் வெங்கலதம்பட்டங்கொட்ட
கும்பிட்டுதேவேந்திரன் வந்துமேகட்டியங்கூற
கோலக்குபேரனு மோலைக்கணக்குகுறிக்க
சொற்படியாதிபிரமனுஞ் சோதிடஞ்சொல்ல
சூழ்வமராஜனும் வாய்பொத்திகைகட்டிநிற்க
கற்பகவிருஷங்கள் கால்விலங்கோடேபற்கெஞ்ச
கீழுமேலுமா யீரேழுலகத்தார்சேவிக்க
மடித்துக்கிடந்தென்னை சேவிக்கவராதபேரை
வாய்மட்டுக்குங்குழி வெட்டிப்பின்மண்சுமையென்பார்
அடிக்குப்பயந்து துடிக்கின்ற சூரின்யறன்னை
அஸ்தகிரியோடெடுத்து விளக்காகவைப்பான்
என்னையல்லால்தெய்வம்பின்னே யுலகத்திலுண்டோ
எண்டிசையானையைக் கொண்டுவாவேறுதற்கென்றான்
சன்னையதாய்முன்னே வெண்ணையுங்காட்டிலேவிட்டு
சங்கரன்றன்னைப்போய்பின்கட்டாய்கட்டிவாவென்றான்
ஆருந்துணைக்கொன்று மில்லாமலிரந்துதிரிகின்ற
ஆண்டிமலையைபடியோடே தோண்டிவாவென்றான்
விருந்திடுந்தெய்வரம்பையர் நாடகமட்டும்
வீட்டுக்குவேலைசெய் வெள்ளாட்டியாக்கினான்வீணன்
ஆணையுடன்தயிர் பானையுருட்டியலைந்து
ஆய்ப்பாடிபூனைக்கு பகற்கடல்நித்திரையாச்சோ
வானிலேயோடிய மேகங்கள்தன்னைமறித்து
வந்துதன்காவண பந்தலிடும்படிவைத்தான்
சந்திரசூரியர்வந்து திரியவொட்டாமல்

தார்ராளமாய்நேரே ஓட்விடாமற்றடுத்தான்
மந்திரமாமலைசூழ்கின்ற சக்கரவாளாம்
வையாளிவிட்டுக் குதிரைநடத்திவருவான்
எத்தனைநாளைக்குயீசன் பிறந்துயிறப்பான்
இறப்பதுமீண்டுபிறப்பது மெங்களுக்கில்லை
புத்தியில்லாமலே புண்ணியஞ்செய்யப்படித்தோம்
பூமியெல்லாமந்த யீஸ்வரனுக்கெந்துபோச்சு.
மானமுடனொரு ஆண்பிள்ளையாகப்பிறந்து
வையகந்தன்னை யென்கைவசமாகவேவைத்தேன்
கொஞ்சநாளைக்குள்ளே வீர்த்தைநாமுங்குறைத்தால்
குத்தேவல்செய்யு மடையனென்றெம்மைக்குறிப்பார்
வஞ்சகநாட்டைக்கெடுத்து நாமட்டுமேவாழ்ந்தால்
மாங்காய்தேங்காய்போல நமக்குவில்லங்கம்வருமோ
சத்தியவாண்மையும்யுத்தியும்நித்தியந்தப்பி
சண்டாளபுத்தி தலைமிஞ்சிக்கொண்டுதேயன்னுள்
கீர்த்திமுத்தாளுடவார்த்தை சற்றுகிலுங்கேளான்
கீழுமேலாகநடப்பவர்சொல்களைகேட்பான்
போர்த்தசிவலிங்கபூசை செய்யான்பிச்சைபோடான்
முத்தாருகால்பீடத்திலேறி யிருந்தான்

---

## வேறு.

ஈஸ்பரனைதெண்டனிட்டு யேதுசொல்வார்தேவரெல்லாம்
பேசரியகைலைமலை பிறைசூடும்பெருமானே
வாக்குடையவண்டிமலையன் வயிரவநாதன்வீரபத்திரன்
தாக்குடையமுப்புராதி சந்தணகுமாரன்கையில்
சிவலிங்கத்தைக்கொடுத்தீரே தேவர்களைக்கெடுத்தீரே
அபிமானம்பாராம லதிகாரம்நடத்துகிறுன்
விலங்கிலிட்டான்சிறையில்வைத்தான்வேலைகொண்டான்கோட்டை
யிலே, மயங்குறோமதனாலே மரியாதைதான்போச்சு

இலங்கையிலிராவணன்பேர லெண்மடங்குகொண்டவனும்
பிலங்குறைத்தானினிமேலும் பிழைக்கவொட்டானொருவரையும்
சிவசிவாயென்றசொல்லை செவியிலேகேட்கவொட்டான்
அதன்றனக்குகாளாயாக வைத்தாயோசிவனே
சாங்கமறக்கொல்லுகிறான் சாட்சிசொல்லுவாருமில்லை
நாங்களெல்லாமேவல்செய்யும் நாய்போலேயானோமே
மலைமேலேநீயிருக்க வாடையிலேநாமிருந்தோம்
தலைபுழுத்தநாய்போலே தானலைந்தோமிப்போது
மண்சுமந்துதலையிலுள்ள மயிரெல்லாம்பரிபோச்சு
கண்களில்லையோவுனக்கு கரைக்கண்டாபாத்திருந்தாய்
அதட்டியெங்கள்சென்னியிலே யடிக்குமந்தவேளையிலே
உதட்டுக்குத்தான்துணையா யொருபல்லுமிருந்ததில்லை
கிருபையுடனெங்கள்குற்றங் கேளாதபடியாலே
அருகியாகப்பிறந்தபிள்ளை யாகிவிட்டோமெல்லோர்க்கும்
உம்பளமாயொருவனுக்கு வொன்றிரண்டுநாட்செயலாம்
சம்பளமில்லாவேலை சாமளவுஞ்செய்தோமே
நெஞ்சரித்தமுப்புராதி நீலனவனிடுங்கோட்டை
பஞ்சரித்துகேள்வியற்ற பட்டணமாய்ப்போச்சுதய்யா
உனதுமாமலையல்லாம லொளிப்பதற்கோரிடமில்லை
இனிமேலும்பிழைப்பதற்கு யெங்கேதான்போகிறது
என்றுரைத்ததேவருக்கு யிரக்கமுள்ளயீஸ்பரனார்
மன்றுடையகோட்டைவழி மாலைகட்டிவாருமென்றார்

---

வேறு.

ஈஸ்பரன்சொல்லைக் கேட்டந்தத்தேவரும்
என்கைலைமலையை விட்டேகினார்
வீசுமாமணஞ் சேர்பலபூவினால்
மெத்தமெத்த விதற்பங்களாகவே
நீலேவெள்ளை சிவப்பொடுபச்சையும்

நீலமுங்கருப்பும் விட்டுபூசியே
வாடுதென்னமடல் செய்தகூடையால்
மாலைதன்னை வளைத்ததிலேவைத்து
சந்திரகாந்த தண்ணீரில்பதமிட்டு
தண்ணீயேதளிமேல்க் கண்ணடையிட்டு
விர்தையீசனை சந்திக்கிறேமென்று
விண்ணுமண்ணு மறியவேபேரிட்டார்
சோதிதெய்வ சூடாமணியென்னவே
தோளிலுந்தலைமேலுஞ் சுமைகொண்டார்
வீதிபோய்திரு வாசகம்பாடியே
மீண்டுமுப்புர கோட்டைவழியாக
நடனசங்கீதத் தோடுவருவதை
நண்ணியேமுப்புராதி கண்ணுற்கண்டார்
தடையில்லாமல் நடையிலேபாடியே
சத்தமேதடா முத்துக்குமாரனே
நமக்குப்பூவை சுமந்தவர்வந்தாக்கால்
நல்லவார்த்தையுடன் கூட்டிவாருங்கோ
தமக்குதங்கள் சிவனுக்கென்றேசொன்னால்
தாழ்வில்லாம லோராள்விடெனக்கென்றான்
வண்டிமலையன் வழியைமறித்தவன்
மார்க்கமேதுங்கள் பூச்சுமையேதென்றான்
நண்டைக்கண்ட குரங்கதுபோலவே
நடுநடுங்கிவெடுவெடென்றே சொல்வார்
மேல்ச்சிவனுக்கு பூச்சுமந்தேபோறேம்
வீரபத்திராவழி விடடாவென்றான்
தீர்க்கமுமிருமாப்பையு மின்றைக்கே
தீர்க்கிறேனென்று கோட்டைக்கோராள்விட்டான்
விட்டதூதன் முப்புராதியுடன்சொல்ல
வேட்டைதானென்று கூட்டமிட்டார்களே
சட்டமாகசமைத்து கொடுவந்தீர்
காலமுத்தாருக்கு தாருங்கள்மாலையை

அட்டிபண்ணி யவதிப்படுகிறீர்
அங்குமிங்கு மலைகறீர்வீணிலே
சிவனையேதுக்குத் தேடியலைகிறீர்
செத்துப்போகாதே வைத்துப்போமாலையை
அவனைப்போலநான் ஆண்பிள்ளையல்லவோ
அதுக்குக்கேட்டு யிரக்கென்றான்மாலையை
வட்டஞ்செஞ் சடையானுக்கேயல்லாது
மாலைநாங்க ளிரக்கமாட்டோமென்றார்
தட்டிக்காட்டாமல் சொட்டுப்போடுறாய்
சாம்பல்பூசிக்கு பாம்பல்லோதாவட்டம்
புல்லருகு எருக்கலைத்தும்பையும்
போதவாரி சுபக்கின்றபேயன்காண்
வல்லெலும்பு நெருங்கிக்கிடந்தால்
மாலைபோட யிடமில்லைமார்பிலே
சுடலைக்காட்டிலே தோதகமாடிக்கு
தோளில்மாலை சுமப்பதுவீணடா
மடையன்போலே மரித்தானிவனென்றே
வந்துதேவ ரிருமாந்துகொண்டிரே
பண்ணவர்க்குநா னெண்ணிக்கையல்லவோ
பல்லில்போட்டு பரியடாமாலையை
கண்ணைக்காட்டினான் வண்டிமலையனும்
கைத்தடிக்கொண்டு கன்னத்தில்குத்தினான்
ஈசனுக்குத்தலைவலி கொள்ளவே
இவனைக்கன்னத்தில் போடுபோடென்றாள்
விசையானகருங் கோரைக்காடெல்லாம்
வெந்துபோம்படி பந்தங்கொழுத்தென்றான்
ஒருவன்றோளிலே யொருவனையேத்தியே
ஓடவோடமுதுகிலே போடென்னான்
மருவுமீன்களை மலையாய்க்கோர்த்தவன்
மார்பிலேபோட்டு வழிபோகச்சொல்லென்றான்

கூடைதனை கழுத்திலேபோட்டு கூத்திமக்களை கும்பிடச்சொல்லென்
அழுதழுதுவழியிக் கிடப்பட்டார் [றுன்
கருமிஞ்சம்மட்டுங் கொடுத்தாப்போல்
தள்ளிமாலையை கொள்ளையிட்டேபோனர்
மாலையும்போச்சு சீலையும்போச்சுதே
வாயிற்பல்லு மடிறோடேபோச்சுதே
மூலைக்குள்ளே யிருக்கவொட்டாமலே
மோசம்போச்சுதே யீஸ்வரன்வார்த்தையால்
தப்பிப்போச்சிது காரியமென்னவே
சடுதியாய்த்திசை தப்பவிட்டோடினர்
விசைகொண்டேதலை விரித்தோடியே
வெள்ளியங்கிரி வள்ளலைக்கும்பிட்டார்
பசுபதிபரமா யிந்தாபாரெனவே
பல்பெரக்கி யனியாயங்காட்டினர்
தேவதேவர் திருவுளத்துன்னிய
தீவினையின்னுந் தேவருக்குண்டென்றே
பாவதாரிகள் கோட்டைவழியாக
பாருடங்கெட்டி வாருசமக்கென்றார்

---

## வேறு.

நல்லதென்றரன் சொல்லத்தேவர்கள்
நாங்களின்னம்போய் வாங்கிவருகிறோம்
எல்லைக்கல்லைப்போல் சிவனிருக்கவே
எங்கள்பாவமே பாவமென்பாராம்
செய்யதேனொடு நெய்யும் பாலுமாய்
சேகரங்கள்மேல் பால்குடங்களை
ஐயனேதுணை செய்குவாயென
அண்டர்பண்டுபோல் கொண்டுமண்டினர்
கருடகாரண சிருடியாரணர்

கல்லெறிக்குள்ளே பல்லடிக்கெட
கர்ணம்போட்டு போட்டோடுவார்சிலர்
வல்லக்கைலையில் வாழ்சிவன்றன்னை
வந்துகும்பிட்டே தந்திரஞ்சொன்னார்
புல்லுக்கவ்வியே பல்லுப்போச்சுது
போதும்போதும் நான்போனகாரியம்.
வேதநாயகா விமலநாயகா
ஆதிநாயகா சோதிநாயகா
அரகராவுனக் கபயமென்றார்

---

## வேறு.

ஓடினார்திருக் கயிலாயத்தினுலகமதிலே
உதைபட்டவர்மிதிபட்டவரொக்கக்கூடினரே
கூடைமீனொடுகூடைமாலையும் கூடவேயோர்த்து
கோவணத்தொருதாவடம் சடைகோலம்போய்கும்பிட்டார்
பால்க்குடஞ்சுமந்தாடி பாடியபகட்டாய்நடந்தோம்
பரித்தான்கையைமுரித்தான் பல்லைபரித்தான்சிவனே
கூவென்றவாய்க்குள்ளே மண்ணைகுறையாமலிட்டு
குப்பைநீரொடுசிப்பி நீத்திகுறிபோட்டுவிட்டான்
அடித்தார்கள்ளைக்கொடுத்தார் நொந்துகுடித்தோமையா
அப்பட்டயனென்று சிரைக்கக்சொல்லியடித்தான்சிவனே
குடப்பாலுக்குமதுபானையை கொண்டுபோகச்சொல்லி
குதிங்கால்கொண்டுமிதித்தால் ரத்தங்குதிகொண்டிடவே
இரைசூரியன்ராவணுட சிறையிலிருந்தோம்
இந்தப்பாடுபோலந்தக் காலத்திலில்லையேசிவனே
பரைக்கொட்டுக்கும்பள்ளக்கூத்துக்கும் பாடியாடச்சொன்னான்
பரமேஸபரனென்றவாயிலே பந்தத்தாலேசுட்டான்
உடைபோச்சுதுசடைபோச்சுது நடைகுபாச்சுதையா
உலகமதில்நின்றுதேவர்களொலித்தேமுறையிட்டார்

அரகராதிருக்கைலாசத்தை யாண்டவனேகோவே
அன்பருடபங்கி லமர்ந்திருந்ததேவே
பரமனாயேவுனக்கு பாற்குடஞ்சுமந்து
பட்டுவந்தபாடுதன்னை யிட்டுரைப்போமோ
மலையெடுத்தராவணனை தலையறுத்துப்போட்ட
வல்லமைக்கெட்டாதிருந்தால் சொல்லுக்கேட்கமாட்டரார்
இலேசமில்லையோவுனக்கு மலைமேலேயிருக்க
கிட்டப்போனநாங்களெல்லா மடுத்தப்பிப்போனோம்
கூலிக்காகவைகையாற்றில் கூடைமண்சுமந்து
கொஞ்சப்பட்டுப்போனதற்கே யஞ்சிக்கொண்டிருக்கிறீர்
மாலையொடுபூவும் நெய்யும்பாலையுஞ்சுமந்து
வஞ்சிப்பொதிமாடுபோலே நெஞ்சிப்பொத்துப்போனோம்
ஈடுபெருமாடுதனி லேறியதல்லாமல்
எண்ணத்துமேல்ச்சுமந்து யெண்ணத்தபண்டாச்சு
கூடுஞ்சுடுகாடுதனில் பேயுடனேநின்று
கூத்தாடும்பேர்களுக்கு கோபமும்வாராதோ
உன்றனக்குப்பாலு நெய்சுமந்தபாற்குடத்தில்
ஓட்டோடுயெங்கள்மண்டை செட்டையுமுடைத்தான்
பந்தமானசந்தைக்குள்ளே வந்தநரிபோலே
பண்புகெட்டுநாங்களும் வரிசைகெட்டுப்போனோம்
தக்கனாணமாமனை தலையறுப்பதல்லால்
சத்துருவைக்கொன்றிடுஞ் சமர்த்துவாராதே
பக்கமுப்புராதியுடன் கைக்குள்வேலைசெய்ய
பரமனேயுனக்குநல்ல வழிதருவதுண்டோ
ஏச்சியுண்டவுன்னை முழுப்பிச்சைக்காரனென்றே
ஏச்சிக்கொண்டான் முப்புராதி மிஞ்சிக்கொண்டானையா
குச்சுவீட்டுக்காரனுக்கு மச்சுவீடுண்டானால்
கொஞ்சக்கஞ்சிக்காரனை குடியிருக்கவொட்டான்
சிச்சியிந்தலச்சைகெட்ட சென்மங்கள்தழைக்காய்
செத்துப்போவதுயினிமேல் மெத்தக்காரியந்தான்
பச்சைவர்ணமாயிருந்த பார்வதியைப்பார்த்து

பரமேரன்மகிந்து திருவாய்மலர்ந்தார்
கள்ளமில்லைதேவர்சொன்ன துள்ளபடிபெண்ணே
கால்விலங்குதோள்விலங்குக் காரரிந்ததேவர்
எள்ளத்தனைகுத்தமு மில்லாதபடியால்
என்றனக்குப்பார்வதி யெடுத்துரைத்தாளென்றே
இல்லாதபேர்களுக்கு கொடுக்கவேயறிவீர்
இட்டுண்ணாதபாவிதன்னை தட்டிவைக்கவிட்டீர்
பொல்லாதராவணர்க்குப் போதவரங்கொடுத்து
பூமியெல்லாமவனாலே சீரழிந்துபோச்சு
என்னுடையஅண்ணாவ ரில்லையென்றுபோனால்
இன்னமின்னமுந்தலை யெடுக்குமோவுலகம்
சள்ளையில்லையென்னுடைய அண்ணாரில்லையானால்
சங்கரனேதேவரெல்லாம் பங்கப்படப்போறார்
வாட்டமில்லையும்முடைய மைத்துனரைக்கூட்டி
வரவேணுமேகெருடன் வந்தருளவேணும்
தம்பிரான்கேட்டாள்வார் தனைப்பிரார்த்தனைசெய்தார்

## வேறு.

பாவலர்கள்புகழ் படைத்த பங்கயத்தோன்வங்கிசத்தில்
நாவுலகிற்கீர்த்தி கொண்டநல்லசிவமுனிக்கு
எண்ணிரண்டுபெண்களிலே யிவர்கள்செண்டுபெண்ணாக
திண்ணமுருநாககன்னி தேவருக்குவுபகாரம்
அக்காளுந்தங்கையு மாயானசுனையாடுதற்கு
மிக்கானசுனையருகே விரைந்துநீராடுவாரும்
ஆகாசமாளுகிற வந்தரதேவேந்திரனார்
வாகானவெள்ளையானை வரக்கண்டங்கேதுசொல்வாள்
ஏற்றபுகழானை தனை யிளையவள்கண்டேதுசொல்வாள்
மூத்தவளேயென்றனக்கு முன்பிறந்தநாககன்னி
வெகுதூரந்தனிலிருந்து விரைந்தோடிவருவதினால்
இகழாதபடியாலே யென்னநிறஞ்சொல்லுவேனே

வெள்ளையென்றுவருமானால்வேலைசெய்வாய்நீயெனக்கு
உள்ளபடிகருப்பானா லுனக்குநானேவல்செய்வேன்
இப்படியேசபதமிட்டு யிளையவளுமூத்தவளும்
மைப்புருவக்கன்னியர்கள் வாதுசெய்துசுனையாடி
இளையதெய்வகன்னிபங்கா யேற்றம்வெள்ளையாகிவர
விரைவாகமூத்தளை வெள்ளாட்டிவாடியென்றாள்
வெள்ளாட்டியென்றபின்பு மெத்தவேநாணமுண்டாம்
தள்ளாடித்தடுமாறித் தலைகவிழப்பொட்டென
தன்னுடனே தான்பிறந்து யிருந்தாளேசத்துருவாய்
வண்ணமுத்துப்பெண்கள்முன்னே மரியாதைகெடுத்தாளே
இளையவளாயிருந்துகொண்டு யெண்ணுமல்வையகத்தில்
தலையைச்சிறைத்தவளை சம்பானிலேத்திடுவேன்
என்றுசொல்லிநாககன்னி யெடுத்தாளேசிங்குழலை
மன்றடர்ந்தபூங்குழலாள் வாசித்தாள் வீணைதனை
கட்டுமென்றமானினங்கள் காற்பசுவும்பால்கறக்க
பட்டமரமுந்தழையப் பாடினாள்பலராகம்
நாமமிட்டதலத்திலே நாகமணியொளிவீச
காமமுருபெண்கொடிமுன் வந்தானேகார்க்கோடன்
எனக்குமொருதாயானா யானுனக்குமகளானேன்
மனக்கவலைவருவானேன் மாதாவேயெனக்கேட்டான்
எனக்கிளையதெய்வகன்னி யிடுஞ்சபதம்வென்றுகொண்டாள்
தனக்குநானேவேலைசெய்ய சம்மதியாயிருக்குதில்லை
தொடுத்தவெள்ளைகருப்பாகத் துணிந்துநீசெய்ததுண்டால்
எடுத்தெடுத்தவிதந்தனுக்கு யெனக்கெதிரியொருவரில்லை
மடக்கொடியாள்தங்கள்முன்னே வலக்காரஞ்செய்தவளை
கொடுக்கிலேகண்ணிபோட்டு குரங்காட்டங்கொண்டிடுவேன்
ஏவல்செய்யவிடுவேனோ யிதுவுமக்குவல்லமையோ
பாவையரேபாத்திரெனப் படங்கொண்டுமறைத்தனளே
வெள்ளைமதிநிலவுதன்னை மேகம்வந்துமறைத்ததுபோல்
கள்ளமதயானைதன்னைக் கருப்பாக்கிப்போட்டனளே
கருப்பானகாரியத்தை கண்டுநாககன்னியவள்

மருத்தினிமேல்பேசாதே வாடியென் றுமயிர்விரித்தாள்
மயிர்பிடித்துநடையடியால் மரியாதிகெடுத்தவளே
வெடுவெடென் றுகடுநடையாய் வீட்டிலேகொண்டுசென்றாள்
வீடுதன்னைத்தூத்திடுவாள் மெழுகுவாள் தண்ணீரெடுப்பாள்
சாடிமுட்டப்பால்காச்சி தனியேபால்கடைந்திடுவாள்
நித்தியமுமொருகோட்டை நெற்புழுங்கல்குத்திடுவாள்
அத்தனையோதரைக்கோட்டை யரிசியரிந்தாக்கிடுவாள்
ஏசிடுவாளென்றுசொல்லி யிருப்பத்தொரு கரிசமைப்பாள்
காசரவேசாம்பலிட்டு கலங்கச்சொரிந்திடுவாள்
நாககன்னியுண்ணிமட்டும் நட்டமாய்நின்றிடுவாள்
பாகுபெறவுண்டபின்பு பால்கடப்பமிட்டிடுவாள்
இருபதுபேர்வேலைதன்னை யிவளொருத்திசெய்தாலும்
அருமைகெடவைதுவைது அடியொருநாள்க்குதாம்
வெத்திலையேதின்னவொட்டாள் வேர்த்தாலுங்குளிக்கவொட்டா
ள்,நித்திரையோபண்ணவோட்டாள் நிரைய்வுஞ்சோருண்ணவொட்
டாள், சடைத்தங்கேயிருக்கவொட்டாள் தலைமயிரையிருக்கவொட்
டாள், வளப்பமுடன்பழக்கமிட மறுவீட்டிற்போகவொட்டாள்
குனியவொட்டாள்நிமிரவொட்டாள் குட்டிடுவாள்சிரிக்கவொட்டா
ள், அனியாயபாவிமுன்னே யழுதழுதுதிரிந்தனளே
மாயனுடசெயல்தானோ வருடமொருபண்ணிரண்டும்
நாயனில்லாப்பாழாக நானலையக்காரணமேன்
புண்பாடுநீங்காதோ புழுக்காரந்தீரேனோ
கண்பாராயென்றுசொல்லி தெய்வகாசிவனைநினைத்தாள்
ஆவலுடனீஸ்பரனு ரடையாளமுத்திரையாய்
பாவையுடசிறைதீர பண்டாரவடிவுகொண்டு
கப்பரையாம்பொக்கணமாங் கந்தையுடகோவணமாங்
அப்புத்திருச்சடையா யதின்மேலிளம்பிறையாம்
புலித்தோலுந்திருப்பிரம்பும் பூண்டசிவமாலைகளும்
பெலத்தகண்டகோடாலி பெரியதிரிசூலமுமாம்
செண்டுதனைமுகந்துகொண்டு சிறுத்தொண்டர்குடையெடுத்து
கண்டசரமாலையிட்டு காலிற்பாதக்குறடுமிட்டு

வாட்டமுத்ததெருக்களெல்லா மணிகுலுக்கிப்பாடிக்கொள்ள
காட்டமுடன்வீடுசென்று நாககன்னிவீட்டில்வந்தார்
பசிக்குதடியென்றனக்கு பட்டினியாய்வந்தேனான்
பொசிப்பதற்குபெற்றபட்டம் போட்டனுப்புந்தாய்மாரே
இந்தமுத்தந்தன்னில்வந்து யெத்தனைநேரமாச்சு
வந்துபிச்சைபோடீரோ மறுவீட்டில்போய்விடட்டோ
மொய்குழலாள்நாககன்னி முக்காலிமேலிருந்து
ஐயமிடும்பண்டாரம் அவசரமாய்நிற்கிறான்
ஏண்டிநீவெள்ளாட்டி யிருமாந்துநில்லாதே
ஆண்டிவந்துநின்றதுண்டா லய்யமிடவொண்ணாதோ
முதுகிலடிபடுவதற்கோ முகங்கோடிநிற்குகிறாய்
பதிவேலைசெய்யுமுன்னே பண்டாரந்தனையனுப்பு
என்றுசொல்லிதான் யேந்திழையாள்தெய்வகன்னி
நன்றுநடுவில்லாது நம்மளவிந்தெய்வமில்லை
அடிபடவுமிதிபடவு மவளேச்சிகேட்பதற்கு
கொடியேனோநான்பாவி கொண்டுவரவிதித்தானோ
பன்னிரண்டுவருடமட்டும் படும்பாடுபோதாதோ
இன்னமுண்டோகுறை சிவனேயென்றுரைத்தாள்
தன்விழியாலிட்டகண்ணீர் மணிமார்பிலேபாய
கைதனிலேபிச்சைகொண்டு காலேறமாட்டாமல்
வேறொருவரறியாமல் விம்மிவிம்மியேயழுது
சீரிநின்றபண்டாரந் திருமுன்னேகொண்டுசென்றாள்
அழுதுபிச்சையிட்டாலு மரன்றனக்குமேராது
தொழுபிச்சையிட்டாலும் சுரக்கூட்டை வெரும்பீத்தல்
மங்கையரேயுன்றனக்கு வயிற்றெரிச்சல்வருவானேன்
அங்கமெல்லாம்பதராம லழுதவகைசொல்லுமென்றார்
பாண்டாரமேயுமக்கு பரமாத்தமேபாடம்
உண்டிபிச்சைவாங்காம லூர்சோலியார்ப்பானேன்
உள்ளபடியென்கருமம் உன்னாலேசெல்லாது
கள்ளமறச்சொல்லுமுன்னே கைப்பிச்சைவாங்குவனோ
இரந்துகொண்டுதிரிந்தாலு மெனக்குக்கொஞ்சந்தெரியாதோ

நானறியக்காரியத்தை நாட்டிலுள்ளோரறிவாரோ
மானனையேமுன்னடந்த வைபோகஞ்சொல்லுமென்றார்
நீராடப்போனதுவும் நெடுஞ்சபதமிட்டதுவும்
அழுதழுதுவந்துநின்று ஆண்டியுடனேயுரைத்தாள்
வழுவில்லாதெய்வகன்னி மனமகிழவேதததி
முந்திவருஞ்சிறைதீர மூத்தவரையறியாமல்
பைந்தொடியையருகழைத்து பரலேழுதான்கொடுத்தான்
போத்தியவர்சொற்படிக்கு போர்ச்செப்புக்குள்ளடைத்தார்
தீர்க்கமுடன்நாற்பதுநாள் சென்றதின்பின்னே திறந்தால்
பாம்புகளுமிருகங்களும் பலமிருகம்பிறக்குதடா
உக்கிலுடனேகிரி யுகந்தபன்றிவெருகுடனே
சிக்கெனவேமயில்கரடி சிறந்தகருடன்பிறந்தான்
கருதிவரும்வெள்ளை தன்னை கருப்பாக்குங்கார்க்கோடன்
கருடன்வந்துபிறந்தசெய்தி காதில்வந்துகேட்டவுடன்
கூம்பாதகருடாள்வான் கொல்லுவாநம்மையென்று
பாம்பினுடவேசம்விட்டு பார்ப்பாணாய்வடிவெடுத்தார்
பார்ப்பாணாய்வடிவெடுத்து பதுங்கியங்கேகிட்டவந்து
சாக்காலறியாமல் தையலைப்போய்கைபிடித்தான்
கைச்சரசஞ்செய்தவளைக் கலவிசெய்யவறியாமல்
அச்சுடையவாண்பிள்ளைதா னாந்தையைப்போல்விழித்தனனே
கைகொடுத்தமடக்கொடியாள் கணவனுடமுகம்பார்த்து
பக்குவதிநானல்லவோ பதினாறுவயதல்லவோ
மன்னவனேமனவாளர் வகையறியமாட்டாயோ
என்னையறியாதிருந்தால் சமுசாரந்தேடுவானேன்
ஒட்டியேபடுத்திருந்தா லுலக்கைபோல் புரழுகிறாய்
கட்டிலிலேகிடவாமல் கல்ப்புடையையுட்டெழுந்து
வீட்டிலேகிடப்பதன்றி வெளியில்வரக்காணேன்
தூட்டையிலேகரியேறி சோருண்ணநீபடித்தாய்
காடுவெட்டிமுரித்தவர்போல் கண்முழியாதூங்குகிறாய்
நாடிவந்துதொடும்போது நச்செலிபோல்வெட்டுகிறாய்
திண்ணமுடன்றாலிகட்டி தேடியிடவந்தவனே

மன்னவாவுன்னுடைய வடிவுதன்னைக்காட்டுமென்றாள்
வடிவுதன்னைக்காட்டுமென்ற மங்கைமுகம்நோக்கி
அடிபிடிவாய்கெம்பாதே யடக்கமாய்க்காட்டுகிறேன்
பகடியவள்பார்த்திருக்க பாம்புவடிவெடுத்தானெனவே
முகடுதனில்வானுசுத்தி முதுகுதன்னைநீட்டினனே
பாரச்சுழகதுபோற் படம்விரித்தாடிடுமாம்
மான்புடனேகண்டவள்தான் வயித்தோட்டமடித்தனளே
ஆண்பிள்ளைகாள்பாம்புதன்னை யடியுங்கள்கம்புகொண்டு
கொண்டவனென்றிருந்தேன் கூற்றுவனென்றறியாமல்
சண்டாளபாம்பினுக்குத் தாலிகட்டிக்கொடுத்தானே
உலக்கையைப்போல்நெழியுதடி யுள்ளறிந்தகள்ளனடி
வலக்காரம்பேசுதடி மாப்பிள்ளைபாம்பாச்சுதடி
படுக்கையிலேகடியாமல் பாய்பாணயிருந்துதடி
நடுக்கிளிந்தகருநாக்கை நாட்டமுடனீட்டுதடி
மூத்தமிடுவேளையிலே முகத்திலெட்டிக்கடிப்பாண்டி
ஏத்துகின்றபரப்பாம்போ டினிமேற்பெண்ணிருப்பேனோ
கூட்டிட்டைபிரம்போடே ருடியிருந்துகேட்டனடி
வீட்டெலியைக்கருவறுத்து வெறும்பாம்பைநம்பிவிட்டேன்
மாப்பிள்ளைக்குமுகம்வீங்கி வைத்திருந்தேன்முழுப்பாம்பை
சாப்பிடப்பால்வாங்குதடி தலைகீழாய்த்துள்ளுதடி
நஞ்சிருந்துதூவுதடி நாய்போலேயுருகுதடி
பஞ்சணையிலேகிடத்தி பாம்புக்குப்பால்வார்த்தேனடி
கன்னமிடவந்தாண்டி கற்பழித்தசர்ப்பமிது
சொன்னதெல்லாங்கேட்பதற்கு தோலுரித்தபுள்ளியடி
குடிகெடுத்தபாம்பெனவே கூ கூ வென்றபயமிட்டாள்
வடிவாய்ப்பாம்புருவம்விட்டு மறையவனுப்வடிவெடுத்தார்
கனிப்பிழையாளேவடிவைக் காட்டினேனுன்னிடத்தில்
பெண்புத்திகேட்டதுண்டாற் பிழைப்பாரோவாண்பிள்ளைகள்
உற்றதொருகடனுக்கு வொளித்திருந்தேனுன்னிடத்தில்
கற்புடையாளென்றிருந்தேன் காவாலியாக்கிவிட்டாய்
காவாளியென்றவளைக் காரிகையாள்முகம்நோக்கி

சாகாயோநீபாபி சாண்கயிறுகிடையாதோ
ஊரறியவென்னையிந்த ஒடியேறுகட்டுவாயோ
வாழலாம்நமக்குவந்து வாச்சுதென்றுயிருந்தேனே
பழுத்தமொழிபேசாதே பாம்பென்றுநானறிவேன்
சழக்காராவுன்னுடைய சந்தமெனக்காகாது
சோறிடுவேனென்றுசொல்லி துள்ளாதேதலைகீழாய்
வேறினிமேற்பார்ப்பதில்லை வீட்டோடேசுடுவேனுன்
பாம்புவந்துஎன்வீட்டில் பதிக்கிடையாய்கிடக்குதென்றே
கூம்பாதவூரவரே கூ கூ வென்றப்பயமிட்டாள்
கிளிமொளிபாள்பாம்பென்றதை கேட்டானேகருடாள்வான்
அறியாதபகைவன்வந்து அகப்பட்டானென்றுசொல்லி
கரும்பாம்புதன்மேலே கண்போட்டேயிருந்தவன்காண்
திரும்பியினிப்பாராதே சிறகடிகொண்டேபாய்ந்தான்

## வேறு.

---

திரகடியுடனே யலகடியதிர
திகழ்விழியள்திசை திசைதிசைவிரிய
நிறையுடலகமது வெளிமறைய
நிரைபெருமுளகத் தொகைமுகட்சைய
பலகுலமலைகள் கிடுகிடுகிடென
படியெழுதலமுங் திடுதிடுதிடென
நிலமகன்முதுகு நெருநெருநெரென
நிமலவரறியப் பருத்தலைகுலைய
சுடரிருகதிர் கழனுகொடுமறைய
தூளிபடுமேகஞ் சுவரடித்தான்
உடலதுகொத்தி படமதுகொத்தி
உருவிரல்நகமது முதுகினிலுருக
வடமலைமுடியிற் சிதாயடித்தான்
வஞ்சகநஞ்சது வாயிலேகாக்க
கடகரிவெரு வட்டியிலிழுத்து
கதிர்மணியரவக் கண்கள்பிதுங்க

பல்லொடியும்படி கல்லினில்மோதி
பண்பொடுவயிர கண்கள்பிடுங்க
வல்லசொல்வெள்ளை மாப்பதுநீயே
நாககன்னிக் குபகாரியும்நீயே
தமையனுமானுய் சத்துருவானுய்
தாயாரைபெண் சிறைவைத்ததினுலே
சமருது தலையை குனியமிதித்து
காலுல்நகங்கொடு கீரினனுடலை
பிழந்ததோர் வெள்ளைசாரையதாய்
பின்பேர் தாயுட சிரையையும்நீக்கி
விளங்கியயந்திர மீதுபாகி
வேணியரனுர் கைலாசமடைந்தார்

---

## வேறு

கார்சகோடன் றனைவதைத்து கைலையிலே செல்லுவானும்
கீர்த்தியுள்ளயீஸ்பரனை கெருடாழ்வார் தான்வணங்க
எல்லார்க்கும்பொதுவாகி யென்பங்காயிருந்தவனே
வல்லமையாய்பிறவிசெய்து வரவழைத்தகாரணமேன்
சொல்வதுகேள் கருடாழ்வான் றுலங்குமுப்புராதியர்கள்
செல்வத்தின்முடுக்கதுபோல் தெரியாதபடி தானே
அந்தரத்துதேவர்களை அனியாயம்பண்ணுகிறுன்
வந்தவந்தம்தவருட மரியாதிக்கேடுத்தானே
என்னுடையபார்வதியும் யானுமேயல்லாது
அன்னவர்கையலே யடிபடாததேவரில்லை
இம்படிக்குப்பார்த்திருந்தா லென்னமுண்டோகருடாழ்வான்
அப்படியேமுப்புரத்தை யழிப்பதற்குவொருவரில்லை
கோரணியாலென்றனக்கு கூத்தாடவோவேலை
நாராயணரல்லாது நம்மாலேயென்செயலாம்
பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பச்சைமாலையொழப்பிவாசாய்
பள்ளிகொள்ளும்வேளையிலேவந் தொருவருவருமெழுப்பார்கள்

உள்ளபடியவனுரக்க மொருக்காலுந்தீராது
தர்மாமற் கூட்டிவாருய் சடையானவார்த்தைசொல்லி
தோளிலேயெடுத்தவனே சுமந்து கொண்டாகிலும்வருவாய்
சிறந்தபுகழ் கருடாழ்வான் சிவனேவல்தட்டாமல்
பறந்துசென்றுபாற்கடலிற் பறப்பையெல்லாமாத்தினனே
காலதுதான்வடக்காகி கனகமுடிதெற்காயி
மேற்றிசைமுகமாகி மெத்தையொருபாம்பாகி
உரைத்தகடலதிலே வூசலிலே யசைந்தாப்போல்
அறிந்துமறியாதவர்போ லனந்தனிலேபள்ளிகொண்டார்
தேவருடபூங்காவில் சிறகாலேபூவெடுத்து
கோவிந்தன்மேற்றூவி கும்பிட்டான்கருடாழ்வான்
அரிநெடுமாலெழுந்திருந்து அஞ்சாமற்கைகாட்டி
வாலாருயிப்போது வருவானேன்கருடாழ்வாநான்
கடற்பொங்கிவந்ததுண்டோ கனகமலேகண்டதுண்டோ
அடலுலகம்பதினுலு மடுக்குலேந்துபோனதுண்டோ
சந்திரர்கள்சூரியர்கள்தான் மறைந்துபோனதுண்டோ
அந்தரத்திற்பறந்துவரு மவசரமேதெனக்கேட்டார்
உலகளந்தாள்பெரியமுத்தா ளொதுக்கிடமாயிருந்துக்கொண்டு
கலகமிட்டான்முப்புராதி காரணங்களோயேதோ
திடமுடனேயீஸ்பரனுர் சீக்கிரமாய்வாவழைத்தார்
நடயிலேதூங்கிடுவீர் நமக்குமுன்னேவரமாட்டீர்
இடவளியில்லேயா மேறிடுவீர்முதுகிலென்றுன்
அரிநெடுமால்விரைவாகி யவன்முதுகிலேறுவாராம்
ஒருசிரசிலவரேர வொருசிரசுகுடைபிடிக்க
வாமுடையதிருக்கருடன் வாகனத்தின்மேற்கொண்டாராம்

---

## வேறு.

பச்சைவர்ணனுங்கருடபட்சியேற பாவையர்கள்தான்குறவைபாட
வச்சிரவேல்விழியாள் லெட்சுமிபாகன்
மார்பினில்க்கவுத்துவ மணியிலங்கவே

மண்ணையெல்லா மோரடிக்குள்வைக்கவேண்டி
வர்ணன்கிட்டசென்று பிச்சைவாங்கவென்று
வெண்ணெயுண்டவாயினாலே மண்ணையுமுண்டு
விக்கிவிடுதந்த கருடப்பிரவியே
வெள்ளிக்கைலாசமலைக் குள்ளவேசென்று
வெண்டலைபோட்டாண்டி தன்னைதெண்டனிட்டாராம்
வள்ளலேயென் மைத்துனரே வாரும் வாரும்
வரட்டாட்டுக்கோனாரே வாரும் வாரும்
கூண்டு தூண்டுமாமுனியைக்கொள்ளவேண்டி
கொண்டகோலங்காட்டுகின்ற கூத்தியாரேவாரும்
வண்டபுகழ்முப்புராதி வயிரவநாதன்
வாள்வளியக்கோள்ச்சொல்லு மந்திரியேவாரும்
குண்டுரலில் கட்டுபட்ட மோதிரகையால்
குட்டுப்பட்ட மாப்பிள்ளை நீர் கிட்டவாரும்
தொண்டுபண்ணுமுப்புராதி யிட்டகோட்டை
சுட்டுப்போடநல்லயுத்தி சொல்லவாரும்
எத்தேசகாலங்களும் நித்திரைபண்ணும்
இன்றைக்குவிழித்தவரே வாரும் வாரும்
சித்தமுறச்சந்தோஷ உத்திரம்சொல்லும்
திருமாலுந் திருக்கூட்டந்தன்னிலிருந்தார்

---

## வேறு

ஏற்றகைலையில்வீற்றிருந்தசிவனாரே
என்னைக்கருடனைவிட்டிங் கழைப்பித்ததேது
வார்த்தையினியொருவாசகங் கேள்முகில்வண்ணா
மங்கைக்கரசியுலகளந்தாள் முத்துமாலை
வீரவயிரவநாதனுடன் முப்புராதி
மிக்கானவண்டிமலையன் முத்துக்குமார்பன்
ஆரணமோதியகூடையில் மாலைகொணர்ந்த
அன்றைக்குதேவரைகும்பிடச் சொல்லியடித்தான்

பால்குடம்கெட்டியெனக்கென்று வந்தமுனிவன்
பட்டதெழுதபனையோலை நாட்டுக்குளில்லை
சாகத்துணிந்தவர்போலே தலைகீழாய்ச்சாடி
சாதிக்கிறார்கள் நமக்குப்பெரியசளன்காண்
கேள்விகேளாமல் நீயுங்கட்லிற்கிடந்தாய்
கேளாதபேச்சும்வையுஞ் செவியிலேகேட்டேன்
தோளமைத்துனன் முப்புராதியைத்தொட்டு
தூரக்குடியோடி போகட்டோசெய்தியைச்சொல்லு
என்றைக்குமிந்தமலை மேலேசும்மாயிருங்காண்
என்னைப்போலெத்தனை தேவரிருக்கிறாரிங்கே
மன்றிலிருக்கின்ற பூத்தானமுள்ளமூத்தமகனை
வல்லமைபார்த்துவரச் சொல்லியேவிடுயென்றே
வித்தைக்குமூத்த கணபதியாகியவீரர்
வேட்டைப்புலிபோலே கோட்டையைசுட்டுநீவீளாய்
சுததக்கணபதி புத்தினாலேதுசொல்வார்
தோணிவயிற்றை சுமந்திடத்தான்வெகுசோலி
பூசையைத்தின்று வயிறுகனங்கொண்டுபோச்சு
புண்ணியனேநானெப்படி போருக்குப்போவேன்
பார்த்துக்கல்லனை வாகனமொப்பிட்டுதந்தால்
பாதகர்கோட்டையை பையமெள்ளச்சென்றுபார்ப்பேன்
கொன்றைச்சடையுள்ள வென்றிருக்கைலையில்கோமான்
கோலப்பெருச்சாளி வாகனமாகக்கொடுத்தார்
பொன்னின்வரிசை சதங்கைகழுத்திலேபூட்டி
பூந்தடையமிட்டு கஸ்தூரிபொட்டையும்போட்டார்
வெள்ளிக்கடிவாளம் கல்லனைமேல்சகலாத்தாம்
வீரிட்டமாணிக்க வீரபட்டங்கட்டி
பிள்ளையார்வீங்கும் பெருவயிறேடேபோயேற
பிட்டிகனத்து பெருமுச்சிரிம்பெருச்சாலி
நல்லசவுக்காலே பொல்லாப்புகட்டியபோது
நகண்டுநகன்டு நடக்குதாம்வாகனமெள்ள
வல்லமையால்பிள்ளையார் மந்திரத்தால்பெருச்சாளி

வாகனத்தின்செவி தன்னிலுபதேசம்பண்ணி
கூட்டிவருகின்ற தெய்வக்கணதிபர்சேர
கூடிப்பிளையாம வோடியேகோட்டைகுருக
கோடாதமுப்புராதி முத்துத்தம்பிமுத்துகுமார்பன்
கொண்டகணபதி கோலத்தைக்கண்டங்குரைப்பார
ஏனப்பெருச்சாளிமீதிலே யானையொன்றேரி
இங்கேவருகுது சந்திக்கப்போவோமெதிரே
தினமில்லாத பெரியவரோடேயெதிர்த்தால்
சிதினத்தார்கள் பிழையாஞ்சாவதுதிட்டம்
இப்படிச்சொல்லியே நெற்பொரியும்பயசெல்லும்
இட்டதேங்காயு மிளநீரும்வாழைப்பழமும்
அப்பங்கொழுவடை சர்க்கரையும்பணியாரம்
யானையுதட்டிதழும் பணஞ்சேரவுண்டாக்கி
பத்தெட்டுவண்டியில் வாழையிலையைப்பறப்பி
பாவித்துக்கொண்டு கணபதிமேலேபடித்தார்
தந்திரமாகவே செல்லார்க்குமூத்ததலைவள்
தக்கதோர்பூசையை கண்டவர்கோபந்தணிந்தார்
எவ்வளவாகிலுங் கொடுத்தர்வமேல்சண்டையிட்டால்
எங்கேபோனுலு மவர்க்குகரையேழ்தமில்லை
கெவ்வெனத்தேவர் சிறையிருந்தால்நபக்கென்ன
கிட்டுதலிட்டால் நமக்கிப்படிக்கிடையாதோ
தொட்டுத்தலையிலே குட்டியெவராகிலுந்தந்தால்
தொந்தமாவுண்டிருக்க நமக்குத்தொழிலே
பட்டுக்கொப்பவர் குட்டுச்சமுட்டுப்படுவார்
பாலுபழம்பூசை கண்டால்நமக்குண்டோபாடு
முட்டுப்படாமலவ ரிட்டபூசையுகந்து
முப்புராதிகோட்டையில் பிள்ளையார்போயங்கேயிருந்தார்

---

## வேறு

பிள்ளையாரங்கிருக்க புரைகூடியேதுரைப்பார்
எள்ளுருண்டைபணியார மிடும்பூசையுகந்துகொண்டு

சவுக்கியமுள்ளகணபதிதான் சந்தியிலேபோயிருந்தார்
வயித்தைநினைத்தகுடி வாழாதுமாயவரே
கோட்டைதன்னைசுடுவதற்கு கூறிடுவாய்புத்தியென்றார்
நாட்டமுடன்பாற்கடலில் நாராயணரேதுசொல்வார்
வாகனத்தின்முன்போன மருமகனார்சிரத்தைகண்டோம்
ஏகிடுவீர்கோட்டையிலே யிளையவனேயென்றுரைத்தார்
குமாகுருபரமுருகா கோட்டையைப்போய்சுட்டுவாரும்
அமர்பொருவதல்லாது அண்ணனைப்போல்நினையாதே
என்றுரைத்தயி-னுக்கு யெடுத்துரைத்தார்வடிவேலர்
நன்றியொன்றுமுண்டானால் நம்மாலேயென்செயலாம்
கும்பிட்டுவிழுவாரை கொ-லவுங்கைகூடாது
நம்மாலெதிர்த்ததுண்டால் நானவனைவிடுவேனோ
மயிலுடமுதுகேறி வடிவேலைதானெடுத்தார்
மயில்வல்லமுகமாறும் பன்னிருகைகோலமுடன்
வரமுடையதிருக்கோட்டையில் மாறுமற்செல்லுவாரும்
கலகமிடவேணுமென்று கந்தனுந்தான்வாறானே
மலையுருகவேலெறிந்த வலுவுடையசேவகன்காண்
பண்புடையதுகிலாடை பணங்காசில்விருப்பமில்லை
பெண்களுடவிளையாட்டிற் பிரியமுண்டுவேலவர்க்கு
கொண்டுவாராய்நம்முடைய குலத்திலுள்ளயரக்கிகளை
வண்டிமலையனேடி மாதருடனேதுசொல்லுவான்
மெல்லியரேயெங்களிடம் வேறேபிடிமானமில்லை
எல்லாரும்பிழைப்பதற்கு யிருக்குதடாவுங்களிடம்
கொட்டுவதற்கிதமாகக் கூத்தாடிவருவாரும்
கண்ணோட்டம்போட்டிடுவார் கைவிளக்குத்தானெடுப்பார்
மண்ணூட்டுத்தாருமென்று வழிமறித்துக்கும்பிடுவார்
இப்படியேமங்கையர்கள் யெதிராகவந்துநின்றார்
ஒப்பமுள்ளவேலவனு ருகந்தேதுவார்த்தைசொல்வார்
பெண்ணமுதைக்கண்டவுடன் பெருங்கோபந்தான்போச்சு
எண்ணமுள்ளகோட்டையிலே யெப்படிப்போய்கைவிடுவேன்
வருவதெல்லாம்வாட்டெனவே மாதருடன்விளையாடி

தருமமுள்ள தமையனைப்போல் தம்பியும்போயங்கிருந்தார்
மூத்தவனுமிளையவனு முப்புராதி பங்காளன்
ஏற்றமுள்ள திருமாலே யினிமேவிமென்னசெய்வேன்
இனிமேலுமாதித்தனை யேகிடுவீர்கோட்டையிலே
புனிதரந்தசூரியனைப் போகவிட்டார்கோட்டையிலே
காலில்லாதசாரதியும் கடுங்குதிரையீரேழும்
கோலமுடன்றேரேறி கொண்டுசென்றானேபகவான்
தாடாதமுப்புராதி சந்தனகுமார்பாகேள்
கோடாதசூரியன்றான் கோட்டைதன்னைசுடவாறான்
ஏற்றவடவாமுகத்தி லெண்மணங்காகச்சுடுவான்
காத்திடவும்போகாது கனல்பொருக்கக்கூடாது
உலகளந்தாள் திருநாம மோதிப்படித்திடுங்கள்
பலவகையாய்ப்பொங்கலிட்டுப் பாலிப்போமென்றுரைத்தார்
பாற்கடல்தண்ணீரெடுத்துப் பானைதனிலுலையேத்தி
சாற்றறியமுத்தீட்டல் செம்பாநெல்லரிசியிட்டு
நாலுதெருவீதியெங்கும் ஞாயிற்றுக்கிழமையிலே
எல்லோரும்பொங்கலிட்டு யிலைதனிலேதான்படைத்து
வீதித்தலந்தோறும் வீழுந்துகும்பிட்டெழுந்திருந்தார்
ஆதித்தன்மேற்பாடி ஆடிக்குறவையிட்டார்
பாச்சலுள்ளதேர்நிறுத்திப் பார்த்தானேபகவானும்
ஏச்சானேமுப்புராதி யேழையிலுமிடும்பனல்லோ
பொங்கலிட்டபூசையிலும் பூத்தானமோகோபம்
இங்கிவரைச்சுட்டாலு மீசனுக்குமேராது
பாக்கியத்தோடிப்பாரை பகைத்தாலுமாகாது
போக்கரியபேர்தனக்கு பொல்லாப்புகட்டுவரோ
திரும்பியினிப்போனாலுஞ் சிரிப்பார்கள்நம்மையின்று
விரும்பியந்தக்கோட்டையிலே வீற்றிருந்தானேபகவான்

## வேறு.

போர்ந்தசூரியனங்கிருக்க பூமியிருள்மூடிப்போனதுவே
மற்றமனிதருமிருகங்களு மலையில்மரங்களுந்தானுறங்க

எல்லாத்தேவர்குலக்காக யிருந்தசிவனார்மறைந்துவிட்டார்
சொல்லுமக்கினிதான்குளிர்ந்து குளுர்ந்த தண்ணீருங்கொதித்திடு
மாம், பறந்தபறவைகளிணக்கமில்லை பரந்தகடலிலுமோசையில்லை
சிறந்தவுடம்பெல்லாஞ்செலத்தைகெட்டுதேவர் முனிவருந்தலைசாந்
தார், மேகந்தனிலுள்ளமலைமாமும் வித்துமுளையெல்லாமுளைகருக
கோழிப்பறவையின்குரல்விந்து கொடியபோண்டுங் குலுங்கக்கண்
டார், ஏழுநாளொருமுகூர்த்தத்திலே யெல்லாவுலகமும்நடுநடுங்க
அரியும்பிரமனும்பார்வதியு மரனைத்தேடியேயலைமலைந்தார்
வரியும்புவனங்களீரேழு மிக்கதிசையெட்டுந்தான்தேடி
மண்ணையொவ்வொன்றுயெண்ணி வளைந்தகடல்தன்னைசோக்கி
எண்ணியடிமுடிகாணும லெங்குந்தேடியேசடைத்தபின்பு
பெரியமுதலூழியுகந்தனிலே பிறந்தவள்ளுவரெதிரேசென்றார்
அரனேயொருவிடங்காணுதில்லை ஐயனேஎன்னசெய்வோமென்றார்
நல்லபுகழுள்ளதிருவள்ளுவர் நயினார்திருமாலைமுகம்நோக்கி
நெல்லிக்கனியதைகையில்வைத்து நீண்ட திருமதிலேபார்த்ததுண்
டால், எல்லாவுலகத்திலிருப்பதெல்லலா மிந்த கனியுள்ளேதெரியு
மென்றார், வல்லநெல்லியின்கனியெடுத்து மாலும்பிரமனும்பார்த்த
துண்டால், புள்ளுமிருகமுமலைகடலும் பூமியாகாசப்பொருள்சேரு
ம், எள்ளிலெண்ணைபோ லீஸ்பரனை ௭"ங்குமாகயிருக்கக்கண்டேன்
எத்தஅடிமுடியெல்லையது யின்னயிடமென்றுதெரியுதில்லை
வீணிலேயினித்தேடித்தேடி விசனப்படுவானேன்திருமலே
தாணுவாகியசிவன்பேரில் தமிழைப்பாடியேதுதித்தாராம்
முன்னேநான்செய்தகொடுமையினால்முப்புராதியையேயேவிவிட்டா
ய், இன்னுமவன்பங்காயிருந்துகொண்டால் யாங்கள்பிழைப்போ
மோயென்றுரைத்தார், இந்தப்படியேவரதுதித்திடவே யீசன்வடிவு
கொண்டெதிரேசெல்ல, பந்தித்திருள்வாங்கியுலக மெல்லாம்பண்டு
போலொளிவுண்டாகி கண்டசிவன்றன்னைதெண்டனிட்டுகமலத்திரு
மாலுமேதுசொல்வார், அண்டர்சிவனருமறைந்தசெய்தி யரியும்படி
யெனக்கருளுமென்றார், கேட்டுத்திருவுளந்தானிரங்கி கிருபையுண்
டாகியேதுசொல்வார், நாட்டுமுப்புராதிதலையெடுத்து நமக்கென்
றொருவேலைநடக்குதில்லை, மனதுக்கிதமானபூசையுண்டு மக்களிரு

பேரும்போயிருந்தார், உனக்கும்பார்வதிதனக்குமாக ஒளித்துப்
போகாமல்வந்தேமென்றார், மைத்துனனேயுந்தனுக்குலயதிருந்தும்
புத்தியில்லை, தாடகையைகோப்பளிக்க சமத்தரியமாட்டீரோ
ஓடிவந்தபெண்மானை வுயிரோடேவிட்டேனே
பருகவந்தசூர்ப்பநகை பந்துகெட்டுப்போகலையோ
இருபதுகைராவணனை யிரண்டுகையர்க்கொன்றேனே
வலுவுடையகஞ்சனைநான் மாமனென்றுவைத்தேனே
கலக்கமிட்டவாய்ப்பாடி கண்ணனென்றுமறிவீரோ
வாலிதனைக்கொன்றுவிட்டு மகனையரசாளவைத்தேன்
ஆலிலைமேற்பள்ளிகொண்ட அருமைதனையறிவீரோ
பகலையிரவாக்குகின்ற சக்கரமும்பரி...ச்சோ
குரங்குதன்னைவிட்டிலங்கை கோட்டைதனைச்சுட்டில்லை..யா
மரங்கடனையுருவவெய்த வலுவறியக்கூடாதோ
என்பேருசொல்லாரை வுயிரோடேவைப்பேனே
என்பேருசொல்லாத யிரணியனுப்பிழைத்தானே
அலைகடலைத்தான்கடைந்து வமுதெடுத்துக்...டுக்கலையோ
மலையெடுத்துமலைகாத்த மைத்துனனென்றறிவீரே
இடையனாயிருந்துகொண்டு யெருதோடேபொருதலையோ
உடையவனாய்ப்பஞ்சவர்க்கு வுபகாரிநானல்லவோ
ஈரடியாலளப்பதற்கு யிடங்காணுதொன்றுமில்லை
ஓரடியாள்மண்ணளந்த வுண்மையதுதெரியாதோ
மோதிரக்கைகுட்டோடே முதுகில்வைத்தவுரலோடே
வாதுகொண்டுவந்துநின்ற மருதமரமுரிக்கலையே
அதைத்தவர்க்குக்கொடுப்பதன்றி யழிக்கமதியறியீரோ
மண்ணுலகில்நான்பிறந்து வந்தருளும்விளையாட்டை
எண்ணுதற்குகடற்கரையி னிளமணலும்போதாது
கொடுப்பதற்குமழிப்பதற்குங் கூடுமேயென்னாலே
சத்துருவையென்னாலே சங்காரம்பண்ணுட்டால்
மைத்துனரேநீர்தாமு மலைமேலேயிருப்பாரோ
கொடியமுப்புராதியற்காய் குடியோடிப்போவானேன்

மடியாமற்கைலையிலே வாருமையாவெனப்போனார்
முந்துமிந்தக்கோட்டையிலே மூவரும்போயங்ருந்தார்
நன்னயஞ்சேர்கோட்டையிலே நாமுமினிப்போய்வருவோம்
அதிமதங்களிருப்பதுவு மாசாரமிருப்பதுவும்
ருதித்துவருமாத்துருவாய்க் கொண்டறியவேணுமென்றார்
அரியவுமைமஞ்சள் நீராகிவந்தனராம்
மாயவெள்ளமென்றறிய மாட்டாமல்முப்புராதி
வாய்மையுள்ளகருங்காட்டின் மழைத்தண்ணீர்வருகுதெ று
தெளிந்துவருமாத்திடத்தே சிலைதப்பிவிளையாடி
குளிர்ந்துவரவேணுமென்று கூட்டமிட்டங்கெழுந்திருந்தார்
வளர்ந்தபுகழுலகளந்தாள் மாதாவுமேதுசொல்வாள்
எழுந்திருந்தநேரமிது யிரர்ச்சதவேளைதோற்றம்
துடர்ந்துவந்தவெள்ளமிது சோதனைக்குவந்திதுகாண்
அடர்ந்துபோய்குளித்துவிளை யாடாதேயென்றுரைத்தார்
விலகினசொற்கேளாமல் வெள்ளமதைத்தான்மரித்து
உலகளந்தாள்பார்த்திருக்க வொருகடையில்தானிரங்கி
தீனமில்லையென்றனக்கு சிவனுமில்லைகுருவுமில்லை
ஆனதெல்லாநானெனவே ஆடினார்தீர்த்தமது
ஆங்காரமிருக்குதென்று ஆற்றினுடகோலமிட்டு
பாங்குடனேயீஸ்பரனும் பார்வதியுந்திருமாலும்
கைலையிலேபாயிருந்து காரியங்கள்பேசுவாரும்
மகாதேவர்உம்முடைய மக்களங்கேபோயிருக்கார்
சேவகண்டன்முப்புராதி சிவலிங்கம்பரிக்கரிது
பக்கமுரப்போயிருந்து பகுமானம்பார்ப்பதெல்லாம்
சிக்கெனவேகொடுத்தொளியன் றிரும்பியிங்கேவரமாட்டார்
ஒன்பாதம்நான்போனால் ஒருவரையும்நான்பாரேன்
இதமுடனேமூவரையு மிமைக்குமுன்னேகூட்டிவர
உதவியுள்ளசேவகர்க்கா ளுண்டானால்விடுகுமென்றார்

## வேறு.

சொல்லக்கேட்டங் குமையொருபாகனர்
சூதினாலே வெகுகோபமாகினர்
புல்லர்கையில் தருகின்றபூசையால்
புத்திகெட்டு புலையாடிக்கொள்வதேன்
வேர்வையிர் பிறக்கும்வீரபத்திரர்
வீணர்கோட்டையி ருமல்வெருட்டுவாய்
சோரிகைக்குடாய் வெட்டாதேகுத்தாதே
துணைக்குப்போன கனத்தாரைக்கொல்லாதே
முப்புராதி யிடத்திலேசெல்லாதே
மூன்றுபேரையும் சீக்கிரங்கொண்டுவா
செப்பமான துரைவீரபத்திரர்
சின்னப்பொன்னன் குருவியதாகினன்
திரிபுராதிகள் கோட்டைவழியாக
திருவடவாவில் சென்றிருந்தேபார்த்தான்
கோட்டைவாசலும் கோபுரமேடையும்
கொத்தளங்களை சுத்தியேபார்த்தனர்
ஈத்தமாகவே முச்சந்திவீதியில்
எம்பிரான்பிள்ளையார் தன்னைகண்டனர்
சோத்துக்காக சுணைகெட்டியிருக்கின்ற
சூரியனுட தேரையுங்கண்டனர்
கூத்துநாட்டின் பெண்கள்மருட்டிலே
கோபம்போன முருகனையுங்கண்டார்
மந்திரவாளும் பரிசையுங்கையிலே
வரவேணுமெனவே நினைத்தனர்
அந்திரத்தில் வருகின்றமந்திரவாள்
அண்ணல்வீரபத்திரன் கையில்வந்துதாம்
கச்சைகட்டி கட்டாரிசமுதாடு
கண்டை வெண்டயங் தண்டையம்பூட்டினர்
கச்சுப்பந்தியில் நிற்கின்றயானையை

சங்கிலியுந் தரியோடேதூக்கினர்
இப்படிநூறு யானையைத்தூக்கியே
இடும்பர்கூட்டங்கள் தோருமெரிந்தனர்
குப்பமிட்ட சனங்கள்புரண்டுதாம்
கோட்டைகொத்தளம் கூடப்புரண்டுதாம்
மலையைத்தூக்கினன் சூராவளிபோலே
வட்டஞ்சுத்தி குரவைகள்பாடினன்
தலையைபொத்திட நேரமில்லாமலே
தங்கள்கணங்களை பொத்திக்கொண்டார்கனே
பிள்ளையாராடே செய்திசொல்லாமலே
பேதிப்பாகவே யாதித்தனோடினன்
துள்ளிக்கொள்ளும் பெருச்சாளியேருமல்
தூரப்போய் பிள்ளையாரைத்துரத்தினன்
சண்டையேதென்று தட்டிக்கேளாமலே
தப்பிப்போய்ப்பிழைத்தான் சுப்பிரமணியனும்
மீண்டுவோடி கைலாசவாசலில்
வெட்கமில்லாமலே சென்றுகும்பிட்டார்
முப்புராதியைக் கொன்றதுநீங்களோ
மூன்றுகோட்டை யழிப்பதுநீங்களோ
தப்பியோட தலையெடுத்தீர்களோ
தாய்தகப்பன்சொல் தட்டாதேசேவகா
மூன்றுபேரை வெருட்டியதம்பிரான்
முத்திரைவீர பத்திரன்சென்றனன்
ஆன்றநாராயிணர் தன்முகம்நோக்கியே
ஆண்பிள்ளையெல்லாம் பெண்பிள்ளையாகினோம்
அங்கவர்சிவ லிங்கம்பரியாமல்
அழிக்கப்போமோ திரிபுரக்கோட்டையை
செங்கண்மாயனல்லாமல் செல்லாதென்று
சீக்கிரமாய் சிவனர்காட்டினர்

## வேறு

விபூதிவெண்ணீர்தாருமென்று விண்டுமால்சொன்னபோது
குதிகுதித்திமிதொம்மென்றே திருநடினமாடிச்சொல்வார்
அகுதஞ்செய்முப்புராதி அவன்திருபுரத்தில்சென்று
சிவலிங்கம்வாங்கிக்கொண்டு சீக்கிரமீளுமென்றார்
கூன்பாப்பானாகமாயன் கோலங்கள்கொள்ளுவாரும்
பூசைப்பெட்டியுடனே கப்பரைப்பொக்கணமுந்தூக்கி
வீசைமுடிந்தசடையாலம் விளிரெனநின்றாட
சேட்டையடிப்பவர்க்கும் கண்டுதெரிசிப்பவர்களுக்குத்தெரிய
வேஷ்டியுடைதனிலே நூறுக்குமேலுண்டதன்பீத்தல்
நூறுவயதுடையோ னடையிலேநொந்தபசிதீர
சோறுதருவீரோ யென்றவன்சூழவேகூப்பிடுவான்
முப்பதுநாழிகைபால்நடந்திட மூன்றுமுழம்நடப்பான்
கைத்தடியல்லாது வலத்தடிகாலிலேசிவனில்லை
மன்னித்துதுடிதுடிக்கும் கூனிப்பாப்பான்கொண்டவிசையிலே
பின்னியயீறுடனே குன்னியும்பெனுங்குடியிருக்க
பூண்டகதவருகே கல்லிராள்போலவேகூனிகொண்டு
கூண்டவர்தான்கேட்க கூன்பாப்பான்கோவிந்தமிட்டனரே
விஷத்தாரக்கோட்டைக்குள்ளே யிருக்கிறவீருள்ளமுப்புராதி
செத்தானோசாகலையோ அப்பனேசெய்தியைச்சொல்லுமென்றார்
கிட்டிருகையிலே வாசலில்கிங்கிலியர்காவல்
வீசையில்கண்ணியிட்டு விலாங்குமீனைபதில்தூக்கி
காசிப்பாப்பாப்பானைபாம்பு கடிக்குதையையோயென்பார்
சக்கிழவன்கிழவன்நடந்து சடைத்தவனென்றுசொல்லி
முக்காலிமேலாக நெருஞ்சிமுள்ளிருத்துவாரும்
திரிகிடாபஞ்சியிலே பித்தனை தீயையுங்கூடவைத்து
உடுக்கிறசீலையிலே தெரிகிறவோட்டலடையுமென்றார்
மாழ்கிழவன்றன்னையிளவட்ட மாப்பிள்ளையாக்கிடலாம்
கூனிநெரிவெடுக்க வுலக்கையைகொண்டிங்கேவாருமென்றார்
செம்பிட்டகாதுடை யிவனுஞ்சிவனடியாரெனவே
கும்பிட்டுநின்றாப்போல் நெஞ்சிலேகுத்திபலத்திடுவான்

கன்னத்தோலுதன்னை வெள்ளக் கரியோடே தானருத்து
குன்னியகூனில்வைத்துசற்றே பொருத்துப்பிடியுமென்றார்
பக்கப்பழுத்தவனை யருத்துப்பகுந்திடவேணுமென்றாள்
குக்கலெலும்பையன்றி வேறேகொழுப்பொன்றுகாணோமே
மங்கையர்தன்னைவிட்டு கூன்பாப்பான்வாரவழிதனிலே
அங்கேதான்முப்புராதி அவனை —பேரதென்றாள்
வாவாவண்டிமலையா வீரவயிரவநாதாகேள்
சீமானேமுப்புராதி யுங்களைத்தேடியல்லோவாரேன்
கிழவனிருந்தயிடமுழுதுங் கேடாய்முடிந்திடுமே
தொழுதல்லோகோட்டைக்கப்பால் கிழவனைத்தூக்கியெரியுமென்
றார், பஞ்சினிலெண்ணைவிட்டு தீவெட்டிபந்தந்தனைக்கொழுத்தி
அஞ்சாறுபேர்கூடி கிழவனையதட்டத்தொடுத்தாரே
காரக்கருவாடுகள்ளுங் கருவாடுதானறுத்து
கூரைப்புரந்தோருவாண்டியைக் கொண்டுதிரியுமென்றார்
தொக்கிலேபோமாட்டீர் கொட்டுக்குதோதகமாட்டாமல்
வைக்கல்பிரியைச்சுத்திக் கோட்டைவாசலிற்றாக்குவாராம்
சூதக்கட்டுவாதங்கிழவனைத் தூரநடக்கொட்டுதோ
காலில்குதிரம்பிலிரும்பதைக் காய்த்துச்சுடுவோமென்றார்
பல்லில்லையாமாகில் கொட்டைப்பாக்கும்பகையல்லவோ
செள்ளுப்பற்றிக்கிழவா வெற்றிலைதின்றுதாரோம்வாடா
சள்ளக்கருவாடுவேப்பெண்ணைதாளிதமிட்டகறி
வள்ளலேபாப்பானேவொருசந்தி வைத்துண்ணவாருமென்பார்
விஸ்தாரமேனியெல்லாம் ஆண்டிக்குவெண்டலைபுள்ளுகுத்தி
கத்தரித்தோட்டத்திலே வூசிகழுவிலேவையுமென்றார்
ஏனையுலகளந்தாள் முன்னேரின்பலிபூசைபண்ண
மேழைக்கிடாயெனவே கிழவனைவெட்டுவோமென்பாரும்
வீரவயிரவனேஉன்னை வெட்டாதேபுண்ணியங்காண்
பேராளாநீங்களும் பிச்சைதரவேண்டாம்
வாய்ப்பானகோட்டையிலே யினிவாரதில்லையெனவே
அப்பனேமுப்புராதி வாயிலடித்துத்தருவேனுன்
கொப்பானதெய்வமென்றே யென்னைக்கும்பிடமாட்டாமல்

கோட்டாலைக்காரனென்றே யென்னை நீகோரணிகொள்ளுகிறாய்
பாப்பானைவெட்டிவிட்டால் படுபாவம்விளையாதோ
வெட்டினால்பாவம் வயிற்றில்மிதித்தாலும்பாவமில்லை
குட்டினான்சென்னியிலே கூன்பாப்பான்குப்புறப்போய்விருந்தார்
குடிம்பிதனைப்பிடித்து நெளிந்தகூனிலேதான்முடிந்து
நெடுங்கடைவெயிலிலே கிழவனைநீட்டிக்கிடத்துமென்றார்
அதட்டியேகன்னியிட்டு கிழவனையாலிலேதூக்கிக்கொண்டு
உதட்டிலேலக்குவைத்து தெருவிலுருண்டைதெரிப்பாரும்
தாட்டீகன்முப்புராதியுங்கள் தாய்பிள்ளையன்னசுத்தம்
கூட்டோடேவெந்திடவோ வென்னையுங்கோரணிகொள்ளுகிராய்
ஆயிரம்பாப்பானை கையாலடித்துப்புதைத்தாலும்
வாயுரமெங்களுக்கு வேரேமயிரொன்றசையாது
மாறிட்டடியாதேபிச்சைவாங்க வென்றிங்குவந்தேன்
சோரிட்டுத்தந்ததுண்டால் நீங்கள்சொன்னதெல்லாங்கேட்பேன்
சோறுஞ்சுமப்பாயோ கூன்பாப்பான்சொன்னதுங்கேட்பாயோ
சோறுஞ்சுமக்கறியேனப்பனே சொன்னதுவுக்கேட்கறியேன்
கள்ளுங்குடிப்பாயோ கூன்பாப்பான்கஞ்சாவுந்தின்பாயோ
ஆண்டியடித்தீரேயழகுள்ள கந்தையைபித்தீரே
ஆர்பழிபோனாலுமப்பனே ஆண்டிபழிபோமோ
என்னையடித்தீரேயிப்போது யெரிந்திடுமுப்புரந்தான்
தீண்டியடித்தீரேயிப்போ தீப்பிடிக்குங்கோட்டை
நாதனருளாலேயின்னும் நகண்டிடுமுப்புரந்தான்
சிவனாருளாலே தீப்பிடிக்குங்கோட்டையென்றார்

---

## வேறு.

அடியாத்தமாட்டாம லவரைக்கெஞ்சிகெஞ்சி
நெடிதானதிருவடவால் நிணலதிலேயிருந்துகொண்டு
இருந்தவனைமுகம்நோக்கி யேதுசொல்வான்முப்புராதி
வருந்தாமலொன்னுடைய வரலாறுசொல்லுமென்றான்
வரலாறுசொல்வதற்கு வாயிலொருபல்லுமில்லை

## முத்தாரம்மன் பேரில் வில்லடிப் பாட்டு.

பாமாத்ததாலேவந்து பட்டசலம்போதாதோ
தென்குமரிமுதலாயுள்ள தீர்த்தம்யாடிவந்தேன்
பின்குடுமிதனைப்பிடித்து பேண்பிடித்தீர்நீங்களப்பா
நானொருவன்கடும்பசியால் நாடியிங்கேவந்ததற்கு
கூன்முதுகில்கைச்சாத்து குறையாமல்தந்தீரே
நந்தியுடபூசைதன்னை நம்பாதீவிட்டுவிடு
நானிருப்பதறியாமல் நன்றிகிட்டயேன்படித்தாய்
தேனிருக்கயிச்சிதன்னை தின்றீரேமதிகேடாய்
உலகளந்தாளறியாளோ யுங்களுக்குத்தைரியாதோ
விலகுவாரில்லாமல் வீணிலேசாடிவிட்டீர்
என்னுடையவுபதேச மிருந்துநீர்கேட்டதுண்டால்
பின்னையிந்தவுலகுதனில் பிரமாதிநீர்தானே
வார்த்தைமிச்சமாய்க்கிழவன் மழுப்புவதுகேட்டிருந்து
வாண்பெரியவூரணியை வைத்திடவும்பெருகிடவும்
கூன்கிழவாபார்த்ததுண்டால் கும்பிடுவோங்குருக்களென்று
பூஞ்சுனையில்பரலோதி போட்டானேகூன்பாப்பான்
தென்சுனையில்போட்டபரல் தொர்ப்பப்புல்லாய்முளைத்து
செம்பாதிதண்ணீரில் செடியாகக்கணுவெடுத்து
சம்பாலேயணையாக்கி தண்ணீர்தானுடையாமல்
கடுந்தண்ணீருடையாமல் கல்லணைபோலடைத்துவைத்தார்
அடைத்திருந்தமுப்புராதி யாதிவயிரவநாதனும்
பிலனுடையவூரணியை பங்குவைத்தேனிருகூறாய்
அங்குமிங்குமாசைவைக்க யசட்டாளந்தேள்வையில்லை
உங்களுக்குவேண்டியதை வொருகூறுபிடித்திடுங்கோ
முன்கூறுநீயெனக்கு மூப்பாண்டியானாலும்
தென்கூறுவிடுவதில்லை தேவிமுத்தார்புண்ணியமாம்
நட்டமாதென்கூறு நரகமடாமுப்புராதி
மட்டுடையவெந்தனக்கு வடகூருமோக்ஷமடா
நரகமேயானாலும் நான்கூறுவிடுவதில்லை
வரம்பழியச்சொல்லாதே மண்டையுடைந்துவிடும்
கிழவனொருவார்த்தைசொன்னாள் கேளாயோநீதானும்
வீணரைம்போல்சினவாதே விளையாட்டாய்சொன்னேன்நான்

மிக்காகஅரைக்காசி மிளகதுபோலுரையாது
பக்கமுப்புராதியுன்றன் பக்குவத்தைப்பாருமென்றான்
குடமெடுத்து தண்ணீரை கோதியேபூசைபண்ணி
திடமுடையபீடமதில் சிவலிங்கம்நிறவேத்தி
மடமடென்றுவெகுகோடி மந்திரத்தைப்படித்தேனே
தர்மமேயுண்டானால் சத்தியமாய்ப்பலித்துவிடும்
வரமேதுமுண்டானால் மந்திரமும்பலியாது
உன்னியொருசாமமட்டு மொருகாலில்நின்றுகொண்டு
தன்னாலேயாகுமட்டுஞ் சாதித்தான்முப்புராதி
காயமெல்லாந்தால்லுதகை சடைத்துகால்சடைத்து
வாயெல்லாந்துரைதுரைத்து மணியீச்சியூடாடி
சொர்க்குறைந்ததல்லாது சுனையில்தண்ணீர்குறையவில்லை
பல்குறைந்தபாப்பானே பண்டாசமேகேளாய்
நன்றியிந்தக்கோட்டையிலே நாளையெல்லாமவர்மாழ
வந்தாக்கால்செய்திசொல்ல வைத்திடீபோருயென்றார்
இருந்தாப்போமலொருபாப்பா னெரிபட்டான்பொய்கைதன்னில்
பாய்ந்ததண்ணீர்கோலமிட்டு பாதளத்தூருசெல்ல
சுனையெல்லாந்தான்வெருண்டு தூங்கிவரும்வேளையிலே
அளைப்புகள்கூன்பாப்பான் வக்கினியாலேவினான்.

---

## வேறு

அக்கினிப்பா லுப்பைப்பகுந்திட
அத்தண்ணீரெல்லாம் வத்திப்போகவே
மிக்கமீனெல்லா மொக்கத்துள்ளியே
விரையச்சோதாய் புகையெழும்பவே
கிளியோடிப்போய் தேளிமேல்விழ
கெண்டைக்குஞ்சுகள் நண்டைக்கெஞ்சுதாம்
கொளியானமறைமு லூளிமீனெல்லாம்
கும்பல்பாசிக்குள் பம்மல்போடுதாம்
காரல்வாய்க்குள்ளே யாரல்போயப்பும்
கரையத்தேடுதாம் கயலிப்பொடிகள்தான்
சாரங்தேடுதா மானம்பாடிகள்

இடும்புக்காரர்போல் விரால்துடிக்கவே
கிடந்துபுரளுதா மடந்தைவெங்களை
செளுத்திமீனெல்லா முளத்திகூப்பிட
கொழுத்தசாலைகள் புழுத்துசாகவே
குருட்டுகொக்குகள் குதிகள்போடுதாம்
வெளிச்சிகெண்டைகள் கொழித்தபஞ்சலை
மெத்தசுட்டுதாம் பொத்திக்குட்டிகள்
ஒட்டிலாமைபோல் மேட்டிலேறவே
உளுவையானது நளையுதூடுபோய்
முத்துக்குமாரனும் பொத்தநெஞ்சிலே
முட்டிமீன்கள்போய்க் குட்டிபோடுதாம்
மண்ணில்தத்தியே பண்ணிசெத்தைகள்
வண்டிமலையன்தன் கொண்டைமேல்விழ
சள்ளைக்குப்பத்தைக் கொள்ளையாடியே
சம்பங்கோழிகள் கொம்பைத்தேடுதே
வெள்ளைக்கொக்குகள் முள்ளுச்சூடையை
விக்கிவிக்கியே கக்கிசாகுதாம்
உயிர்கொதித்திட அயிரைநெத்தெலி
ஓட்டைசங்கிலேப் போய்ப்பதுங்குதாம்
வயிரசிப்பிளி அயிரைகுப்பங்கள்
வரண்டசேற்றிலே புரண்டுபோய்விழ
பண்டைநீரெல்லாம் வண்டலாகவே
பாசிமீதிலே தீயெழும்பவே
கோபித்துமந்திரஞ் சேவித்தோர்கள்தான்
குரங்குபோலவே யிருந்துதூங்கினர்
கோலமுப்புராதி நீறன்குமர்தானும்
கூன்பண்டாரத்தை கூட்டஓடினர்
சென்றுநின்றுதிரல் முப்புராதிதான்
தெய்வமாக சிறந்தபண்டாரமே
இன்றுபொய்கைதண்ணீர் வத்தவேசெய்து
இந்திரசாலத்தை யேதென்றுசொல்லுவேன்
கொஞ்சமாக நினைத்திருந்தேனுன்னை

குசலவித்தை குறைவில்லையுன்கிட்ட
நன்றிமந்திரம் நாங்கள்படிக்கப்போய்
நாய்க்கும்பேய்க்கு நகைக்கிடமாச்சுதே
வெந்துபோகிது கோட்டைபண்டாரமே
வெள்ளந்தன்னை பெருகஉண்டாக்குவீர்
கெட்டியென்றுபோய் கொட்டிபண்டாரந்தான்
கிட்டவாகிட்டவா முப்புராதியே
திட்டினயோவைதாயோ யுன்பேச்சுத்தான்
செவிக்குக்கேட்கில்லை சிக்கெனசொல்லப்பா
கன்னத்தில்தட்டி காட்டியேகிட்டப்போய்
கங்கைவெள்ளங் கடுகவுண்டாக்கென்றார்
இன்னமேதென்று சொன்னேமேயானக்கால்
எடுத்துப்போட்டு மிதிப்பானென்றெண்ணியே
கேட்டுக்கொண்டேனப்பா கிட்டவில்லாதே
கெங்கைவெள்ளம் பெருகிதுபாரென்றார்
தீட்டும்பாதாள கெங்கையைநோக்கி
சிந்தைமீது தியானித்துவாவென்றார்
மங்கையாகிய கெங்கையும்பொங்கியே
மடமடென்று குதிகொண்டுபொங்கியே
துங்கமானபடி யொன்பதும்விட்டு
சுத்திவெள்ளங் கரைத்திரள்சூழவே
வட்டமாய்ப்பெலி பீடமுஞ்சுத்தியே
மண்டபப்படியை யெட்டிப்பார்க்குதாம்
பட்டபா டறியாதமீனெல்லாம்
பாளிலேதலை கீழாகப்பாயுதாம்
விழுந்துசீலைநனைந்து கொண்டோடுவார்
வெள்ளித்தடிக்காரர் துள்ளியேவோடுவார்
சாட்டைக்காரர் விழுந்துசமட்டவே
தாடிவீசை சகதிகழுகப்போய்
சந்தனப்பொட்டுமண் கப்பிப்போச்சுதே
பட்டுச்சீலை விழுந்துநனைந்திட
பாப்பான்தன்னை வனைந்துகொண்டேசுவார்

ஆண்டிமேலே யடிகள்படாமலே
ஆத்துவெள்ள மழிக்குதேகோட்டையை
வேண்டும்பண்டாரமே வெள்ளமுள்ளதை
விலகிவைப்பா யுலகளந்தாளுக்காய்
என்றுசொல்லி முப்புராதிகும்பிட
ஏழைப்பண்டாரங் கைதொண்டமித்திரனுர்
மன்றில்கோபுர வாசல்முகப்பிலே
மாரில்லா ரிளைப்பாரியிருந்தனர்.

## வேறு.

இழைப்பாயிருக்கையிலே யேதுசொல்வான்மும்புராதி
தழைப்பானஆலிலையை தானுதிரப்பார்த்ததுண்டால்
குருக்களென்றுசொல்லியுன்னை கூசாமல்கும்பிடுவோம்
இருபாதம்பணிந்திடுவோ மிப்போதுதப்பாமல்
நன்றியுடபூசையினி நமக்கினிமேலாகாது
தந்திரமாயினிமேலுந் தருவாயுன்மந்திரத்தை
வண்மைவயிரவநாதா வாய்த்தவீரபத்திரனே
உண்மையுள்ளமுப்புராதி யொருக்காலேசொல்லறியேன்
படர்ந்தமரம்வத்துதற்கு பாடமுண்டுமந்திரங்கள்
மரந்தழையப்பார்ப்பதற்கு மந்திரங்கள்பாடமில்லை
வழக்குடனேயிம்மரத்தை வத்திடநீர்பார்த்ததுண்டால்
தழைப்பதற்குப்பாரெனவே சண்டையிடவாருதே
அழிவழக்குக்காரனென்று அறிவேனுனுன்னைத்தான்
பிழைபோனமரந்தழைக்க பின்புநீபாரத்ததுண்டால்
என்றுசொல்லியேபாப்பா நேரிட்டானுலமரத்தை
அன்றுநம்மைதாங்கிநின்ற ஆலினுடகிளையெனவே
அடையாளந்தெரியாம லஞ்சிலைக்குபிலன்கொடுத்து
மடமடென்றுமற்றுமுள்ள மரத்திலையைகீழ்வீத்தார்
கொப்போடிகருகுதடா கொழுந்திலேதீப்பிடிக்குதடா
கம்பெல்லாமொடியுதடா கணுக்கணுவாயுதிருதடா
வேரெல்லாங்கருகுதடா விளிரோட்டேசரியுதடா

தூரோடே சரியக்கண்டு சொல்லுவான் கூன்பாப்பான்
எரிந்துநீராய்ப்போனாலே யென்னைக்குறைசொல்லாதே
சரிந்தமரந்தன்னாலே சமத்தறியவேணுமென்றான்
மாணிக்கப்பீடத்திலே வைத்திருந்தசிவலிங்கத்தை
பேணிக்கைதொழுதவர்கள் பிரதானபூசைபண்ணி
ஒருகோடிமந்திரத்தை யுச்சரித்தங்கோடிடவே
கருகுவதேயல்லாது காணுதில்லைமரந்தழைக்க
பண்டாரம்பாத்ததிலும் பத்துரெட்டிமரங்கருக
வண்டிமலையனங்கிருந்து வாய்பிளந்தங்கேதுசொல்வான்
பூங்குழலாளுலகளந்தாள் புத்தியிலுங்கிருமமில்லை
ஓங்குகின்றசிவலிங்க மொன்றிலுபேசிரத்தையில்லை
சாதிப்பேனானெனவே தலைகீழாய்நின்றாலும்
ஊதியமும்நட்டமுந்தா னுள்ளபடியேவருங்காண்
சந்தணக்குமாராவுன் சப்பரந்தான்பலியாது
முந்தவேமரந்தழைய முத்துப்பாப்பானீபாராய்
பழிகாரமந்திரங்கள் பாடமில்லையென்றேனே
எழியவனையடிப்பதற்கு யெல்லார்க்குஞ்சந்தோஷம்
முப்புராதியெழுந்திருந்து மொட்டையனைகண்காட்டி
வைப்பறியாக்கிழவனிவன் ஊலக்காரம்பேசுகிறான்
மடமடென்றுபேசுகிற வாய்க்குள்ளேபந்தமுக்கி
பிடரியிலேமிதிபோட்டு பிளக்கடையிலிழுத்தெரிவாய்
முன்னடித்தவடியாலே முதுகெல்லாம்விதனமெத்த
இன்னமுங்கைநீட்டாதே யென்பழியைக்காட்டாதே
வம்புதும்புசெய்தாலும் வைதாலுங்குத்தமில்லை
கம்பெடுத்துப்பிடியாதே கனுத்தழையப்பார்த்திடுவேன்
என்றுசொல்லியாலமரத்தை யேரிட்டுப்பார்க்கையிலே
அன்றுபள்ளிகொண்ட ஆலமரமுதளைத்திடுமாம்.

---

## வேறு

அச்சுதனார்பச்சை மரமாகவேநினைக்க
ஆலிலையும்வாழையிலை போலவேவிரிய

உச்சிதமாய்விண்ணுமண்ணு மோங்கியகொம்பில்
யோகமுள்ளபிள்ளைகள் போலுற்றுவிளிதோன்ற
கொங்கைகள்வளர்ந்து பெருங்குறங்களாக
கோடிகோடியாணி வேர்குலாவியேதழுக்க
வெங்கொழுந்துடன் தளிர்விரிந்துகொடிவீச
வெய்யில்பனிகாத்தினை விலக்கியிருள்மூட
சந்தணக்குமாரர் முத்துக்குமரரரினிமேலும்
சட்டமாசிவலிங்கத்தின் செட்டுப்பலியாது
பெற்றமானபெருவயிற்றை பிள்ளையென்றுநம்பி
பேணிப்பிடித்துங்களுக்கு நாணக்கேடுண்டாச்சு
வாழ்வித்துங்கள்மந்திரத்தை சேவித்துசேவித்து
வாயும்புனுக்கொட்டிநாயும் பீயுமாகப்போனீர்
தேவியாளுலகளந்தாள் மாதாவேயல்லாமல்
செப்பியென்னைவெல்லுவதை துப்பிப்போடுதம்பி
நானறிந்தவித்தையுங்கள் நந்தியறியானோ
நாரிப்போவதல்லாது தேரிப்போகமாட்டீர்
பூனைபோலேதேவர் குடம்பாலதைக்குடித்து
புத்திகெட்டுநித்தம்நித்தஞ் சத்திகெட்டுப்போனீர்
தூர்த்தமந்திரத்தை சரவைதீர்த்துப்போட்டாயாகில்
சூடதிலேகொட்டைக்குள்ளே கூதல்காயப்போறீர்
ஆத்திரத்திற்கென்னுடனே கேட்டுபிழையாட்டால்
அடுப்பங்கரைபூனைபோலே பொசுங்குபடப்போறீர்
சித்தமரபூசைபண்ணு சிவலிங்கத்தினாலே
செத்தசாரைப்பாம்புக்கு செலத்தையதுழுண்டோ
வித்தகர்களேதலையை சுத்தியாடுங்கோ
வெட்டவந்தால்நந்தி கிட்டப்பட்டுகொடுப்பேனான்
அல்லப்பிள்ளாய்வேறுவீட்டு செல்லப்பிள்ளைநீங்கள்
அம்பலத்தில்தின்றுபோட்ட தம்பலத்தையுண்டீர்
கில்லுவிளையாதினிமேல் நல்ல்சிவலிங்கம்
கிட்டவுமாகாது கடல்விட்டெறியுமென்றார்
மண்ணில்விழும்பிள்ளைக் கருவாமனையைப்போலே
வள்ளலிந்தபண்டாரங் கள்ளமரச்சொன்னான்

முன்னும்பின்னும்கூறு முழுக்கிழவன்முன்னே
மோசப்பட்டுநம்முடைய ரோசங்கெட்டுப்போனோம்
இன்னமொருநூற்றுமூன்று சிவலிங்கத்தினாலே
என்னசிறப்புகளை யெடுத்துக்கொண்டோம்நாமும்
குட்டுப்பட்டால்மோதிரக்கை குட்டுப்படவேணும்
கொம்புநரைத்தோன்தனையுங் கும்பிடவேவேணும்
சட்டமுள்ளநந்தியினு மெட்டுக்கொண்டவன்காண்
தாட்டீகன்மந்திரத்தை கேட்கவேணுமென்றார்
உலகளந்தாள்மாதாவுக் கூழிஞ்செய்திருந்த
ஒண்டொடியாள்பேச்சியம்மை கண்காட்டிச்சொல்வாள்
இலகுமுப்புராதிமன்னு சந்தனக்குமாரன்
ஏதுக்கோடாயிவனோடே சாதிக்கிறீர்நீங்கள்
தொட்டதுசாதிக்கவந்த வொட்டுவித்தைக்காரன்
சொல்லிவீரங்கண்ட விடங்கில்லுதற்குவந்தான்
நட்டவிடஞ்சுட்டமுளுக் கெட்டகெடுவன்காண்
நாய்பிழைச்சலாக்கியுன்னை போய்பிழைக்கவொட்டான்
சுட்டித்தலையனாலே கெட்டகுடிமெத்த
சுத்துக்கோட்டைமூன்றினையும் சுட்டுப்போடபோறான்
ஓட்டிவுரலிற்பெருக் கட்டுப்பட்டகளவுன்
ஓரிக்கிழவனுனக்கு வேறுகிளையல்லோ
பால்பானைதானுருட்டு ஆய்ப்பாடிபூனை
பச்சைதின்னியுங்களுக்கு மிச்சந்தரமாட்டான்
மார்க்கமாய்மழுக்குகின்ற வாய்ப்பகட்டுக்காரன்
மருட்டியுங்கள்மண்டையை யுருட்டிப்போடப்போறான்
குரங்குகொழுத்துதன் குண்டியிலேசுட்டாப்போல்
கூடிக்கூடிநீங்கள்வினை தேடிக்கொள்ளவேண்டாம்
இலங்குகின்றகோட்டையை பிலன்கேட்டுப்பாரென்றே
எண்ணியந்தப்பேச்சியம்மை புண்ணியவதிசொன்னாள்
வள்ளலிந்தபண்டாரங் கள்ளனென்றுசொல்ல
மங்கையரேயிந்தப்புத்தி யெங்கேபோய்ப்படித்தாய்
இல்லையென்றுவஞ்சகங்கள் சொல்லியறியாண்டி
எட்டியடித்தாலுமவன் பட்டுக்கொடுப்பாண்டி

உன்னைப்போலொருத்தியாலே தென்னிலங்கைபோச்சு
உபகாரஞ்சொன்னபுத்தி போதும்போதுந்தானே
ஏன்னைப்போல்நல்லவர்க ரில்லையென்றிருந்தேன்
எட்டியெங்கள்நெஞ்சிலேயுங் குட்டிப்போட்டாண்டி
வஞ்சகமில்லாக்கிழவன் றஞ்சமினியல்லால்
வம்பனிந்தநந்தி தனைக்கும்பிடுவதில்லை
கஞ்சனைப்போற்கெட்ட புத்திக்காரனிந்தமுப்புராதி
கைச்சிவலிங்கத்தை கடலிலேவிட்டெறிந்தான்.

## வேறு.

அந்தசிவலிங்கம் விட்டெறிந்தபொழுதேதான்
ஒப்பினைவாண்டியுந் தப்பினதாய்ப்பேரளித்தான்
வந்தினைமுப்புராதி மந்திரங்கேட்பதற்தாக
வண்டிமலையாபோய் பண்டாரத்தைகொண்டுவாடா
கண்டவிடமெல்லாந் தேடியும்பாப்பானைக்காணோம்
காட்டையும்நாட்டையும் கோட்டையும்பார்த்தவன்காணான்
பண்டாரமாகிய சண்டாளபாவியைகாணோம்
பண்புள்ளவாள்வீர பத்திரவயிரவநாதன்
பித்தனைப்போல்வந்துதெத்திப் பிரட்டியேபோனான்
பேச்சியேநாச்சியார் சொல்பிழையென்றேகுதித்தோம்
செத்தசவத்திலுமெத்தவன் வார்த்தையைக்கேட்டு
செல்வத்தைவாரிக் கடலிலெறிந்துகெடுத்தோம்
முண்டப்பிராமணன் மண்டையைக்கீறியுடைத்து
மூளையெடுத்துவிரட்டாமல் விட்டதுமோசம்
வண்டத்தனமர்கத் தூணோடேகட்டிவையாமல்
மாப்பிள்ளைபோலவேவைக்கத் தொடுத்தல்லோபோனான்
நல்லவனென்றல்லோ பொல்லாப்புசெய்யாமல்விட்டோம்
நம்மைக்கெடுத்தானே அம்மாவுலகளந்தாளே
சொல்லாமல்போனது கொல்லாமல்விட்டதுமோசம்
துய்யத்தடிக்கம்புகையைக் கடித்தேதுசொல்வான்

ஈட்டுஞ்சிவலிங்கம் போச்சுதேவண்டி மலேயா
இந்திரன்காலில்விலங்கை சிக்கென்றிடுக்காய்
பூச்சிமையாண்டிகள் வுண்டிடபோசனம்போட்டு
புரக்கொழுப்பேர அருத்துகொடிக்கறிப்போடாய்
கானெனவந்தோர் கூனனும்நந்தியும்போனான்
நன்றாயிருக்கநமக்குச் சனியனும்போச்சு
தேனெனச்சொல்லிய கூனனேயெந்தத்திசைக்கும்
சென்றுகண்டேனென்று லன்றைக்குச்சொல்லுமேவன்செய்தி
இத்தனை நாளு மிருந்தோமரியாதையாக
எண்ணிப்பாராதே யினிமேலும்வண்டி மலேயா
புத்தியும்போதமும் சொல்லியேவாசலும்பூட்டி
பொற்கோட்டைக்குள்ளே போய்முப்புராதிவீற்றிருந்தார்

---

## வேறு.

ஒளித்ததிருமால் வெளிக்கொண்டுசென்று
ஓசைக்கடலி லொருபுரமாக
தளைத்தசிவலிங்கம் பிழைத்தேகிடந்தால்
தாங்கமாட்டாது சமுத்திரமேழும்
தண்ணீரையுண்ணுமென் றெண்ணியேமாயன்
சகரத்தொருகடலிலே மகரவடிவானார்
எண்ணியேமுப்புராதி யுன்னியெரிகின்ற
லக்கிலேசென்று சிவலிங்கமெடுத்தார்
தயிருண்டுவளர்கின்ற ஆய்ப்பாடிமாயன்
தணியாதுவெள்ளியங் கிரியிலேசென்று
கைலேமலேயிற்சென்று திரிபுரக்கோட்டை
கற்பமிதுவென்று செப்பமுடன்வைத்தார்

குறித்தசிவலிங்கம் பரிக்குமுன்னேதான்
குட்டுஞ்சமட்டுவர் கொஞ்சமோதந்தார்
சறுக்காமல்மிதியிலிடு வெகுமான்வரிசை
வந்ததெல்லாம்வாங்கிக் கொண்டிங்குவந்தேன்
வேறொருவரங்கேபோய் மீண்டுவரமாட்டார்
வெள்ளிமலையீசனே யென்றடிபணிந்தார்
நீறுதவவேடமுற்று வீருபெருசிவனார்
நேயமொடுதிருநந்தி தேவரையழைத்தார்
மூன்றுமொருநூறுடனே மூன்றுகொடுபோனார்
முப்புராதிக்கொரு குருவல்லோநீதான்
உன்னுடைய சீசனல்லோமுப்புராதி
ஒருமூன்றுசிவலிங்க மெங்கனேயொளித்தாய்
சிவசிவா பரமேஸ்பராகைலையாளி
தெரியதியானவுபதேசம்துசெய்வாய்
சுவடாகவுமூன்று சிவலிங்கங்குருவே
துடித்திடகண்டவ ரெடுத்துள்ளேசென்றார்
தீக்காலமாகிவரு சாக்காலமுண்டால்
தீன்பிடிசோரது கொன்றுவிடுமேதான்
போக்கத்ததந்தைதாய் சீசரானாலும்
பொல்லாதபேர்களை கொல்லுவதுகருமம்
துலங்குதிருநந்தியவர் சொன்னதுமகிழ்ந்து
துள்ளியேவரும்விடை வள்ளலார்சொல்வார்
மலங்கிடுந்தேவர்கள் விலங்கதுதெரிக்க
வாசமுருசிவலிங்க பூசைசெய்யுமென்றார்
கைலைமலைதன்னிலே சிவலிங்கபூசை
கணநாதரோடுநந்தி கட்டளைமுகிர்த்தார்
பயிலுமொருநீலன் குமுர்தனாதித்தன்

பண்பானகோட்டையில் பட்டசிரையாளர்
துடர்சங்கிலியிலே கண்டுண்டபேரது
தோல்விலங்குள்ளபேர் கால்விலங்காளர்
நிஷ்டூரமாகவே குற்றேவல்செய்தோர்
நீடியபெருஞ்சிறை நீங்கியவர்போனார்
தேவர்சிறைமீண்டுதே பூவுலகமீது
சிவனையல்லாதுமொரு தெய்வமினியுண்டோ
காவலுருபாற்கடல் கோவிந்தர்கேட்டு
கைலாசமூர்த்தியை தொழுதுசொல்வாரும்,

---

## வேறு

கரியுருகிராங்கள்மலே கரைகண்டாய்காங்கயனே
உபதேசநந்திதேவரு யிதமதுதான்போச்சு
சிவலிங்கம்பரிபோச்சு சிரத்தையில்லைகோட்டையிலே
தகைத்தமுசலடிப்பதற்கு சலிப்பேதுமைத்துனனே
மகத்துவமாய்முப்புராதி வலுக்குறைந்துபோனன்காண்
காற்றுநன்றாய்வீசுகையில் காடுசுட்டுக்கொள்ளவேணும்
மத்தமொன்றுந்தெரியாமல் வரவேணுங்கோட்டையிலே
என்றுரைத்தநாரணர்க்கு யெடுத்துரைப்பாரீஸ்பரனார்
உன்னுடைய தங்கையல்லோவுலகளந்தாள்
பெண்ணொருத்திகற்புடையாள் பெருங்கோட்டைக்குள்ளிருந்து
தண்ணீரிலக்கினிபோய் சார்ந்திடுமோமைத்துனரே
அவளையிங்குகூட்டிவர ஆள்விடுங்காண்கோட்டையிலே
துவமுநடையொட்டனும்போய் சொல்லுவானம்மனுக்கு
காவுலகில்யாபேர்க்கும் நடுவாகயிருந்தவளே

பாவைமுத்துமாலையம்மர பரமருன்னேவரவழைத்தார்
மகாதேவர்வரவழைத்தால் மாராட்டம்பேசரிது
கோதையந்தமூன்றுமுகங் கொண்டவள்போல்தேரேறி
வயிரவநாதன்வீரபத்திரன் மன்னன்முப்புராதியையும்
வடகைலேமலேபதிற்போய் வருவேனென் சீக்கிரமாய்
அடகுடையகோட்டையிலே யசையாமலிருந்திடுங்கோ
நீலன்முப்புராதியையும் நில்லெனவேயிருத்திவிட்டு
கோலவர்ணதேர்மேலே கோதைமுத்தாள்செல்லுவாளாம்
மைவிழியாளுளகளந்தால் வயிரவருமாயிருந்தார்
கைதொழுது திருமாலும் கரைக்கண்டர்க்கேதுசொல்வார்
முத்துமாலேயிங்குவந்தாள் மூத்தவள்போயங்கிருந்தாள்
மன்னவனேயன்பத்தெட்டு வருஷமதுதிகைந்ததுகாண்
ஏத்தறியாமுப்புராதிக் கினிமேலுங்காலமில்லே
வழுவாதுகோட்டைதன்னே வைத்திருக்கப்போகாது
பண்டாரமாகச்சென்று பட்டபாடறியாயோ
கண்டதுண்டால்நம்மையவன் கையிலேதிரும்பவொட்டான்
வருத்தமில்லாக்கோட்டயிலே வழுவோடேசெல்லவேணும்
கூடினவர்தான்பேசி கோட்டைபிலேபோவதற்கு
ஆண்டியென்றும்இடையனென்று மவர்வேடங்கொள்ளுவாரும்

---

## வேறு.

திருந்திநீண்டுவடிந்த காதிற்செம்பைத்தூக்கியே
சேலேக்கும்புலித்தோலுக்கும் பணிசேமஞ்சாத்தினர்
புரிந்ததிலகம்விரிந்த கலகம்புருவங்காட்டியே
பொருத்துமாட்டுத் திராச்சம்போதப்பூட்டினர்

காசிவேட்டியூசி நாட்டிகந்தை தூக்கியே
க்டியசிலேக்கொடிமுடிந்து கப்பணம்போட்டார்
கூசிக்கையை வீசிப்பையக் குனிந்துநிமிரவே
கோட்டைகலேசிம்மாட்டை வேண்டிகூனிப்போகிஞர்
கொழுக்கும்பேரையழிக்கும் தீயைக்கொழுத்தப்போயிஞர்
நெடியமானிடையனுக நிரந்தமேனியாய்
நெட்டைத்தடிமொட்டைத்தலேயும்நெளிந்தவாயும்
வெடுவெடென்றுகாலுங்கையும் விரைத்தமேனியாய்
வெழுத்தவீசைபுழுக்கடிதனில் வெளிவிழுந்திடவே
ஈரும்பேனுமூட்டையு குடியிருந்தமேனியாய்
இட்டதிருமண்கட்டி யிருபத்தேழுநாமமாம்
கூருஞ்சீத்தைவாயிலூத்தை குவளேபாயவே
கூளேக்காலுமூளிச்செவியுங் கோணத்தடியுமாய்
வளர்ந்தமைத்துனன் விழுந்திடாமல் வழியுங்காட்டவே
வரட்டுத்தடியுமண்கரட்டென் றிருமால்வலிப்புங்கூடவே
வாதச்சேட்டைக்கிந்து நடையுமாறுகண்ணுமாய்
வலித்துவலித்துகுலுக்கிகுலுக்கி வழியுங்கூட்டிஞர்
தளர்ந்தநடையில்விழுந்திடாமல் சரிந்தயிடையஞர்
தாங்கிபிடித்துதூங்கிதூங்கிஞர் சாதியாகப்போஞர்

———

## வேறு.

இடையனென்றுமாண்டியென்று யிருபேருமுன்னும்பின்னும்
தடையரவேவருகையிலே சந்தனக்குமாரன்கண்டான்
கண்டுமுப்புராதிதன்னே கண்காட்டியேதுசொல்வான்
இரப்பாண்டிகூத்தூடனே இடைச்கூத்துவருகுதுகாண்

உரத்தசிவலிங்கமின்னு முண்டுமென்றுவாருன்காண்
சொல்லாமல்போனவன்காண் துணைகூட்டிவாருன்காண்
பொல்லாப்புசெய்தவனை போய்பிழைக்கவொட்டாது
பாப்பானும்முன்னேவந்த பலவேசக்காரனவன்
பண்டாரமிவனெனவே பச்சம்வைத்துசொல்லாதிங்கோ
தடந்தெரியாமல்போர சமர்த்துவித்தைக்காரனிவன்
கடந்தோடிப்போகாமல் கண்போட்டுநின்றிடுங்கள்
உபதேசஞ்சொல்லாம லொளித்தோடிப்போனவன்காண்
சிவஞானியாரேநீர் திரும்பயினிப்போவீரோ
ஒருவனைப்போட்டறுத்ததுண்டா லொருகூடுகிடையாது
இருவரையும்போட்டறுத்தா லெல்லோரும்பங்கிடலாம்
இடையனுடகழுத்திலே யிரும்புகிட்டிப்போட்டிடுங்கள்
கடுகவந்தஆண்டிதன்னை கைப்பிடியாய்க்கொல்லுமென்றான்
அடியென்றசொற்கேட்டு அரனாரும்பிரகொளித்தார்
குடிகெடுத்தபாவியிடங் கூட்டிவந்துகெடுத்தாயே
என்றுரைத்தபாசனுக்கு யெடுத்துரைப்பாரீஸ்பரனார்
குன்றுமலைவிழும்போது கொம்மட்டிக்காய்தாங்கிடுமோ
முப்புரத்தைசுடும்போது முப்புராதிமரிப்பானோ
தப்பாமற்கெடுகிறவன் தலைகீழாய்ச்சொல்லானோ
சொல்லுவதேயல்லாது தொடுவானோநம்மையவன்
வெல்லுவதுந்தோப்பதுவும் விதியின்படியேவருங்காண்
அந்தரத்தேமறைந்துகொண்டு ஆதிபரனேதுசொல்வான்
மந்திரமாமலையதன்னை வாய்த்தவில்லாய்த்தானூன்றி
காயமுருபாம்புதன்னை கயிறாகவேதொடுத்தார்
மாயவனையம்பாக்கி வலகையிலேபிடித்து
ஆனியென்னுந்திங்களிலே யக்கினிவாரந்தனிலே
காலிலத்திற்பூரமென்னு நட்சேத்திரந்தனிலே
உம்பரெல்லாங்கொண்டாட வுக்கிரமாய்த்தானெழுந்து

அம்புதனைவிடுவதற்கு அரனில்லைகாண்கோட்டையிலே
வில்லதனைகீழ்போட்டு வெருங்கைகொட்டியேசிரித்தார்
உல்லாசமாய்ச்சிரிக்க கோட்டையில்தீப்பிடித்திடுமாம்

---

## விருத்தம்.

---

திரிபுரமெய்நகை செய்தனர்சிவனார்தாமும்
அருவுருவாகிநின்ற ஆதியைமனதிலுண்ணி
கருநிரைவண்ணன்றானுங் கணைதனைத்தொடுத்தபோது
திரிபுரமெரியுதய்யோ சிவசிவாசிவனேயென்றார்

---

## வேறு.

கோட்டையிலக்கினி குப்புரப்பிடிக்க
கூடாரங்கள் குலுங்கநடுங்க
பூட்டியவாசல் கதவுநகண்டு
பொந்திலிகர்சிலர் கிங்கிலர்பட்டாடு
மண்டபமுடி கடிடிந்ததினாலே
வாசலிலாயிர மல்லர்கள்பட்டார்
பண்டுருகோபுரக் கோட்டைநகண்டு
பட்டத்தானையும் பாகரும்பட்டார்
கொத்தழவெள்ளிக் குழலுமருங்கும்
கோட்டைமதிலொடு கூடியேசுடுமாம்
லட்சத்தறுபது சேவகர்பட்டார்
முப்புராதியுட வைப்பதுபெண்கள்

மூவாயிரம் பெண்களேமாண்டார்
குப்பெனவால மரத்துலொதுங்கி
கொங்கையொடிந்தவர் மண்டையில்விழவே
செப்புக்கோட்டையி லேறினபேர்கள்
திருகியசெம்போ டுருகியேநீரானார்
அம்பலமீது யிருந்தகணக்கர்
அறுபதுபேரும் நொடியிலேமாண்டார்
தாவியபொய்கையில் மூழ்கியபோது
தண்ணீரும்நின்று கொதிக்கிதுபாருய்
பூவிலுமெல்லிய பொன்னுடல்சோர
பொரியுதுசிறுமீன் கருவாடெனவே
குதிரைச்சாணி கருகினதுபோல
கொல்லையினாய்போல் பல்லதுதெரிய
சதிரக்கோட்டை யம்பலம்வேக
சந்தியிலிருந்தவர் வெந்துகிடந்தார்
கிழவனையெடுத்து தோள்மேலேவைத்து
கீழேயிருந்த யிளையவர்மாண்டார்
தெளியப்பொன்னோடு வெத்திலைதின்ற
சிவந்திடும்வாய்கள் கருகுதுபாராய்
கண்ணைப்பொத்திய பெண்ணொருகணவன்
திண்ணைத்தலையொடு தண்ணீர்ப்பந்தல்
சென்றுவளைந்து துதித்திரளோடே
கோதிமடக்கிய பூவைமுடித்ரு
கொண்டையெல்லாம் வேறேமண்டையதாக
பாதிக்கன்னங் கறியொடுபரிபோய்
பல்லுத்தெரிகிற பாவினைபாராய்
பூசிமினுக்கிற தாசிகள்வீடும்

பொருளுஞ்சேரக் கருகுதுபாராய்
ஆசையுடன்சூழ் கூன்பாப்பானை
அடிக்கிரகைகள் துடிக்குதுபாராய்
வெள்ளைச்சாம்பலாய் விழுகுதுபாராய்
மாலைகூடை பரித்திடுங்கைகள்
வலியவெலும்புக ளொடியுதுபாராய்
சப்பிரமஞ்சங்கள் பெண்ணோடுகூடிய
தங்கியமுத்துத் தம்பி விழுந்தான்
வைப்புடைதலை வாசலிற்போமுன்
மண்டையுடைந்தான் வண்டிமலையன்
அவனொருவண்டி படாதுபோவானோ
தீண்டிலுரடி யாகிலுமடியாட்டால்
செத்தாலுஞ் சினந்தீருவேனோ
மோதியவிப்படி பேசிடுமுன்னே
முப்புராதி மேல்க் கினஞ்சொல்லுமாம்
மாதர்களே கொட்டாரந்தன்னைவிட்டு
மணிமுத்தாருடன் மண்டபம்புக்க
வெங்கலக்கத விலக்கினிபிடிக்க
வெள்ளித்திருமதி லிடியுதுபாராய்
மங்களமேடை யெரிந்துதணிந்து
வாழ்ந்திடுமூன்று பேருமடிந்தார்
கோட்டையழிந்திட தேவர்கள்கூடி
கொட்டோடேவெட்டி குரவையுமிட்டார்
காடியவக்கினி நரகத்தெழும்பி
காவுலகில் புகைதாளெழும்பிடுமாம்

---

## வேறு.

அந்தச்சமயத்தில் நந்தியைகிட்டவழைத்து
ஆரபாரசத்த மேதென்றுகேட்டானர்
பேந்தமுடன்கோட்டைக்குள்ளே முப்புராதிவாழ்வு
பிடிக்குமிடையன் தடிக் கம்புபோலவேபோச்சு
கோட்டாரதண்ணீரைவிட்டுத் தணியமேதபோனல்
கொள்ளைபுகைவந்து பூமியைமூடியேகொள்ளும்
ஈட்டிடதண்ணீரைவிட்டிட ஆளிங்கேயில்லை
ஏத்ததோராலமரத்தைப் பிடிங்கியடித்தால்
ஆலமரத்தைபிடுங்கி யங்கேசென்றடித்தால்
அக்கினியாவது மிக்கயெழும்புமேஅய்யா
ஏலவேவண்மை கருடனேயீஸ்பரனே
இருசிரசாலேகடர் தண்ணீரைவாரியிரைத்தார்
உள்க்கோட்டைபிரக்கோட்டை மொக்கத்தணித்து
உள்மண்டபத்தில்கிடந்தவர் தங்களைக்கண்டார்
வெட்காமல்மூன்றுசிவ லிங்கம்தன்னைவிழுங்கி
வேகாமல்மெத்த பதைக்கின்றநெஞ்சதுபோலே
இன்பமுடன்நந்திதண்ணீரை யள்ளியெரிய
ஈரியகோட்டையி லாறின அக்கினியெல்லாம்
கந்திக்கெருடாழ்வார் நந்தியுடன்சென்றுகாண
கஞ்சனைப்போலொத்த வஞ்சகநெஞ்சதுகண்டாய்
பொய்யாதுநான்சொல் லுபதேசங்கீழ்ப்பட்டுப்போச்சு
பூசைச்சிவலிங்க மெங்கணேபோட்டுப்புதைத்தாய்
பையனுலுன்னலே யெத்தனைபாடுகள்பட்டே
பஞ்சமாபாதகம் பண்ணிக்கெடுத்தாயேபாவி
ஊதியக்கேடுகள்பண்ணியே நட்டமுண்டாக்கி
உன்னலேநீகெட்டா லென்னலாவதுமுண்டோ

கோதில்லாப்பேச்சி யுலகளந்தாள்முத்துமாலை
கூடவேபோய்விட்டால் வாருதுகாணிக்தகொள்ளை
இத்தனைபிள்ளையிற் புத்திகள்சொல்லிவளர்த்தேன்
என்புத்திகேளாமல் துன்பத்திற்குள்ளாயிருந்தாய்
முத்துத்தம்பியொடு முத்துக்குமாரன்பிறந்து
மூதேவிபிள்ளைகள் சீதேவிவாழ்வுக்குமோசம்
வாடாதகோட்டைக்கு கேடாகவந்தகூன்பாப்பான்
வார்த்தையைக்கேட்டல்லோ மண்ணுண்டுபோச்சுதுவாழ்வு
நீளக்குளிரிமையிர் போடாதினிமேனிவிட்டால்
நெஞ்சடையுந்தின்று நீராக்கிபோட்டிடுமென்று
பண்டையுகிதமறைந்து பகைத்தவனென்று
பாதகத்தைகண்டுபோனல் நமக்கதுபாவம்
கொண்டதோர்நட்பு குறையாமல்நந்தியின்கோமான்
கோலக்கொடுங்கைகுறக் கொள்ளிபோலேயெடுத்து
மண்ணில்கிடக்கிற சீதளத்தண்ணீரைவார்த்து
வாழைக்குருத்திலுடம்பை பொதிந்தங்குவைத்தார்
கிண்ணந்தொண்ணூரிற் கிடாரத்திலெண்ணையைவிட்டு
கெட்டியாயெட்டுநாள் பந்தலுக்குள்ளேகிடந்தான்
கொல்லன்துருத்திபோல் மூச்சிடுமேனிகுறைய
கோடாதுவந்து கண்டமூகுருக்குசத்தி
வலமையாகமனக் குறையில்லைநமக்கு
மக்களிருக்கவனு வென்றிருந்தேன்மகனே
கொஞ்சவயதிலே வஞ்சகதீயிதுகண்டாய்
கோட்டையழித்தவன் மேலிடாதோயிக்கொதிப்பு
ஈஸ்பரியாகிய மாதாவுலகளந்தாளை
என்றைக்குமிங்கே யிருக்கவிதித்தாயில்லையே

தஞ்சமாயெனக்குமுன் பொன்னைமத்தா
தாய்க்குமகனைசெய் சடங்கொன்றுமில்லையே
ஆசையுடன்பால் கொடாமல்போனதற்காக
அங்கையால்வாரி அணைத்தவள்தாருட்டுவாளாம்

உ

## வேறு

பஞ்சாட்சரமறிவாய் பரமனுடநிலையறிவாய்
அஞ்சாட்சரந்தனிலே யக்கினியில்மாழ்வாயோ
மெல்லணைமேற்கிடவாமல் வெறுந்தரைமேற்கிடப்பாயோ
புல்லணைமேற்கண்ணுறங்க பொல்லாதகாலமிதோ
வீடெல்லாம்வெளியாச்சோ மேனியெல்லாம்விரகாச்சோ
கூடாரவாசலெல்லாங் கோட்டையெல்லாம்புகையாச்சோ
உபதேசஞ்சொன்னநந்தி யொளித்துவிட்டுப்போனானே
செய்ததெல்லாந்தீவினையோ தேவருக்கும்விளையாட்டோ
காட்டில்விட்டுப்போனதற்கோ கண்முழியாதுரங்குகிறாய்
கேட்டசெய்திசொல்லாமல் கிடப்பாயோநீமகனே
செங்கையிரங்குதடா சிறுவயதில்கண்டதடா
அங்கமெல்லாங்கொதிக்குதடா யாசையலைமோதுதடா
பேரில்லாபாபியடா பிள்ளையடாநீமகனே
நீரியணலாகுதடா நெடுவாடைவீசுதடா
பாற்குடங்கள் வருகுதடா பரிப்பதற்குயெழுந்திரடா
மாலைகூடைவருகுதடா வாரிப்பிடிக்கலையோ
வாகுடையகூன்பாப்பான் மாயமுன்னைசுட்டதடா
எண்ணாமல்கோட்டைதன்னை யெடுத்தவனைவிடுவேனோ
ஏச்சானவன்சேச்சானோ யெருதேரிவந்தேய்த்தனோ

ஆச்சிதன்பாலையுண்ட அடியுண்ணிவந்தேய்த்தானே
பேச்சிதன்பாலையுண்ட பெருமானுமென்மேலும்
ஏச்சிவந்துசிரித்துவிட்டா னெரிந்துவிட்டாயோமகனே

---

## வேறு.

அந்தக்கைலாசந்தன்னிற்சென்று அரக்கியர்மூபேரும்
அண்ணலேமுக்காட்டில்முப்புராதி கோட்டையழிக்கின்றகாரணங்
கேள், பந்தமாய்நந்தியைவிட்டிந்தபிள்ளைக்கு பால்கொடுத்தேவளர்
பாய், பண்ணியபூசைக்குவேண்டிய சிவலிங்கபாக்கியமுங்கொடுப்
பாய், கோதையுலகளந்தானைவிட்டு மூன்றுகோட்டையும்போடச்
சொன்னார்; கொஞ்சத்தினல்செய்தகுத்தத்துக்கு யிந்தக்கோபம்வ
ருவானேன், பேதமையாலன்றுகாட்டிலே யீந்திடும்பிள்ளைக்கிரங்கா
மல், பெண்மதியாலேயிருந்ததுமுந்தன் பிலத்தைக்குறித்தல்லவோ
பாதையிற்பூக்கூடைமாலையும் பாற்குடப்பாலைபரித்ததினல்
பாவியென்மக்களிடுகின்ற கோட்டையைப்பாத்துச்சிரித்துக்கொண்
டாய், கள்ளச்சிரிப்பாணியுள்ளத்தி லின்னங்கடுங்கோபந்தீரலேயோ
காட்டிலரக்கியெனக்காக தேவர்கடாக்ஷந்தாவேணும்
பிள்ளையுந்தானுஞ்சிவனேயுனக்கு பெரும்பாவியாகிவிட்டால்
பெரியமாதாவுக்காவேண்டி யென்மக்கள்பிழையைப்பொருத்தருள்
வாய், கோலிடையன்கையில்கோடாலிவெட்டுக்கு கோபம்வராததெ
ன்ன, கொஞ்சக்குழந்தைகள்பாலைப் பரித்ததில்கோபம்வருவானேன்
ஏன்றென்றுகும்பிடும்பெண்களுக் குள்ளமிரங்கியேயீஸ்பரனர்
எடுத்துவரச்சொல்லிவண்டியுந் தூதரையேவினர்கோட்டையிலே
சென்றந்தவஞ்சகசாம்பலை நீக்கியேதீதின்றமேனியெல்லாம்
தீண்டியெடுத்துடலைவண்டியிலேற்றி சிவனிடத்திற்கொடுபோனர்

மலையிலேயரசிருப்பு மண்டபத்தில்சிவனிருக்க
குலவுகின்றவண்டிவிட்டு கூடையுடனிரக்கிவைத்தார்
தன்னறிவாய்க்கும்பிடவே தலையுமில்லைக்கையுமில்லை
புண்ணியத்தைபரிகொடுத்து புகையுதேநெஞ்செலும்பு
மூவரையுந்தான்பார்த்து மொழிந்தானேயிந்திரனும்
தேவருடபுளுக்காரர் தீர்ந்தோமென்றேயுரைத்தார்
உருப்பிடித்துக்காலுங்கையும் உண்டாக்கியமைத்திடுவான்
திருக்கண்ணாலேபார்த்து சிவனுமெழுப்புமென்றார்

---

வேறு.

முன்னேயிட்டதீமுப்புரத்திலே முனிவரிட்டதீதென்னிலங்கையில்
அன்னையிட்டதீயடிவயிற்றிலே அரனிட்டதீ மூழ்கமூழ்கவே
கையிலேசிவலிங்கமிருந்ததுங் கல்விதன்னைகடலில்கவிழ்த்ததும்
மெய்யிலேசிலபொய்கள்பிறந்ததும் வேகமுப்புரம்வெந்துதணிந்ததும், செய்யமூவர்வுயிர்பெற்றெழுந்திட தெய்வமுத்தார்கடாக்ஷம் பிறந்ததே.

85711

முத்தாரம்மன் பேரில்

வில்லடிப் பாட்டு.

முற்றிற்று.

உ

புதிதாயச்சிட்ட

## வள்ளி சுயம் வரம்,

இஃது வள்ளியம்மை மான்வயிற்றிற் ஜெனித்து குறவர்க்கரசனாகிய நம்பிராஜன் கிரகத்தில் வளர்ந்து கன்னிப்பருவம் கழித்து தக்க பருவதிசையடைந்து வனஞ்சென்று செந்தினைக்கதிரை பக்ஷி ஜாதிகள் கொய்யாது காவல்புரிந்து நாரதமாமுனிவரோடு வாது கூறிச் சுப்ரமண்யவேடுவனோடு வாதுபேசிப் பண்டாரக்கிழவனோடு மனமகிழ்ந்து பரன் மீதிருந்து அன்னவருக்குத் தொண்டுசெய்து சுனையடுத்து யானையாற் சிவசுப்பிரணிமயரை காந்தர்வமணம்புரிந்து தினைக்கதிரறுத்து அண்ணன்மார்களோடு சிற்றார் சென்று குகனைநினைத்து சோகித்துப்பின்னர் சிவசுப்பிரமண்யரைப் பாணிக்கிரஹணஞ்செய்து திருப்பறங்குன்றஞ்செல்லுதல். இப்பாகங்களிற் சாஸ்திர யுக்தப்படி நவரஸங்களாலும், இந்துஸதான், பார்ஸ், கெஜல், டோபரி, துக்கடா, சிந்து, கீர்த்தனை, கலிப்பா, வெண்பா, விருத்தப்பா, ஓடிப்பதம், முதலிய வர்னமெட்டுகளினா லியற்றப் பெற்று நல்ல கிளேஸகடிதத்தி லாங்காங்கு ஐதீகப்படங்களுடன் அச்சிட்டுத் தயாராயிருப்பதாலும் காப்பிசொற்பமாய் போட்டிருக்கிறபடியாலும் முந்தினவர்களுக்கேயன்றி பிந்தினவர்களுக்கு கிடைப்பதரிதாகும். வேண்டுவோர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதி நேரிலும், வி. பி. மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை கலிகோ பயிண்டு 0—12—0

86 பார்டுகளும் படங்களுமடங்கிய பலவேஷநாடக மென்னும்,

## விகடப்பிரசங்கம்.

ஓர் தமிழ் விகடநாடகம் பார்ப்பவர் மனதை பரவசப்படுத்தும் வாசிக்க வாசிக்க வருத்தத்தைநீக்கிச் சந்தோஷத்தைக் கொடுக்கும் இப்புத்தகத்தில் விகடமடங்கி யிருப்பதைப்போல் வேறுபுத்தகத்திற் பார்ப்பதரிது நாடகக்காரர்கள் அவசியம் வாங்கவேண்டுவது தான். கொஞ்சம் காப்பிகள்மட்டும் அச்சிட்டப்பட்டிருக்கிறத வேண்டுவோர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதி நேரிலும் வி. பி. மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

கலிக்கோ பயிண்டு விலை அணா 10

மார்பிள் பயிண்டு விலை அணா 8

நெல்லூர் ஜில்லா அரசாட்சி செய்த ஆரவல்லி சூரவல்லி

இங்ஙனம்,

மு. கிருஷ்ண பிள்ளை.

பி. நா. சி. ஏஜண்டு புக்ஷாப், மதுரை.